அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 09-04-1993

புதிய முகவரி
விடுதலைப்புலிகளின் பிரித்தானியக்கிளை
211, Katherine Road,
Eastham, London E6 1BU.
அலுவலக தொலைபேசி இல: 081 – 503 4294
081 – 470 8593
தமிழ் தொலைபேசிச் செய்தி இல: 081 – 503 4305
ஆங்கில தொலைபேசிச் செய்தி இல: 081 – 503 4307
Fax: 081- 470 8593

# புதுவருடத்துடன் பெருந்தாக்குதல் !

## புலிகளின் அமைதியழைப்பு புறக்கணிப்பு

* சிறீலங்கா பெரும் படைக்குவிப்பு
* விமானங்களைக்கொண்டு பீதியூட்டல்
* கிழக்கில் இராணுவத்தந்திரத்தில் மாற்றம்

சிறீலங்காவின் பௌத்த சிங் ... அரசு, தமிழ்ப் புது வருட ...லத்தில், யாழ் குடா நாட்டின் ... மீண்டும், பெருந்தாக்குதல் ...ன்றை தொடங்குவதற்கான ...முயற்சிகளில் இறங்கியுள்

...னையிறவு இராணுவ முகா ...லும், மாதகல், பண்டத்தரிப்பு பகுதிகளிலும் பெருந்தொகையில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். பலாலி, அநுராதபுரம், சீனன்குடா இராணுவத் தளங்களில் சீனாவின் சுப்பர் சொனிக் விமானங்களும், ஆர்ஜென்டீனாவின் புக்காரா விமானங்களும் எம்.ஐ. 8 ரக தாக்குதல் கெலிக்கொப்டர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடை, மன்னார் மாவட்டத்தின் பெருநிலப்பரப்பு, கிளிநொச்சி மாவட்டத்தின் கரடிப்போக்கு, உடையார்கட்டு, விசுவமடுப் பகுதிகள், வவுனியா மாவட்டத்தின் மாதர்பணிக்கர், மகிழங்குளம், ஈச்சங்குளம், பெரியபண்டிவிரிச்சான் பகுதிகள், மீது, சிறீலங்கா அரசு சுப்பர் சொனிக் விமானங்களைப் பயன்படுத்தி நடத்திய தாக்குதல்களில், மக்கள் இரைச்சல் சப்தத்தினால் பெரும் உளப்பாதிப்புகளுக்கு உள்ளாகியதாக தெரிய வருகிறது. அத்துடன் சுப்பர் சொனிக் விமானங்கள் நடத்திய இத்தாக்குதல்களில், கண் இமைப்பதற்குள், கட்டிடங்கள் தூள் தூளானதாகவும், 15 அடி முதல் 20 அடி ஆழமான கிடங்குகளை ஏற்படுத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரையாலும், கடலாலும் தமிழீழ மக்களை அடிமைப்படுத்த முடியாத சிறீலங்கா அரசு, விமானப்படை கொண்டாவது வென்றிட வேண்டுமெனப் பகல் கனவு காண்கிறது. இந்த சுப்பர் சொனிக் தாக்குதல் களின் போது ஐந்துக்கு மேற்பட்ட பொது மக்கள் இறந்தும், முப்பதிற்கும் அதிகமான

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



# ஆழமான புரிந்துணர்வின் அடிப்படையில் ஆண் – பெண் சமத்துவம் மலர வேண்டும்

**– தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் அறைகூவல்**

**மார்ச் 8ம் திகதி அன்று அனைத்துலக மகளிர் நாளை முன்னிட்டும், அந்நாளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பினால் நடாத்தப்பட்ட எழுச்சி விழாவினை வாழ்த்தியும், தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுத்த செய்தி.**

இன்று அனைத்துலக மகளிர் தினம். உலகப் பெண்ணினத்தின் எழுச்சி தினமாகிய இப்புரட்சி நாள் தமிழீழமெங்கும் கொண்டாடப்படுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

எமது சமூகம் மாறிக் கொண்டிருக்கிறது. விடுதலைப் போராக வீசிக் கொண்டிருக்கும் வரலாற்றுப்புயல், எமது மண்ணில் காலங்காலமாக நிலைத்திருந்த பழைமைவாத விருட்சங்களை வேரோடு பிடுங்கி வீழ்த்திவருகின்றது. எமது மனக்குகையில் குடியிருந்த மூட நம்பிக்கைப் பேய்கள் விரட்டப்பட்டு வருகின்றன. எமது சமூகக் கருத்துலகில் புதிய பார்வை மலர்கிறது. புதிய விழிப்புணர்வு தோன்றிவருகின்றது. சமூக உறவுகளில் புரட்சிகரமான மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

எமது போராட்டத்தினுள் ஒரு போராட்டமாக பெண் விடுதலைப்போர் இன்று முனைப்புற்று வருகின்றது. பெண்விடுதலை என்ற இலட்சியப் போராட்மானது, எமது விடுதலை இயக்கத்தின் மடியில் பிறந்த அக்கினிக் குழந்தை. அதன் வளர்ச்சியும், எழுச்சியும் ஒப்பில்லாத ஒரு தனிச்சரித்திர மண்ணின் விடிவிற்காகவும், பெண்ணின் விமோசனத்திற்காகவும் இன்று தமிழீழ புரட்சிப் பெண் புலியாக மாறிவிட்டாள். அநீதிக்கு எதிரான ஆவேச நெருப்பாக அவள் இன்று ஆயுதமேந்தி நிற்கின்றாள். இந்த வரலாற்றுத் திருப்பத்திற்கு எமது இயக்கமே வழி சமைத்துக் கொடுத்தது.

சமத்துவத்தை நோக்கிய பயணமாக பெண் உரிமைப் போராட்டம் தொடர்கிறது. பாலியல் வேறுபாட்டின் அடிப்படையில் சமத்துவமற்ற சமூக உறவுகள் உருவாக்கம் பெற்றுள்ளன. எல்லாக் காலங்களிலும், எல்லாச் சமூகங்களிலும், எல்லாப் பண்பாட்டு வடிவங்களிலும் இந்த சமத்துவமற்ற மனித உறவு நிலவி வருகின்றது. பெண்ணை தாழ்ந்த நிலைக்குத் தள்ளிவிட்டு இருக்கும் இந்த சமூக அநீதியை எதிர்த்து இன்று உலகப் பெண்ணினம் போர்க்கொடி உயர்த்தி நிற்கிறது.

பால்ரீதியான உடற்கூற்று வேறுபாடென்பது இயற்கையின் திருவிளையாடலாக, இனவிருத்திக்கு அளிக்கப்பட்ட கொடை. உயிர்ப்படைப்பிற்காகச் சிருஸ்டிக்கப்பட்ட உடற்கூற்றின் அடிப்படையில் ஆணையும், பெண்ணையும் வேறுபடுத்தி,. சமத்துவமற்ற உறவுகளைச் சமூகம் பின்னி விட்டிருக்கிறது. பாலியல் வேறுபாடும், அதன் அடிப்படையில் தோன்றிய பண்பாட்டு நியமங்களும், அவை பெண்மீது பதித்துவிட்ட படிமங்களும், பார்வைகளும் ஆண்-பெண் சமத்துவத்திற்கு முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....



## உள்ளே....

1. தெரிவுக்குழுவின் அரசியல் போதனை – மு.திருநாவுக்கரசு
2. தளபதிகள் தமது வீரத்தை எம்மிடமே விட்டுச் செல்கின்றனர்
3. புதிய உலக ஒழுங்கமைப்பும் ஐ.நாவின் தலையீடுகளும் – பாலகுமாரன்
4. நினைவில் ஓர் நினைவு – சி.யாவரசன்
5. விழுதுகள் – மேஜர் மணி
6. சிறுகதை – நிவாரணம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

## 'தமிழீழம்' என்ற தனியரசுக் கோரிக்கை ஒரு வரலாற்று பிறப்பு

'தமிழீழம்' என்ற தனியரசுக் கோரிக்கை -இலங்கைத் தீவில் - ஒரே இரவில் நடந்தேறிய ஒரு அரசியல் நாடகம் அல்ல.

நீண்ட பல வருடங்களாக பேரினவாத வெறிகொண்ட சிங்கள ஆட்சியாளர்களால், தமிழினம் அரசியல் -சமூக -பொருளாதார ரீதியாக ஒடுக்கப்பட்டு, பாரபட்சம் காட்டப்பட்டு வந்தது. ஆனாலும், இலங்கையரசின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பிற்குள் - காலத்திற்குக் காலம் பற்பல கோரிக்கைகளை முன்வைத்து இனப் பிரச்சனைக்கு சுமூகமாக தீர்வு காணவே தமிழினம் முயன்றது.

ஆனால், சிங்கள ஆட்சியாளர்களோ தமிழர்களின் சாதாரண அரசியல் கோரிக்கைகளுக்கு செவி மடுக்காததுடன், இன்னுமொருபடி மேலே சென்று, தமிழின விரோத சட்டங்களை இயற்றி, அவற்றை அரசியல் அமைப்புச் சட்டத்திலும் இணைத்து தமிழினத்தை மேலும் மேலும் அடக்க முயற்சி எடுத்தனர்.

மொழி, கல்வி, வேலை வாய்ப்பு, அபிவிருத்தி, காணிப்பகிர்வு போன்றவற்றில் தமிழ் மக்களுக்கு எதிராகக் காட்டப்படும் ஒடுக்கு முறைகளை நீக்கும்படி, தமிழினம் சிங்கள ஆட்சியாளர்களை வேண்டியது. வேண்டுகோள்கள் கருத்திலெடுக்கப்படாது போக, இலங்கை அரசின் சட்டதிட்டங்களுக்கு அமைய சிங்கள அரசுக்கு எதிராகப் போராடி, உரிமைகளைப் பெற தமிழினம் முயன்றது.

சாத்வீக வழிமுறைகளில் அமைதியாக நடந்த இந்த உரிமைப் போராட்டங்களின் காரணிகளையும், அதன் நியாயப்பாடுகளையும் சிங்கள அரசு தெரிந்துகொண்டும், அக்கோரிக்கைகளைக் கையிலெடுத்துப் பரிசீலிப்பதற்குப் பதிலாக, தனது படைப்பலத்தைக் கையிலெடுத்து வன்முறைமூலம் பதிலளித்து வந்தது.

மென்முறை வழியில் தமிழினம் உரிமை கேட்டதும், அதை வன்முறை கொண்டு சிங்கள ஆட்சியாளர்கள் அடக்குவதும், இலங்கை அரசியல் வரலாற்றில் தொடர்ந்தது.

நாட்கள் செல்லச் செல்ல, தமிழினத்தின் அரசியல், அபிலாசைகளை நசுக்குவதில் சிங்கள ஆட்சியாளர்கள் காட்டிய மூர்க்கத்தனம் -படிப்படியாக -தீவிரமாகி, ஒரு 'இனஅழிப்பு' வடிவத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

நிலம், மொழி, பொருளாதார வாழ்வு, பண்பாட்டு அம்சங்கள் என்று தமிழ்த் தேசியத்தின் தூண்களை இடித்துச் சிதைப்பதில், சிங்கள ஆட்சியாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் - வேறு வழிகளின்றி -தனது சொந்தப் பாதுகாப்பின் அவசியத்தை உணர்ந்து ஒரு சொந்த அரசு பற்றி எண்ணத் தொடங்கியது.
இதன் விளைவாக 'தமிழீழம்' என்ற தனியரசுக் கோரிக்கை வரலாற்றுப் பிறப்பெடுத்தது.
இவ்விதம் தமிழினம் விடுத்த சாதாரண -சிறிய -அரசியற் கோரிக்கைகளைச் சிங்கள ஆட்சியாளர்கள் நிறைவேற்ற மறுத்து, மேன்மேலும் தமிழினத்தின் மீது ஒடுக்குமுறைகளைப் பிரயோகித்த காரணத்தாலேயே -படிப்படியாக -தனியரசு என்ற ஒரு உயர்ந்த பட்சக் கோரிக்கைக்குத் தமிழினம் செல்ல வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தம் எழுந்தது.
ஆரம்பத்தில், தமிழீழக் கோரிக்கையானது வெறும் சுலோகமாகவே இருந்து வந்தது. தமிழினத்தின் ஏகோபித்த ஆதரவு அதற்கிருந்தும், அதற்கு ஒரு நடைமுறை வடிவம் கொடுக்கும் வல்லமை பழைய தலைமையிடம் இருக்கவில்லை.

தமிழினத்தின் தமிழீழக் கோரிக்கைக்கும், அதை நடைமுறைப்படுத்த வேண்டிய தலைமைக்கும் இடையே ஒரு பெரும் இடைவெளி இருந்தது.

புலிகள் இயக்கம் இந்த வரலாற்றுப் பொறுப்பை ஏற்று, இடைவெளியை நிரப்பி, தன்னாட்சி உரிமைக் கோரிக்கையின் அடிப்படையில் தமிழீழக் கோரிக்கைக்கு சரியானதொரு நடைமுறை வடிவம் கொடுத்தது.

ஆயுதப் போர் வழிமூலம் தமிழினத்தின் சுதந்திரப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆயுதப் போராட்ட வழியில் ஈடுபட்டிருந்த பொழுதிலும் அரசியல் தீர்வுக்கான கதவுகளை நாம் அடைக்கவில்லை.

தமிழினத்தின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு நியாயமான அரசியல் தீர்வை அடைவதற்கு, திம்புவிலிருந்து கொழும்பு வரை எம்மாலான முழுமுயற்சிகளையும் செய்திருந்தோம்.

சிங்கள அரசுடனான இந்தப் போர் தீவிரமடைந்த இன்றும்கூட அரசியல் தீர்வுக்கான கதவுகளை, அமைதிவழி மூலமான பாதைகளை நாம் மூடவில்லை. எமது இயக்கத்தின் இந்த அரசியல் நிலைப்பாட்டை பல சந்தர்ப்பங்களில் தலைவர் பிரபாகரன் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்.
உண்மை நிலை இப்படியிருக்க, சிங்கள அரசோ, 'தமிழீழம்' என்ற தனிநாட்டுக் கோரிக்கையில் புலிகள் பிடிவாதமாக இருந்து, மாற்று யோசனைகளைத் தெரிவிக்காது அரசியல் தீர்விற்கு முட்டுக்கட்டை போடுகின்றார்கள் என, புலிகள் இயக்கத்தை குற்றஞ்சாட்டி வந்தது.
தமிழினத்தின் தமிழீழக் கோரிக்கையானது சிங்கள ஆட்சியாளர்களுடன் பேசிப் பெறும் விடயமல்ல. அது இரத்தம் சிந்திப் போராடி எமது தாயகத்தை மீட்டு, சொந்த அரசொன்றை அமைப்பதாகும்.
ஆனால், ஒரு அரசியல் கோரிக்கை மூலம் இனப்பிரச்சனைக்கு சுமூகமான தீர்வு காண்பது என்பது அப்படியல்ல. அது பேச்சுவார்த்தைகளின் மூலம் இரு பகுதியினரும் ஒரு இணக்கத்திற்கு வருவதாகும்.
மீண்டும் இப்போது, தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை சிங்கள ஆட்சியாளர்களுக்கு தலைவர்'பிரபாகரன்' வழங்கியுள்ளார்.

அதாவது, "தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்கீகரிக்கப்பட்ட ஒரு சமஸ்டி அமைப்பைப் பரிசீலிக்கத் தயார்" எனத் தலைவர் அறிவித்துள்ளார்.

இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அறிவிப்பாகும்.

இந்த அறிவிப்பைச் சிங்கள ஆட்சியாளர்கள் சாதகமான முறையில் பரிசீலிக்க விரும்பாது, தட்டிக்கழிக்க முற்பட்டால் அது சிங்கள தேசம் செய்யும் ஒரு பெரும் வரலாற்றுத் தவறாகவே இருக்கும்.
அவ்விதம் தலைவரின் அறிவிப்பு நிராகரிக்கப்படுமானால் தமிழினத்திற்கு 'தமிழீழம்' என்ற தனிநாடுதான் இறுதியான -நிரந்தரத் தீர்வு என்பது, தவிர்க்கமுடியாத ஒரு வரலாற்றுத் தேவையாக எழும். ■

# கடலேரிப் போக்குவரத்து தடை
# பல்கலைக் கழக மாணவன் பலி
# உணவு மோசடி 16.5 கோடி ரூபா

சிறீலங்கா அரசின் கிளாலி கடலேரிப் போக்குவரத்துத் தடைக்கு பல்கலைக்கழக மாணவன் வில்சன் நிக்கலஸ் ஞானசூரியர் பலியானார். இம் மாணவர் "மகாபொல" புலமை பரிசிலைப் பெறவென வவுனியா செல்வதற்கு கிளாலி கடலேரியைக் கடக்கும் பொழுது கடற்படையினரின் தாக்குதலுக்கு பலியானார். இவருடன் பயணம் செய்த வேறு இரு மாணவர்களும் காயமுற்றனர்.

கிளாலி கடலேரி ஒன்றே யாழ் குடாநாட்டில் இருக்கும் மக்கள் வெளியுலகுடன் தொடர்பு கொள்வதற்கான ஒரே கதவாக உள்ளது. இதையும் கூட அனுமதிக்க விரும்பாத சிறீலங்கா அரசு இக்கடலேரியூடாக பயணம் செய்வதைத் தடை செய்து குடாநாடு மீது முற்று முழுதான போக்குவரத்து முற்றுகையை ஏற் படுத்தியுள்ளது.

ஆயினும், விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் பாதுகாப்புடன், மக்கள் தங்கள் அவசியத் தேவைகளுக்காக இக்கடலேரியூடாகவே பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர். சில வேளைகளில் கடற்புலிகளின் பாதுகாப்பின்றி மக்கள் பயணம் செய்ய நேருகையில், சிறிலங்கா கடற்படை அவர்களை இனஅழிப்புச் செய்து வருகின்றது. கடந்த வாரத்தில் மீண்டும், கிளாலி ஏரியூடாக பயணம் செய்யக்கூடாது, மீறிப்பயணம் செய்தால் சுடுவோமென சிறிலங்கா கடற்படை துண்டுப்பிரசுரங்களை விமானத்தி லிருந்து வீசி மக்களைப் பயமுறுத்தியுள்ளது. இவ்வாறாக குடா நாட்டின் மீது நெருக்கத்தை ஏற்படுத்தும் சிறீலங்கா அரசு, புலிகள் போக்குவரத்தைத் தடை செய்வதாகவும், உணவு லொறிகளை கடத்துவதாகவும் அப்பட்டமான பொய்ப் பிரச்சாரம் செய்கிறது.

இதற்கிடை வடபகுதிக்கு அனுப்பிய உணவில் 16 1/2 கோடி ரூபா பெறுமதியான உணவு சிறீலங்கா அரசாங்கத்தின் அரச ஊழியர்களாலேயே மோசடி செய்யப்பட்டுள்ளதென சிறீலங்கா அரசின் அமைச்சரவையே ஏற்றுக்கொண்டுள்ளது. ஆயினும் இம்மோசடி தொடர்பாக எவரும் இதுவரை கைது செய்யப்படவுமில்லை, தண்டிக்கப்படவுமில்லை. ■

# முஸ்லீம் மக்களின் அரசியல் அநாதை நிலையை மாற்றிய "பிரபா" வின் பேட்டி

"வடக்கு, கிழக்குப் பிரிவுக்கு முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவு வழங்கியிருப்பது, தமிழ் மக்களது உரிமைகளுக்கு எதிரான செயல் மாத்திரம் அல்ல. கூடவே தனது சொந்தச் சமூகத்தின் உரிமைகளுக்கும் எதிரான செயல்தான். வடக்கு-கிழக்குப் பிரிவுக்கு ஆதரவு வழங்கியிருப்பதன் மூலம் காங்கிரஸ் அங்கு வாழும் தமிழ் மக்களையும், முஸ்லீம் மக்களையும், நிரந்தரப் பகையாளிகளாக்கும் நிலைக்கு இட்டுச் சென்றிருக்கின்றது". என முஸ்லீம் எழுத்தாளரான எம். எச். முனீர் வடக்கு-கிழக்குப் பிரிவுக்கு முஸ்லீம் காங்கிரஸ் ஆதரவு அளித்தமைக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்கிடை, கொழும்புச் செய்திகளின்படி பெரும் தொகையான முஸ்லீம் காங்கிரசினர், முஸ்லீம் காங்கிரசிலிருந்து விலகி ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளதாக தெரியவருகின்றது. இது சந்தர்ப்பவாத முஸ்லீம் தலைவர்கள் ஐக்கிய தேசிய கட்சியின் கொள்கைகளுக்கு மறுவடிவு கொடுப்பதற்கே முஸ்லீ ம் காங்கிரஸ் என்னும் அமைப்பாக செயற்படுகின்றனரோ என்ற ஐயத்தை ஏற்ப்படுத்தியுள்ளது.

இவ்வாறே முன்பு பதியுதீன் முகமது சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் காலத்தில், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு மறுவடிவு கொடுத்து வந்தார்.

இவ்வாறு, காலத்துக்கு காலம் முஸ்லீம் தலைவர்கள், தமது சுயலாபங்களுக்காக, முஸ்லீம் மக்களை பலியிட்டு வருவதால், முஸ்லீம்கள் தனித்துவப் பண்பாடுடைய இனக்குழு என்ற நிலைமாறி, முஸ்லீம்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்தினால் ஒடுக்கப்படும் தன்மை வலுப்பெற்று வருகின்றது. இவ்வாறு, வாக்குப்பலத்துக்கு மட்டும் முஸ்லீம் மக்களைப் பயன்படுத்தி, தமது சுயலாபங்களைப் பெறும் முஸ்லீம் தலைவர்கள், காலத்துக்கு காலம் தமது சுயதேவைகள் பூர்த்தியானதும் சிங்கள அமைப்புக்களுள் சங்கமமாகி வருவது இலங்கையின் நடைமுறை வரலாறு. இதனால் முஸ்லீம்கள் அரசியல் அனாதைகளாகி, தாம் இணைந்து வாழவேண்டிய தமிழர்களிடம் இருந்தும் தனிமைப் படுத்தப்பட்டு வருகின்றனர்.
இந்நிலையில், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பி.-பி. சி க்கு அளித்த பேட்டியில் " முஸ்லீம் மக்கள் தனித்துவ. பண்பாடுடைய ஓர் இனக்குழு என்ற வகையில் அவர்களது பிரச்சனை அணுகப்படவேண்டும். முஸ்லீம் மக்களின் தனித்துவ நிலை, உரிமைப்பாடு பேணப்படும் அதே வேளை, அவர்கள் தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து வாழ்வதே அவர்களது சமூக, அரசியல் ,பொருளாதார வாழ்வைச் சிறப்பிக்கும்" என கொடுத்துள்ள விளக்கம், இதுவரை முஸ்லீம்களுக்கு இருந்து வந்த அரசியல் அனாதை நிலையை மாற்றியுள்ளது. இதனை உணர்ந்து முஸ்லீம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டிய காலம் இது. முஸ்லீம் மக்கள் இந்த அரசியல் யதார்த்ததை உணர்ந்து தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று தமது தனித்துவப் பண்பாடுடைய இனக்குழுத் தன்மையைப் பேணவேண்டும். ■

# வடபுலம் செல்ல செய்தியாளருக்குத் தடை

சென்ற வாரம் வடபுலம் செல்ல முயன்ற சர்வதேச செய்தியாளர்களை வவுனியாவில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினர் திருப்பி அனுப்பியுள்ளனர். BBC க்கு கடந்த மாதம் எமது தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் செவ்வி ஒன்றை அளித்திருந்தார். இதைத்தொடர்ந்து அவருக்கும் ,சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கும் இடையே தொடர்புகள் ஏற் படாதவாறு பார்க்க சிறிலங்கா அரசு முடிவு செய்துள்ளது.

இதன் பிரதிபலிப்பே வவுனியா வரைச் சென்ற BBC யின் கொழும்பு முகவரும், டென்மார்க் தொலைக்காட்சி குழுவினரும் திருப்பி அனுப்பப்பட்ட நடவடிக்கையாகும்.

சிறிலங்கா அரசின் விமானங்கள் தமிழர் குடியிருப்புக்களின் மேல் குண்டு மழை பொழிகின்றன. அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று சிறிலங்கா அரசு மறுத்து வருகின்றது. எந்தவித தொலை தொடர்பு வசதிகளும் வடபுலத்தில் இல்லாத நிலையில் செய்தியாளர்களால் அங்கு நேராக செல்வதன் மூலம் தான் உண்மை நிலவரத்தை அறிய முடியும். எனவே இப்போது சிறிலங்கா அரசு கூறுபவற்றை சரியா, பிழையா என்று அறியக் கூடிய வழிகள் மறுக்கப்பட்டுள்ளது.

"வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணப்பகுதி செல்ல பொதுமக்களையும், உதவி நிறுவனங்களையும் அனுமதித்த இராணுவத்தினர் எங்களைப் போகவிடாது தடுத்தனர். ஏனென்று கேட்டதற்கு அங்கே சண்டைகள் நடைபெறுகின்றன, பாதுகாப்பு இல்லை எனறு கூறினர். ஆனால் மூன்று நாட்களாக அங்கு எதுவித மோதலும் இடம் பெறவில்லை என்று இராணுவ வீரர்களே எம்மிடம் தெரிவித்தனர்.

தொடர்ச்சி 7ம் பக்கம் ....

# தளபதிகள் தமது வீரத்தை எம்மிடமே விட்டுச் செல்கின்றனர்

**— விசேட தளபதி தமிழ்ச் செல்வன்**

"எமது தளபதிகள் எம்மை விட்டுப் போகும்போது அவர்களுடைய வீரத்தையும், உறுதியையும், போராட்ட உத்வேகத்தையும் விட்டுவிட்டுத்தான் செல்கின்றார்கள். அதனை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் நினைக்கின்ற மாதிரி எமது போராட்டம் இல்லை." இவ்வாறு யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச் செல்வன் தெரிவித்தார்.

மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து மாவீரர்களுக்கு மரியாதை செலுத்தவென தீருவிலில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெற்ற இக்கண்டனப் பொதுக் கூட்டத்தில் கவிஞர் மு. வெ. யோ. வாஞ்சிநாதன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்தியாகம், யாழ் மாவட்ட விசேட தளபதி தமிழ்ச் செல்வன், விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே. பாலகுமார், விடுதலைப் புலிகள் மகளிர் அணி துணைப் பொறுப்பாளர் ரதி, கலை பண்பாட்டு கழக துணைப் பொறுப்பாளர் தேவர் அண்ணா, விடுதலைப் புலிகளின் பிரமுகர் யோகரட்ணம் யோகி, தமிழீழ கடற்புலிகளின் விசேட தளபதி தூசை, விடுதலைப் புலிகள் பிரமுகர் பரா, மட்டு -அம்பாறை மாவட்ட விசேட தளபதி கருணா, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர்.

"கேணல் கிட்டுவின் மரணம் என்பது ஒரு சர்வதேசப் பரிமாணம் பெற்ற ஒரு விடயமாக மாறிவிட்டது. உலகெங்கும் உள்ள ஆர்வமுள்ள மக்கள் கேணல் கிட்டுவுக்கு என்ன நடந்தது? என்ன பிரச்சனை? எந்த வடிவத்தில் நடக்கிறது? என்பன குறித்து அவதானமாக வினாக்களை துருவித் துருவிக் கேட்க முயல்கின்றனர். அவருடைய மரணம் சர்வதேசத்தில் ஒரு புதிய பரிமாணத்தை கொண்டதாக அமையப் போகிறது." என விடுதலைப் புலிகளின் பிரமுகர் வே. பாலகுமார் அங்கு உரையாற்றும்போது தெரிவித்தார்.

"எமது மூத்த தளபதியின் வீரச்சாவு நிகழ்வு எமது இரத்தத்தில் உறைந்த நிகழ்வாக இருக்கிறது. முற்றிலும் வேறுபட்ட நிகழ்வு தான் இது. இந்த மாவீரர்களை சண்டையிலே இழந்திருந்தால் நாம் கலங்கியிருக்க மாட்டோம். ஆனால் இந்தியாவின் வஞ்சகத் தீயிலே இவர்களை இழந்தமையால் எமது உள்ளங்கள் கொந்தளிக்கின்றன" என விடுதலைப் புலிகளின் மகளிர் அணி துணைப் பொறுப்பாளர் ரதி உரையாற்றும்போது தெரிவித்தார்.

"பாரதம் மீண்டும் பாதகம் செய்து விட்டது. இந்த மண்ணிலே தமிழீழ விடுதலைப் போராட்டம் தலையெடுத்த போது விடுதலைப் போராட்டத்திற்கு உதவுகிறோம் என்ற பேரில் துரோகக் கும்பல்களை பலவற்றை அனுப்பி பயிற்சி கொடுத்தது பாரதம். அமைதிப் படை என்ற பேரில் எமது மண்ணிலே தனது வல்லாதிக்க பாதங்களை பதித்துக்கொண்டது. திலீபன் உண்ணாவிரதமிருந்த போது வேண்டுமென்றே திலீபனைச் சாகடித்தது பாரதம். எமது மூத்த தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவர் மரணத்திற்கு காரணமாக இருந்தது பாரதம். தளபதி ஜொனியை காணகத்தில் வைத்து நயவஞ்சமாக கொன்றது பாரதம். எமது போராளிகளின் தீர மிகு போராட்டத்தின் முன்னால் தோற்று ஓடிய பாரதம் சந்தர்ப்பம் பார்த்து இன்று சதி செய்து விட்டது." இவ்வாறு விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா தெரிவித்தார்.

"இந்த மண்ணிற்கு மிகப் பெரிய துரோகத்தைச் செய்த இராமர்கள் மிகப் பெரிய கோழைகள். கடற்பரப்பிலே தன்னந்தனியாக நின்ற கிட்டண்ணாவை சுற்றி வளைத்தபோது என்ன நினைத்திருப்பார். கோழைகள் என்று எண்ணிச் சிரித்திருப்பார்" என இங்கு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் பிரமுகர் யோகி அவர்கள் தெரிவித்தார்.

"இந்தியாவின் அச்சுறுத்தலுக்காக இந்தக் கடற்பிரதியத்தில் எமது நடவடிக்கையை கைவிட முடியாது. ஏனெனில் இந்தக் கடற்பரப்பின் தேவை எமக்கு உள்ளது. விரைவில் இந்தக் கடற்பரப்பில் இந்தியாவின் வல்லாதிக்கத்தை உடைத்தெறிவோம்" என கடற்புலிகளின் விசேட தளபதி தூசை அவர்கள் தெரிவித்தார்.

"எமது போராட்டத்தை விரைவில் முடிவிற்கு கொண்டு வர வேண்டிய சூழ் நிலை எங்கள் அனைவருக்கும் இருக்கிறது. கடந்த வருடம் சிறிலங்கா படையினர் பாரிய இழப்புக்களை சந்தித்த நிலையில் மன நிலை குழம்பிய நிலையில் சிறிலங்கா அரசின் கூலிப் பட்டாளங்கள் படைமுகாம்களில் இருந்து ஓடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களைத் தடுக்க அரசாங்கம் எவ்வளவோ முயற்சிகளை செய்து கொண்டு இருக்கிறது. தற்போதைய சூழ் நிலையில் எமது தளபதியின் இழப்பைக் கண்டு சோர்ந்துவிடாமல் எதிரியின் மன நிலையைப் புரிந்து கொண்டு தலைவரின் வழிகாட்டலில் தீவிரமாகப் போராட வேண்டும்" என மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் விசேட தளபதி கருணா தெரிவித்தார். ■

## சுதந்திரத்தைப் பெறுவதற்கு ஒன்றிணைந்து போராடுவோம்

**■ பிரிவுபசார விழாவில் ஆயர் மக்களுக்கு அழைப்பு**

"நாங்கள் தமிழ் மக்கள். சுதந்திரம் பெற வேண்டுமானால் அதற்காக ஒன்றிணைந்து போராட வேண்டும்."

இவ்வாறு தெரிவித்தார், ஓய்வு பெற்றுச் செல்லும் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் ஆயர் அதி. வண. டி. ஜே. அம்பலவாணர் அவர்கள்.

ஆயரின் சேவை நலனைப் பாராட்டி யாழ்ப்பாணக் கல்லூரிப் பூங்காவில் நடைபெற்ற பிரியாவிடை நிகழ்ச்சியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவ் வைபவத்தில் ஆயர் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்கள் பலர், எமது பிரச்சனைகளைச் சரிவர உணர்ந்து கொள்வதில்லை. பறங்கியர் இனம் போல, மலை வாழ் இனம் போல அவர்கள் எங்களை யோசிக்கின்றார்கள்.

ஆனால் இலங்கையில் சிங்களவர், தமிழர் ஆகிய இரண்டு தேசிய இனங்கள் உள்ளன என்பதை அவர்கள் மறந்துவிடுகின்றார்கள். இந்தப் பிரச்சனையை எம்மவர்கள் சரியாக உணர்ந்து கொண்டால்தான் எமக்கு விடிவு கிடைக்க முடியும்.

சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே எமது இன்றைய தலையாய பிரச்சனையாகும். அதனையடைய நாம் அனைவரும் ஒத்துழைத்து -ஒன்றிணைந்து -போராட வேண்டும். நீதிக்காகப் போராடும்போது ஐக்கியம் அவசியம். "நான்தான் " என்ற எண்ணத்தை நீக்கி "நாம்" என்ற நிலைக்கு வரவேண்டும். ■

## விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அனைத்துலக மகளிர்தின போட்டி முடிவுகள்

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் அனைத்துலக பெண்கள் நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதை, சிறுகதை, ஓவியம் ஆகிய துறை சார்ந்த போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

**கவிதை**

*. முதலாம் இடம்:- ம. பிரவீனன், மகாஜனாக் கல்லூரி
*. இரண்டாம் இடம்:- ஆதிலட்சுமி சிவகுமார், காங்கேசன் துறை வீதி, இணுவில்
*. மூன்றாம் இடம்:- வே. யோகீஸ்வரன், 912 மாவடி வீதி, யாழ்ப்பாணம்
*. பாராட்டுக்குரியவர்கள்:-முருகுரத்தினம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி; மிர்ணாளினி ஜீவேச்வரா -சுழிபுரம் மத்தி, சுழிபுரம்.

**சிறுகதை**

*. முதலாம் இடம்:- க. சிவராஜா, விழிசிட்டி, தெல்லிப் பளை
*. இரண்டாம் இடம்:- ந. கண்ணன், ராஜி வீதி உடுப்பிட்டி.
*. மூன்றாம் இடம்:- கு. பிரியதர்சினி, செஞ்சோலை மகளிர் பாடசாலை .
*. பாராட்டுக்குரியவர்கள்:-வேணி சின்னத்தம்பி -வினோத் வீதி மட்டுவில் வடக்கு; செ. பொ. சிவனேசு -சசிகுமார் வீதி கோண்டாவில் மேற்கு.

**ஓவியம்**

**கீழ்ப்பிரிவு**

*. முதலாம் இடம்:- சரன் சோபனா . ஜேசுதாசன். -யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடம்.
*. இரண்டாம் இடம்:- கௌரி, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.
*. மூன்றாம் இடம்:- செந்தில் குமரன் -சாவச்சேரி இந்துக் கல்லூரி.
*. பாராட்டுக்குரியவர்கள்:- தர்சினி சிவலிங்கம் -அரசடி வீதி, நல்லூர்; றஜனி பத்மநாதன் -பிரம்படி லேன் , கொக்குவில்.

**மத்திய பிரிவு**

*. முதலாம் இடம்:- நா. ரூபன் -சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
*. இரண்டாம் இடம்:- மதன் குமார் -யாழ் சம்பத்திரிசியார் கல்லூரி
*. மூன்றாம் இடம்:- பூவிழி

**மேற்பிரிவு**

*. முதலாம் இடம்:- செல்வி சி. நர்மதா -மண்டை தீவு மகா வித்தியாலயம்.
*. இரண்டாம் இடம்:- மு. ஜக்குலின் ஊர்காவற்றுறை கொத்தணி .
*. மூன்றாம் இடம்:- திருமதி த. இராசலிங்கம், வேலணைக் கோட்டம்.
*. பாராட்டுக்குரியவர்:- ராதாகிருஸ்ணன் -இருபாலை. ■

## சுதந்திரத்திற்காக மாணவர் கிளர்ந்தெழ வேண்டும்

**■ துணைவேந்தர் துரைராஜா**

அனர்த்தங்களுக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ந்தெழ வேண்டும். பல்வேறு நாடுகளிலும் ஒடுக்குமுறைக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் கிளர்ந்தெழுந்து போராடியுள்ளனர்.

இவ்வாறு அண்மையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற "விடியலைத் தேடும் பறவைகள்" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக மாணவ ஒன்றியத் தலைவர் திரு. சந்திரசேகரர் தலைமையில் நடைபெற்ற மேற்படி வெளியீட்டு விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்: எந்தவொரு மனிதனும் அனர்த்தங்கள் விளையும்போது அதற்கு எதிராக செயற்படுவது வழக்கம். அந்த உணர்விலேயே கிளர்ந்தெழுந்து அதற்காகப் போராட வேண்டிய அவசியம் தமிழ் மக்களுக்கு உண்டு.

தமிழினம் ஒரு தனித்துவமான, சுதந்திரமான இனமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பதற்கு தமிழ்ப் பொருளாதாரத்தை விருத்தி செய்து சொந்தக் காலில் நிற்க வேண்டும் எனவும் தெரிவித்தார். ■

## இன்னல்கள் மத்தியில் சிறப்பாக இயங்கிவரும் ஆயுள்வேத வைத்தியசாலை

கைதடி அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தனது சேவையை ஆற்றி வருகின்றது.

இவ்வைத்தியசாலை அண்மையில் யாழ் அரசாங்க அதிபர் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த மாதம் தொடக்கம் டாக்டர் உமாகாந்தன் முறிவு, நெறிவு வைத்திய அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஆரம்பத்தில் 80க்கும் மேல் ஊழியர்கள் பணிபுரிந்த இந்த வைத்தியசாலையில் தற்போது சுமார் 12 பேர் மட்டுமே பணிபுரிகின்றனர். ஆரம்பத்தில் 12 தாதிகள் கடமையாற்றினர். தற்போது ஒரேயொரு தாதி மட்டுமே கடமை புரிகின்றார்.

கடந்த அக்டோபர் மாதத்திலிருந்து இங்கு வேலை செய்யும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. இம்மருத்துவமனைப் பிரதம வைத்திய அதிகாரி நீரிறைக்கும் இயந்திரம் ஒன்றை பெற்றுத் தரும்படி பல சமூக சேவை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளார். எனினும் இதுவரை நீரிறைக்கும் இயந்திரம் கிடைக்கவில்லை. இவரது அயராத முயற்சியினாலேயே வைத்தியசாலை தொடர்ந்து இயங்குகின்றது. ■

# சிறுவர் போசாக்கின்மை கடும் பிரச்சினையாகிறது.

■ ஆய்வுக் குழு அறிக்கை

பள்ளிப் பருவத்திற்கு முந்திய வயதுள்ள பிள்ளைகளின் போசாக்கின்மை அவசர கவனத்திற்குரிய கடுமையான பெரும் பிரச்சினையாக யாழ்ப்பாணத்தில் உருவெடுத்துள்ளது.

யாழ்ப்பாண மக்களின் போசாக்கு நிலைமை பற்றி ஆய்வுசெய்வதற்கு யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களால் நியமிக்கப்பட்ட தெரிவுக்குழு அதன் அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது. பின் வரும் காரணங்களால் மக்கள் மத்தியில் போசாக்கின்மை நிலைமை ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

* வேலையின்மை, குறைந்த ஊழியத்துடனான வேலை இடம் பெயர்தல் ஆகியவற்றால் மக்களின் வருமானம் குறைந்துள்ளது அல்லது வருமானமே இல்லாமல் போயுள்ளது. இதனால் போதிய சத்துள்ள உணவை அவர்கள் சாப்பிட முடியாமல் இருக்கிறது.

* அரசு வழங்கும் இலவச விவசாயம் உலர் உணவு, மக்கள் உயிர் வாழ்தலுக்கு க்குப் போதியதாக இல்லை. உணவுப் பற்றாக்குறை இதை மேலும் மோசமாக்குகின்றது.

* வீடுவாசல் அழிக்கப்பட்டதாலும், பய மனோ நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஆடு, கோழி வளர்ப்பு ஆகியவற்றில் ஈடுபட மக்கள் பின் நிற்கின்றார்கள்.

* மீன் பிடித்தொழில், விவசாயம் ஆகியன தேக்க நிலையில் அல்லது மிகக் குறைந்தபட்ச நிலையில் உள்ளன. இதனால் மக்கள் மேலும் நிவாரணங்களைச் சார்ந்து வாழ வேண்டியுள்ளது.

* மலசல கூடங்கள் சேதம் அடைந்து பாவிக்க முடியாமல் இருப்பதும் மக்களின் ஆரோக்கிய நிலையை பாதித்துள்ளது. 1990 முதல் சுகாதாரச் சேவைப் பொறுப்பாளரின் மலசல கூட மானியத்திட்டம் யாழ்ப்பாணத்தில் அமுலாகவில்லை, இதனால் மண் மாசுபட்டு புழுக்களும், கிருமிகளும் மலிந்து வயிற்று நோய்கள் அதிகரித்துள்ள ஒரு நச்சுத்தனமான நோய் வட்டமே உருவாகியுள்ளது.

போசாக்கு நிலை குறித்து ஆராய்ந்த தெரிவுக்குழுவில் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த சிரேஸ்ட விரிவுரையாளர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் திட்டமிடல் அதிகாரிகளும் அங்கம் வகித்தனர். ■

# அரச சுற்று நிருபங்களில் தமிழ் மொழி புறக்கணிப்பு

சிறீலங்கா அரசாங்கத்தால் வெளியிடப்பட்டு வரும் பெரும்பாலான அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களின் சுற்றுநிருபங்களில் தமிழ் மொழி புறக்கணிப்பு கூடுதலாக இடம்பெற்று தனிச்சிங்களத்தில் மட்டும் சுற்று நிருபங்கள், கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

தமிழ் மொழியின் பெருமைக்காக குரல் எழுப்பி வரும் அரசியல்வாதி ஒருவரின் அமைச்சில் தமிழ்மொழி புறக்கணிப்பு இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.
இவரின் அமைச்சிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் யாவும் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்களுக்கு தமிழ் மொழிபெயர்ப்பின்றி தனிச் சிங்களத்தில் சுற்றுநிருபங்கள், கடிதங்கள் தொடர்ச்சியாக கொழும்புத் தலைமைச் செயலகங்களில் இருந்து அனுப்பி வருவதாகப் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது. ■

வவுனியாவில் சிங்களக் குடியேற்றம்

# 10 கோடி ரூபா செலவில் ஆயிரம் வீடுகள் கட்ட முடிவு

வவுனியா மாவட்டத்தில் துரிதமாகச் சிங்களக் குடியேற்றங்களைச் செய்து வரும் சிறிலங்கா அரசு அதன் ஒரு கட்டமாக, அங்கு பத்துக் கோடி ரூபா செலவில் அகதிகளுக்காக ஆயிரம் வீடுகளைக் கட்டவுள்ளதாக அறிவித்திருக்கின்றது.

மாரம்பைக்குளம், வீரகுளம், முதலியார் குளம், தாண்டிக்குளம் ஆகிய இடங்களில் இவ் வீடுகள் கட்டப்படவுள்ளன. ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் வீடமைப்பு நிர்மாண அமைச்சு இத் திட்டத்தைச் செயற்படுத்தவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ■

# ஆறாவது கண் மாற்றுச் சிகிச்சை

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஆறாவது தடவையாக கண் மாற்றுச் சிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டது.
தொல் புரத்தைச் சேர்ந்த மருதன் செல்லன் என்ற எழுபது வயதானவருக்கே நேற்று கண் மாற்றுச் சிகிச்சை செய்யப்பட்டது.

விறகு கட்டை கண்ணில் அடித்ததால் நீண்டகாலமாக கண் பார்வை பாதிப்புற்றிருந்த அவருக்கு முன்னர் செய்த சிகிச்சையால் கண்ணில் "அல்சர்" நிலையும் ஏற்பட்டிருந்தது.

கண்மாற்று சிகிச்சை செய்யப்பட்டதால் கண் அல்சரையும் நீக்க முடிந்ததாக சத்திர சிகிச்சை மேற்கொண்ட டாக்டர் குகதாசன் தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் இறந்த ஒரு நோயாளியின் கண்ணே மருதர் செல்லனுக்கு மாற்றப்பட்டது. ■

# அகதிமுகாம்களில் ஆய்வு

யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினர் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுசரணையுடன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று சுகாதாரம், போசாக்கு பற்றி ஆய்வு நடாத்தியுள்ளனர்.

யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த 24 மாணவ, மாணவிகள் இந்த ஆய்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

# பாசிப்பயறுச் செய்கை

தற்போதைய பொருளாதாரத் தடையினால் ஏற்பட்டுள்ள உணவுத் தட்டுப்பாட்டை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக இரண்டு மாத காலத்திற்குள் நல்ல விளைவினைத் தரக்கூடிய பாசிப்பயறுச் செய்கையில் சகல மக்களையும் ஈடுபடும்படி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

உள்ளூர் இனங்களிலும் ரி77, எம். ஐ. 4 ஆகிய இனங்கள் பெரிய பயறாக இருப்பதோடு மட்டுமல்லாது உச்ச விளைவினையும் தரக்கூடியதாக உள்ளது என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் விவசாயப் பகுதி பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இது சம்பந்தமான மேலதிக விபரங்களை மேற்படி. கழகம் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றது. ■

# மட்டு. ஆடை தொழிற்சாலை அரசின் கபட நாடகம்

■ கிழக்கு தமிழர் ஒன்றியம் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான தொழில்களில் தமிழ் மக்கள் ஈடுபடுவதற்கு பாதுகாப்பற்ற ஒரு நிலையை தோற்றுவித்துள்ள சிங்கள அரசு, ஆடைத் தொழிற்சாலை நிறுவுதல் மூலமாக தமிழ் மக்களிற்கு வேலை வாய்ப்பு வழங்குவதாக கூறுவது எவ்வளவு வேடிக்கையானதாகவுள்ளது.

இவ்வாறு கிழக்கு தமிழர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

தமிழர்களின் நலனுக்காகவே மட்டக்களப்பில் ஆடைத் தொழிற்சாலை நிறுவப்படுகின்றது. இதனால் தமிழ் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர் என்றும் சிங்கள அரசு தெரிவிக்கின்றது.

ஆனால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் பிரதான தொழிலாகிய விவசாயம் சீர்குலைக்கப்படுகின்றது. நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள ஏழை விவசாயத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர், அறுவடைக்குச் செல்லும் தொழிலாளர்கள் தாக்கப்படுகின்றனர். வயலில் வைக்கப்படும் நெற்சூடுகள் சிங்கள ராணுவத்தால் எரியூட்டப்படுகின்றன. வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்ற நெல்மூடைகள் சிங்கள ராணுவத்தால் சூறையாடப்படுகின்றது.

அரைவாசிக்கு மேற்பட்ட விவசாய நிலங்கள் பாதுகாப்பின்மை காரணமாக தரிசாகிக்கிடக்கின்றன.
மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழிலெல்லைகள் மட்டுப்படுத்தப்படுகின்றன, தொழிலில் ஈடுபடுபவர்கள் சிங்கள ராணுவத்தால் கைது செய்யப்படுவது, காணாமல் போவதும், கொடூரமான முறையில் கொலைசெய்யப்படுவதும் வழக்கமாக நடைபெறுகின்றன.

மாவட்டத்தின் பிரதான தொழில்களில் தமிழ் மக்கள் ஈடுபடுவதற்கு பாதுகாப்பற்ற ஒரு நிலையை தோற்றுவித்துள்ள சிங்கள அரசு, ஆடைத்தொழிற்சாலை நிறுவுதல் மூலமாக தமிழ்மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதாகக் கூறுவது எவ்வளவு வேடிக்கையானதாகவுள்ளது.

ஆடைத் தொழிற்சாலை நிறுவுதன் மூலம் சுமூகமான சூழ்நிலை தோற்றுவிக்கப் பட்டுள்ளதாக வெளியுலகத்திற்கு தெரியப்படுத்தவே இந்த முயற்சியில் சிங்கள அரசு ஈடுபடுகின்றது.

மாவட்டத்திலுள்ள கிராமப்பகுதிகளில் ஒவ்வொருநாளும் தமிழ்த் தொழிலாளர்கள் தாக்கப்பட்டும், கொல்லப்பட்டும் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது , நகரில் மாத்திரம் ஒரு ஆடைத்தொழிற்சாலையை அமைத்து கிழக்கு தமிழ் மக்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்குவது பற்றி சிங்கள அரசு பேசுவது அரசின் கபடத்தன்மையை எமக்கு உணர்த்துகின்றது என்பதை தெளிவுபடுத்துகின்றோம். ■

# கண்கட்டப்பட்ட நிலையில் 24 மணி நேரம் இருந்தேன்

■ விடுவிக்கப்பட்ட மாணவன் தகவல்

பலாலி சிறீலங்கா இராணுவ முகாமில் இருபத்திநான்கு மணித்தியாலங்கள் எனது இரண்டு கண்களும் கட்டப்பட்ட நிலையில் தடுத்து வைக்கப்பட்டு சித்திர வதைக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டேன்.

இவ்வாறு அண்மையில் விறகு தேடச் சென்றபோது சுளிபுரம் பறாளாய்ப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மூன்று நாட்கள் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட சின்னக்கிளி அரியபுத்திரன் (வயது 13) என்ற மாணவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போது:-நான் காரைநகரை வசிப்பிடமாகக் கொண்டிருந்தேன். எனது பெற்றோருடன் சுளிபுரம் பகுதியில் அகதிகளாக இருந்து வந்தேன்.

வீட்டுச் சமையல் தேவைக்கு விறகு தேவைப்பட்டதால் சின்னவன் ஐயன் என்பவருடன் பறாளாய் பகுதிக்கு விறகு தேடச் சென்ற வேளையில் அங்கு எமக்குத் தெரியாமல் பற்றைக்குள் மறைந்திருந்த சிறீலங்கா இராணுவம் துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியில் எங்களைக் கைது செய்தது.

எம்மை இராணுவம் கைது செய்ததும் பலமாக கைகளாலும், கால்களாலும் தாக்கியது மட்டுமல்லாது கெட்ட வார்த்தைகளாலும் தூசித்தது. எம்மைக் கைது செய்த அன்று மாதகல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தோம்.

மறுநாள் கண்கட்டிய நிலையில் எங்கள் இருவரையும் வாகனம் ஒன்றில் ஏற்றி பலாலி இராணுவ முகாமிற்குக் கூட்டிச் சென்றனர்.

அங்கே ஒரு நாள் பூராவும் கண் கட்டப்பட்ட நிலையில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோது நான் அகதியாக வந்திருப்பதாகவும், சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் மாணவன் எனவும் தெரிவித்தேன். பின்னர் எங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தனர் என்றார். ■

# விவசாயிகளுக்கு வந்த டீசல் காங்கேசனில் தடுப்பு

கெயர் நிறுவனம் யாழ் விவசாயிகளுக்கென கப்பல் மூலம் அனுப்பி வைத்த உரவகைகள், மற்றும் டீசல் என்பன கடந்த 5 மாதங்களாக காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட மியூறியேற் ஒவ்பொட்டாஸ் மற்றும் 5 பரல் டீசல் ஆகியனவே தடுத்து வைக்கப்பட்டுள்ளன. ■

# தந்தை செல்வா பிறந்த நாள் நினைவு

தமிழர்களுக்கு உள்ள ஒரே ஒரு விமோசனம் தமிழீழம்தான் என்றுகூறி சரியான திசையில் காலடி எடுத்துவைத்த தந்தை செல்வாவின் 95வது பிறந்த தினம் மார்ச் மாதம் 31ம் திகதி தமிழீழத்தில் கொண்டாடப்பட்டது. அவரது 17வது நினைவு தினம் ஏப்ரல் மாதம் 21ம் திகதி வருகின்றது. சென்ற ஆண்டு தந்தை செல்வாவின் நினைவு தினத்தன்று யாழ் டச்சுக் கோட்டைக்கு அருகில் உள்ள அவரது சிலைக்கு மலர்கள் இட்டு விடுதலைப் புலிகள் அவருக்கு மரியாதை செலுத்தினர். அத்துடன் நல்லூர்க் கந்தசாமி கோவிலில் ஒரு ஞாபகார்த்தக் கூட்டத்தையும் நடத்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ■

## உள்நாட்டு விவகாரத்தில் ஐ.நா. தலையீடக்கூடாது

# மனித உரிமைகள் ஆணைக்குழுவை சிறீலங்கா அரசு பயமுறுத்தல்

"மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்பே இப்படிப் பேசுகிறார்கள். அங்கே சிறீலங்காவில் என்ன பேசுவார்கள் என்று எண்ணவே நடுங்குகிறது."

சிறீலங்கா அரசுப் பிரதிநிதியின் கூற்றுப்பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அரச சார்பற்ற சர்வதேச நிறுவனம் ஒன்று தெரிவித்திருந்த கருத்து இது.

சிறீலங்காவில் மனித உரிமைகளும், மனிதாபிமானச் சட்டங்களும் மீறப்படுவது பற்றி பல அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஐ. நா. மன்றத்தின் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையீடு செய்து இருந்தன.

தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளையும், அவர்கள் படும் துயரையும் எடுத்துக்கூறிய இந்த நிறுவனங்கள் தமிழர்களது பாரம்பரியத் தாயகத்தையும், அவர்களுக்குரிய சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவை வேண்டியிருந்தன.

அரசு சார்பற்ற சர்வதேச நிறுவனங்களின் அறிக்கைக்கு பதில் ஒன்றை சிறீலங்காவின் பிரதிநிதி அளித்திருந்தார்.

சிறீலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடவேண்டாம் என்று அவர் சர்வதேச சமூகத்தை பகிரங்கமாக எச்சரித்திருந்தார்.

அரசு சார்பற்ற நிறுவனங்கள் கேட்டுக்கொண்டது போல், மனித உரிமைகள் ஆணைக்குழு தமிழர் தாயகத்தையும், அவர்தம் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்தால் அது சிறீலங்காவின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாக அமையும். அதுமட்டுமன்றி இத்தகைய நடவடிக்கை, வடக்கு -கிழக்கு பகுதிகளுக்கு வெளியே வாழும் தமிழர்களை ஆபத்தில் தள்ளுவதாகவும் அமையும் என்று சிறில.ங்காவின் பிரதிநிதி தமது பதிலில் குறிப்பிட்டிருந்தார்.

இனமத அடிப்படையில் நாட்டைப்பிரிக்க முனைந்தால் பின்பு என்ன நிகழும் என்பதற்கு எடுத்து காட்டாக முன்னாள் யுகோசிலாவியாவில் இப்போது நிகழும் சம்பவங்கள் விளங்குகின்றன. அத்தகைய கசப்பான விளைவுகளை சிறீலங்காவிலும் காணும் வகையிலான நடவடிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு எடுக்கமாட்டாது என்று நம்புகின்றேன் என சிறீலங்காவின் பிரதிநிதி மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

சர்வதேச சமூகத்திற்கு அவர் விடுத்திருந்த எச்சரிக்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் கூடியிருந்தோரை உண்மையிலேயே அதிர்ச்சியடையச் செய்திருந்தது.

தமிழருக்கென்றொரு பாரம்பரிய தாயகம் இல்லை?

சிறீலங்கா அரசுப் பிரதிநிதி தமது பதிலில் கூறியிருந்த பல கூற்றுக்கள் தவறானவை.
அவரது பதிலறிக்கையில் உள்ளவற்றை மறுத்து பல அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆணைக்குழுவிடம் அறிக்கை சமர்ப்பித்திருந்தன. சர்வதேச கல்வி மேம்பாட்டு நிறுவனமான I. E. D யும் அந்நிறுவனங்களில் ஒன்று.



தற்போது ஜெனிவாவில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைகள் தொடர்பான 49 வது மாநாட்டில் "இலங்கைத் தமிழர்" பிரச்சினையை எடுத்துரைக்கும் பிரதிநிதிகள்.

தமிழர்களுக்கென்றொரு தாயகப் பிரதேசம் வரலாற்றின் அடிப்படையிலோ, அன்றேல் சட்டத்தின் அடிப்படையிலோ இருந்ததில்லை என சிறிலங்காவின் பிரதிநிதி தமது பதிலில் குறிப்பிட்டு இருந்தார். ஆனால், 187-9ஆம் ஆண்டு பிரித்தானியப் பேரரசின் காலனித்துவ செயலாளர் சேர். கியு கிளேகோன் அவர்கள் தமது அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் என்று I. E. D நிறுவனம் சுட்டிக்காட்டி இருந்தது. "இலங்கைத்தீவின் வெவ்வேறு பகுதிகளில் இரு வேறுபட்ட இனத்தவர் வாழ்கின்றனர். தெற்கு, மற்றும் மேற்கு பகுதிகளில் (சிலாபம் வரை) சிங்கள மக்களும், வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழ் மக்களும் வாழ்கின்றனர். இவ்விரு இனங்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டன. முழுமையாக வேறுபட்ட மொழி, மதம், பழக்கவழக்கங்கள் என்பவற்றைக் கொண்ட தனித்தனியான தேசியங்கள் இவை" என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

"நிர்வாகத் தேவைகளை முன்னிட்டே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் வகுக்கப்பட்டிருந்தன. இன அடிப்படையிலல்ல" என்று சிறீலங்கா அரசின் பிரதிநிதி கூறியுள்ளார். வடக்கு, கிழக்கு பகுதிகள் தமிழரின் பாரம்பரிய தாயகம் என்பதை மறுக்கும் முயற்சியே இது.

மேலைத்தேய நாடுகளின் காலனியாக இலங்கை வருவதற்கு முன்பு தமிழர்களுக்கென்று தனியான இராச்சியம் அவர்களது பாரம்பரிய பிரதேசத்தில் இருந்ததற்கான எத்தனையோ வரலாற்று ஆதாரங்கள் உள்ளன என்றும், அவை தவிர அண்மையில் 1957ஆம் ஆண்டில் செய்யப்பட்ட பண்டாரநாயக்கா_செல்வநாயகம் ஒப்பந்தத்திலும் 1972 மற்றும் 79 ஆம் ஆண்டுகளில் அமைந்த சிறீலங்காவின் அரசியல் சாசனத்திலும் தமிழர் தாயக பூமியின் இருப்பு தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. என்றும் I. E. D பதிலளித்திருந்தது.

"தமிழர் இனப்பிரச்சினையை தீர்ப்பதென்றால் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்க வேண்டும். அன்றி ஐ. நா மன்ற மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற அமைப்பின் முன்னிலையில் வைத்து அல்ல" என்று சிறீலங்காவின் பிரதிநிதி வலியுறுத்தியுள்ளார்.

இனப்பிரச்சினையை தீர்க்க வென்று அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு கூட தமிழர் தாயகத்தின் இருப்பை ஏற்க மறுத்துவிட்டது

அவர்களின் இந்தமுடிவை அந்தக்குழுவில் அங்கம் வகித்திருந்த தமிழ்க் கட்சிகள் கூட எதிர்த்து நிராகரித்துள்ளன.

"தமிழர் தாயகத்தை சிறீலங்கா எற்றுக்கொள்ள மறுப்பதே, பிரச்சினைகள் மேலும் தொடரக் காரணமாகும். அத்துடன், இனப்பிரச்சனைக்கான அடிப்படைக் காரணங்களை இனங்கண்டு எடுத்துக் கூறும் ஆய்வுகளை ஆதாரமற்ற பிரச்சாரங்கள் என்று கூறுகிறார்கள். பல ஆண்டுகளாக இடம்பெற்று வந்த ஒடுக்குமுறையினால் விளைந்த தமிழ் மக்களின் ஆயுத உதவியுடனான போராட்டத்தை பயங்கரவாதம் என்று கூறுகிறார்கள். ஆணைக்குழுவிடம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. இத்தகைய பார்வைகள், எண்ணங்கள் ஓர் அமைதியான -உருப்படியான தீர்வை உருவாக்க வழிவகுக்க மாட்டா" என்று I. E. D. நிறுவனம் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது.

இன்னும் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறீலங்கா அரசினதும், ஆயுதப்படையினதும் நடவடிக்கைகள் பற்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் அறிக்கைகளை சமர்ப்பித்திருந்தன.

நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் மக்கள் எவ்வாறு துன்புறுத்தப்படுகின்றனர், அவர்களது பாரம்பரிய தாயகம் எவ்வாறு சூறையாடப்படுகிறது என்பதைக் கூறும் பதிவு செய்யப்பட்ட ஆதாரங்கள் பலவற்றை இந்த நிறுவனங்கள் தமது அறிக்கையில் கொடுத்திருந்தன. அதிலும் குறிப்பாக இரண்டு பதிவுகளை IED யும், பொருளாதார_ சமூக அமைப்பும் (Economic and Social Council) தமது அறிக்கையில் வரிக்குவரி எழுதியிருந்தன.

முதலாவது, பிரித்தானிய பாராளுமன்றத்தின் மனித உரிமைகள் குழுவினர், ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் சிறீலங்கா சென்று, பார்த்து எழுதிய அறிக்கை. அதில், அவர்கள் தாம் கிழக்கு மாகாணத்தில் அரசினால் சிங்களக் குடியேற்றம் நடத்தப்படுவதனை நேரடியாகக் கண்டோம் என்று ஐயம் திரிபுற எழுதியிருந்தனர்.

இரண்டாவது, கேர்மன் குணரட்ன எனும் உயர் அரசு ஊழியர் 1990 ஆம் ஆண்டு சிறீலங்கா சண்டே ரைம்ஸ் ஏட்டிற்குக் கொடுத்திருந்த அறிக்கை.

இதில், சிறீலங்கா அரசு எவ்வாறு குடியேற்றத்திட்டங்களை நடத்தியது என்றும், குடியேற்றத் திட்டங்கள் மூலம் மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலைப் பகுதிகளை எப்படி தமிழரிடமிருந்து பறிக்கத் திட்டமிட்டிருந்தது என்றும் தெளிவாகக் கூறியுள்ளார்.

இவை தவிர தமிழருடைய குடிமக்கள் பகுதிகள் மீதும், கோவில்கள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் மீதும் குண்டுவீசி சிங்கள அரசு செய்யும் இனப்படுகொலைக்குமான ஆதாரங்கள் பலவற்றை இந்த நிறுவனங்கள் தமது அறிக்கையில் வெளியிட்டிருந்தன.

வற்றாப்பளை அம்மன் கோவில் திருவிழாவின் போது நடத்தப்பட்ட செல்லடி தாக்குதல்களையும், துர்க்கை அம்மன் ஆலயத்தின் மேல் நடத்தப்பட்ட வான் குண்டு வீச்சையும் அவை சுட்டிக்காட்டியிருந்தன.

தெல்லிப்பளை பொது மருத்துவ மனையில் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் அடையாளம் தெளிவாக இடப்பட்டுள்ளது. அம்மருத்தவ மனைக்கு வெகு அருகில் இருக்கும் கோவில் மீது குண்டு வீசப்பட்டதை தவறுதலாக நடந்தது என எப்படிக் கூறமுடியும் என்றும் அவை கேட்டுள்ளன.

உண்மையில் மனித உரிமை மீறல்கள் குறைந்துள்ளனவா?

சிறீலங்காவில் மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகள் குறைந்துள்ளன என்று கூறப்படுகின்றது. ஆனால், சிறீலங்காவில் 12000 பேர் திடீரென்று காணாமல் போயுள்ளார்கள். இவர்களுக்கு என்ன நடந்தது என்று அரசு எதுவுமே கூறவில்லை.

இந்த நிலையில் மனித உரிமைகளைப் பேணுவதில் சிறீலங்காவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று அரசு கூறுவது, உலக நாடுகளுக்காக செய்யும் வெறும் முகப்பூச்சே தவிர வேறொன்றும் இல்லை என்பது சர்வதேச நடவடிக்கைக்கான 'சர்ச்சுகளின் அமைப்பு' கூறியுள்ளது.

## ஆணைக்குழுவிடம் வேண்டப்பட்டவை

சிறீலங்கா விவகாரத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவை, கடுமையான நடவடிக்கைகளை

தொடர்ச்சி 7ம் பக்கம் ....



ஐ. நா மனித உரிமைகள் மாநாட்டில் ஒரு பகுதியினர்

# புதிய உலக ஒழுங்கமைப்பும் ஐ.நா.சபையின் தலையீடுகளும்

— பாலகுமாரன்

தமிழர் தேசிய இனப்பிரச்சனையில் ஐ. நா. தலையிடுவதற்கு இடமளிப்பதா, இல்லையா என்பதுபற்றி தென்னிலங்கைப் பத்திரிகை உலகில் மிகவும் சூடான விவாதம் எழுந்திருக்கிறது. இந்த சர்ச்சை பற்றி விமர்சிப்பது எமது நோக்கமல்ல. இன்றைய புதிய உலக ஒழுங்கமைப்பை நிர்ணயிப்பதில் ஐ.நா. எத்தகைய பங்கினை வகிக்கிறது, மூன்றாம் உலகத்து தேசிய நெருக்கடிகளில் ஐ. நாவின் தலையீடு எவ்வாறு அமைந்திருக்கிறது, இன்றைய உலகின் ஒரே வல்லரசான அமெரிக்கா தனது பூகோள வல்லாதிக்க அபிலாசைகளையும், பொருளாதார வர்த்தக நலன்களையும் பேணும் நோக்கில் எவ்விதம் ஐ. நா. வை ஒரு கருவியாகப் பாவித்து செயற்படுகிறது? என்ற விவகாரம் பற்றி இக்கட்டுரையில் சுருக்கமாகப் பார்ப்போம்.

முந்திய உலக ஒழுங்கில், உலகம் இரு முகாம்களாக பிளவுபட்டிருந்த காலத்தில், பனிப்போர் எனப்படும் நிழல்யுத்தம் நடைபெற்ற நேரத்தில் இரு வல்லரசுகளும் ஐ. நா. சபையை புறம் தள்ளி ஒதுக்கி வைத்திருந்தன. குறிப்பாக அமெரிக்கா ஐ. நாவுடன் பெரிதும் முரண்பட்டு நின்றது. அதற்கான பணக்கொடுப்பனவை இடைநிறுத்தம் செய்தது. தாமதப்படுத்தியது. ஐ. நாவின் முக்கிய அலகான "யுனெஸ்கோவை", ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் 'பயங்கரவாத ஆதரவு அமைப்பு' எனக் கூறி அதிலிருந்து வெளியேறியது.

அக்காலகட்டத்தில் மூன்றாம் உலக நாடுகள் இருவல்லரசுகளின் பிடியிலிருந்து ஐ. நா. விலகி நீதியான சமத்துவமான புதிய சர்வதேச அணியொன்றை உருவாக்க வேண்டும் என முயன்றன. இது பழைய வரலாறு. இன்று நடப்பது வேறு வரலாறு. சோவியத் சாம்ராஜ்யம் இடிந்து விழுந்தது. இதன் விளைவால் பனிப்போர் முடிவடைந்தது. அமெரிக்காவை தனிவல்லரசாக முடிசூட்டிவிட்டு ரஸ்யா முடங்கிவிட்டது. அமெரிக்காவுக்கு எதிரணி இல்லாத நிலை. அதேசமயம் நாட்டிலோ பெரும் பொருளாதார நெருக்கடி. உள்நாட்டில் மக்களின் வாழ்க்கைத் தர வீழ்ச்சி. சர்வதேச வர்த்தகத்தில் பெரும் பின்னடைவு. எனவே இத்தகைய பின்னணியில் உத்தியோக பூர்வமாக பிணக்குகளைத் தீர்க்கும் உலக பொலிஸ்காரனாக சர்வதேசப் பின்னணியோடு ஒரு 'தார்மீக நியாயத்தோடு' செயற்பட விரும்பி அமெரிக்கா பாரிய முடிவொன்றை எடுத்தது. ஐ.நா. விற்கூடாக அது தன் செயற்பாடுகளை நிறைவேற்ற முடிவெடுத்தது. ஐ. நாவை முதன்மைப்படுத்தி, தனதும் தனது மேற்கத்திய நண்பர்களது நலன்கட்கும் பாதிப்பு இல்லாதவகையில் தனது வெளிநாட்டுக் கொள்கையை நிறைவேற்றும் ஸ்தாபனமாக இன்று ஐ. நாவை மாற்றிவிட்டது. இப்போது அமைதி பற்றி அமெரிக்கா போதிக்கின்றது. மனித உரிமைகள் குறித்து விளக்கம் சொல்கின்றது. புதிய உலக ஒழுங்கினை ஐ. நா. மூலமாக உருவாக்கப் போவதாக அறைகூவல் விடுக்கின்றது. இதன் பலன் முடுக்கிவிட்ட பம்பரம் போல் இன்று ஐ. நா. செயலர் செயற்படுகின்றார்.

எனவே நீலக்கொடி தாங்கிய ஐ. நாவின் வெள்ளை நிற வாகனங்களின் பின்னே அமெரிக்கப் படைகள் முன்னணி வகிக்க உலகமெங்கும் சர்வதேச அமைதிப்படைகள் செல்லத் தொடங்கிவிட்டன. மேலும் அமெரிக்கா தான் இதுவரை பெரும் ஆதரவு அளித்து வந்த கிளர்ச்சிக் குழுக்கள், வலதுசாரி பிற்போக்கு இராணுவ அரசுகட்கு உதவியை நிறுத்தி அல்லது குறைத்து ஐ.நாவோடு ஒத்துழைக்கும்படி பணித்துவிட்டது. விருப்பமில்லாவிட்டாலும் வேறு வழியில்லாமல் ஐ. நாவின் தலையீட்டை எல்லாருமே ஏற்க வேண்டிய நிலை. ஏனெனில் சோவியத் முகாமின் ஆதரவோடு இருந்த போராளிக் குழுக்கள், அரசுகளின் நிலையும் இதுதான்.

ஆனால் உண்மையில் நடப்பது என்ன? அமைதிப்பணிக்குச் சென்ற ஐ. நாவின் செயற்பாடுகள் இன்று சந்தேகத்திற்கும், கேள்விக்குமுரியதாக மாறிக்கொண்டு வருகின்றன. அகலக்கால் வைத்த ஐ. நா. பெருஞ்சங்கடங்களுக்குள் இன்று சிக்குப்பட்டிருக்கின்றது. போர் நிறுத்தம் ஏற்பட்ட நாடுகளில் மீண்டும் போர் தொடங்கிவிட்டன. ஐ. நா. வின் எதிர்கால செயற்பாடுகள் குறித்த பெரும் கவலை அரசியல் ஆய்வாளர்கள் மத்தியில் மீண்டும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறாக ஐ. நா. வின் அமைதிப்பணியை கேள்விக் குறிகளாக்கிய ஒரு சில நிகழ்வுகளைப் பார்க்கலாம். எந்தப் போர்களை நிறுத்த ஐ. நா. முயன்றதோ அவை மீண்டும் ஐ. நா. முன்னிலையிலேயே இன்று கம்போடியாவிலும், அங்கோலாவிலும் நடைபெற ஆரம்பித்துவிட்டன. கம்போடியாவிற்றான் எங்கும் மேற்கொள்ளாத வகையில் பாரிய அமைதிப்பணியை 25,000 க்கும் மேற்பட்ட ஆளணிகளை அனுப்பி மேற்கொண்டது. கம்போடியா அரசுக்கும் மூன்று போராளி அமைப்புக்களும் இடையிலான அமைதி உடன்படிக்கை 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஐ. நா. தலைமையில் பாரிசில் கைச்சாத்திடப்பட்டது. இதனை நிறைவேற்ற UNTAC எனப்படும் ஐ. நா. வின் தற்காலிக ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அண்டாக் (UNTAC) கம்போடியாவை தற்காலிகமாக நிருவகிக்க SNC எனப்படும் உயர்தேசிய மன்றை அமைத்து, சகல ஆயுதங்களையும் களைந்து, அகதிகளை மீளக்குடியேற்றி வாக்காளர் பட்டியலை தயாரித்து பொதுத் தேர்தலை நடாத்த வேண்டும். ஆனால் தொடக்கத்திலிருந்தே பொல்பொட் தலைமையிலான 'கைகர்ருச்' போராளி அணிகளுக்கு தம்மை தனிமைப்படுத்தி இளவரசர் சிகானூர்த்தினை பதவிக்கு கொண்டு வர ஐ.நா. முயல்வதாக சந்தேகம். தொடக்கத்தில் கம்போடிய அரசுக்கும் இளவரசர் சிகானூர்க்கும் இருந்த நல்லுறவு, இளவரசர் சிகானூர்தின் தம்பி தரோத்தம் சிறிவுத் புதிய அரசியல் கட்சி ஆரம்பித்தவுடன் மறைந்துவிட்டது. இன்று மூன்று அணியினருமே ஐ. நா. பக்கச் சார்பாக நடப்பதால் தாம் நம்பிக்கை இழந்துவிட்டதாக முறைப்படுகின்றனர். அமைதிக்காக சென்ற ஐ. நா. வின் படையினரோ கேளிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றச்சாட்டு வேறு. இவற்றைவிட பொல்பொட் அணியினர் ஐ. நா. படையை மிரட்டுவதும், கடத்துவதுமாக இருந்து இறுதியில் தாக்கியும் விட்டனர். இப்போது மீண்டும் கம்போடிய அரசுக்கும், பொல்பொட் அணிக்கும் பெரும்போர் மூண்டுவிட்டது. மீளக்குடியேற வந்த அகதி மக்கள் படும் துயர் கணக்கிடங்காது. மீண்டும் பாதுகாப்புச் சபை கூடி பொல்பொட் அணியின் மீது பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. இவர்கட்கு எரிபொருள் கிடைப்பதைத் தடுத்து இவர்களின் பெரிய வர்த்தகத்தை (இரத்தினக்கல், மரம்) தாய்லாந்தோடு நிறுத்துவதே இத்தடையின் நோக்கம். தாய்லாந்து ஒத்துழைப்பதாகக் கூறினாலும் 550 கி. மீற்றர் பரந்த எல்லையில் ஐ. நா. கண்காணிப்பாளரை நிறுத்த மறுத்துவிட்டது. அதைவிட ஏறத்தாழ 100 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மர வியாபாரத்தையோ, அல்லது 40 க்கு மேற்பட்ட தாய்லாந்து வர்த்தக நிறுவனங்கள் 300க்கு மேற்பட்ட இரத்தினக்கல் சுரங்கங்களின் மூலம் பெறும் இலாபத்தையோ சுலபத்தில் இழக்க தாய்லாந்து இணங்கும் என எவரும் நம்பவில்லை. எனவே கம்போடிய அமைதிக் கனவு கலைய ஆரம்பித்துவிட்டது.

அங்கோலாவின் கதையையும் பார்க்கலாம். 16 வருடங்கள் கொடிய உள்நாட்டுப் போர் நடந்த நாடு. சோவியத்தின் ஆதரவை இழந்த எம். பி.எல். ஏ. (MPLA) அரசின் தலைவர் தொல்சாஸ் டோசும், அமெரிக்கா, தென்னாபிரிக்க ஆதரவை இழந்த யூனிட்டா குழுவின் யோனாஸ் சவிம்புயும் ஐ. நா. தரகர் முயற்சியால் 1991 ஆம் ஆண்டு போரை நிறுத்தி உடன்பாடுகண்டன. இங்கும் இரு அணியினரும் தமது இராணுவங்களை ஓரணியாக்கி தேர்தலில் நின்று சனநாயக வழியில் செயற்படச் சம்மதித்தன. சென்ற வருடம் செம்டம்பரில் தேர்தலும் நடந்தது. சவிம்பி தோற்றுப் போனார். உடனடியாக தனது இராணுவத் தளபதிகளை ஒன்றுபட்ட இராணுவ அணியிலிருந்து விலக்கி தனது 30,000 பேர் கொண்ட படையை போர் செய்ய உத்தரவிட்டார். எனவே மீண்டும் போர் தொடங்கிவிட்டது. ஐ. நா. சபையின் பார்வையாளர் இருவர் இப்போரின் இடையில் அகப்பட்டு இறந்து போயினர். தனது அலுவலகர்களின் நிலை மிக உயிராபத்தில் உள்ளதாக அங்கோலாவில் உள்ள ஐ. நா. பொறுப்பாளர் அலறுகின்றார். பாதுகாப்பு சபையின் வேண்டுகோள், எச்சரிக்கை எதனையும் யுனிட்டா தலைவர் காதில் போடுவதாகத் தெரியவில்லை.

ஆப்கான் கதையும் அதே கதை. தெரிந்த கதை. ஐ. நா. வின் பேச்சை நம்பி பதவியிறங்கச் சம்மதித்த முன்னாள் அதிபர் நஜிபுல்லாவை எப்படிக் காப்பாற்றி வெளியே கொண்டு வருவது என கடந்த 6 மாதங்களாக ஐ. நாவிற்குத் தெரியவில்லை.

மிகச் சிறந்த உடன்படிக்கை என்று பாராட்டுப் பெற்ற எல். சல்வடோரின் அமைதி உடன்பாடே மீண்டும் கேள்விக்குறியாகிவிட்டது. ஒப்புக் கொண்டபடி இராணுவத்தில் மாற்றங்கள் செய்ய வலதுசாரி கிறிஸ்டியானோ தலைமையிலான அரசு மறுப்பதால் FMLN போராளிக்குழு தனது மிகுதி ஆயுதங்களை ஒப்படைக்க மறுத்துவிட்டது. நம்பிக்கைத் துரோகம் என்று ஐ. நாவைப் பார்த்து குற்றம் சாட்ட ஐ. நா. கையை பிசைந்து கொண்டு நிற்கின்றது. பாலஸ்தீனப் பிரச்சனையில் ஐ. நா.வின் ஓரவஞ்சனை உலகறிந்த கதை. 200 வது வரிசையில் ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களில் இருந்து இன்று 700 வது வரிசையில் உள்ள தீர்மானம் வரை இஸ்ரேல் காலில் போட்டு மிதித்த தீர்மானங்கள் ஏராளம். பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை மீறிய ஈராக் மீது தண்டனை. இஸ்ரேலுக்கு ஆதரவு. இங்கே அமெரிக்க, மேலைத்தேய நலன்கள் ஐ. நாவின் புதிய ஒழுங்கில் எவ்வாறு முதன்மைப்படுத்தப்படுகின்றன என்பது மிகத் தெளிவாக அம்பலப்படுத்தப்படுகின்றன.

இன்னொரு மிக நீண்ட மோசமான உள்நாட்டுப் போரை முடிவிற்கு கொண்டு வந்த உடன்பாடு கடந்த ஒக்டோபர் மாதம் இத்தாலியின் ரோமில் ஐ. நாவினால் மேற்கொள்ளப்பட்டது. மொசாம்பிக் நாட்டின் ஜனாதிபதி சிகானோவிற்கும் றினாமோ கிளர்ச்சிக்குழு தலைவர் தலக்லாமாவிற்கும் இடையில் ஏற்பட்டது. அங்கோலா போலவே இங்கும் ஏற்பாடுகள். மொசாம்பிக் அரசின் 75,000 பேர் கொண்ட படையையும் றினாமோவின் 30,000 பேரையும் கலைத்துவிட்டு புதிதாக இரு அணியினரின் சமபங்கைக் கொண்ட புதிய இராணுவ அணியை உருவாக்குவதே முக்கியமான உடன்படிக்கையின் சரத்து. இது எவ்வாறு நிகழப் போகிறது என்பதை உலகமே பார்த்துக் கொண்டிருக்கின்றது. அங்கோலாவில் நடந்ததைப் போலவே மொசாம்பிக்கிலும் நடக்கக் கூடாதென ஏலவே அரசியல் அறிஞர்கள் எச்சரிக்கை எழுப்பியுள்ளனர்.

இத்தகைய நிலையில் ஐ. நா.வின் சர்வதேச மதிப்பு எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே கேள்வி. தொடர்ந்து ஐ. நா. வின் அமைதிப்பணி எவ்வாறு அமையும் என்பதற்கு வரலாறே விடை சொல்ல வேண்டும். ■

## பல்கலைக்கழக அனுமதி முறை நேர்மையின்மைக்கு அரசியலே காரணம்

"அனுமதிமுறை முற்றாகமாற்றப்பட வேண்டும் பல்கலைகழக அனுமதியிலான நேர்மையின்மை அண்மைக்கால சமூக, மற்றும் அரசியல் அமைதியின்மையுடன் தொடர்புடையதென்பது நன்கு தெரிந்ததே. நீதி வழங்கப் பட்டால் மாத்திரம் போதாது. அது வழங்கப்பட்டிருப்பது போல தெரியவும் வேண்டும். பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் அனுமதிக்கும் தற்போதைய முறை முற்றாக இரத்துச் செய்யப்பட்டு நியாயமான அனுமதிமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்" என்று அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கில் சிறிலங்காவின் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த இராஜதுரை சுரேந்திரன் என்ற மாணவன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் வழக்கில் தீர்ப்பு வழங்கையிலேயே உயர் நீதிமன்ற நீதியமைச்சர்களான எம். டி. எச். பெர்ணான்டோ, எஸ். பி. குணவர்த்தன, ஏ. எஸ். விஜேதுங்க ஆகியோரே இதை அறிவித்தனர்.

இவ்வழக்கில் பிரதிவாதிகளாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவையும், சட்டமா அதிபரையும் குறிப்பிட்டுள்ளது.

மனுதாரரான சுரேந்திரன் தமது மனுவில் குறிப்பிட்டிருந்ததாவது:-

1990 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடக்கவிருந்த க. பொ. த (உ/த) பரீட்சைக்கு நான் தோற்றத் தயாராக இருந்த போதும், யாழ்ப்பாணத்தில் அத் திகதியில் அந்தப் பரீட்சை நடத்தப்படவில்லை. இதனால், நான் 1991 ஏப்ரல் மாதத்திலேயே அப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டி இருந்தது. நான் 276 புள்ளிகள் பெற்றிருந்த போதும் 90 ஆகஸ்ட் பரீட்சைக்கும் 91 ஏப்ரல் பரீட்சைக்குமான பெறுபேறுகள் வேறு வேறாகக் கணிக்கப்பட்டது காரணமாக எனக்கு பல்கலைக்கழக பிரவேசம் மறுக்கப்பட்டது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும்.

ஒரு குறித்த பரீட்சை இரண்டு வேறு சந்தர்ப்பங்களில் நடைபெற்ற போதும், அவை இரண்டும் ஒரே பரீட்சை எனக் கணிக்கப்பட்டு, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக பிரவேசங்கள் வழங்கப்பட வேண்டும் என விதிமுறைகள் 2, மற்றும் 29 ஆகியன கூறுகின்றன.

எனினும் மேற்படி பரீட்சைகளின் பெறுபேறுகளை இரு வேறு இருவேறு பெறுபேறுகளாகக் கணித்தமை அடிப்படை உரிமை மீறலாகும். ■

## 14000 தமிழீழ மக்கள் அம்பாறையில் இடம்பெயர்வு

"அம்பாறை மாவட்டத்தில்சிறீலங்கா இராணுவ நடவடிக்கைகள், மற்றும் சிங்கள முஸ்லீம் குண்டர்களின் அச்சுறுத்தல்கள் காரணமாக சுமார் 14000 அப்பாவித்தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் இருந்து இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளனர்." இவ்வாறு மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்நிர்வாகப் பொறுப்பாளர் கரிகாலன் தெரிவித்துள்ளார். மேலும், தற்பொழுது அம்பாறையில் உள்ள திருக்கோயில், தம்பிலுவில் ஆகிய கிராமங்களில் மட்டுமே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். ஏனைய கிராம மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி உள்ளனர். அத்துடன், மட்டக்களப்பின் எல்லையோரக் கிராமங்கள் யாவும் சிறீலங்கா படைகளின் தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ளன. கல்லோயாத் திட்டத்தில் உள்ள பல கிராமங்களும், புல்லுமலை கிராமமும் அழிக்கப்பட்டுள்ளன. ■

# நினைவில் ஓர் நிகழ்வு

- சி.யாவரசன்

"எமது தலைவரின் நேரடி வழிகாட்டலில் வளர்ந்த, வாழ்ந்த கிட்டண்ணா தனது போராளிகள் மீது காட்டிய அன்பும், பரிவும், கரிசனையும் ஆச்சரியப்படக் கூடிய ஒன்றல்ல. மற்றவர்களின் தேவையை அறிந்து நடக்கின்ற பண்பும், அவர்களின் நலன் மீது கொண்ட அக்கறையும் துணிவும் போராட்டத்தின் மீதும், தலைவரின் மீதும் கொண்ட விசுவாசமும் சேர்ந்துதான் தமிழீழத்தின் ஒரு பகுதியான யாழ் மாவட்டத்தை அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து முன்னூறு வருடங்களுக்குப் பின்னர் மிகக் குறைந்தளவு போராளிகளுடன் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததற்கான காரணியாகக் கூறலாம்."

**1985ம்** ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21ம் நாள்.

எனது சக போராளியான தீபன் என் தூக்கத்தைக் கலைக்கின்றான்.

"அண்ணை... அண்ணை அல்பேட் அண்ணை உங்களை எழுப்பிவிடட்டாம். எழும்புங்கோ அண்ணை."

"ஓமடாப்பா எழும்புறன் எண்டு சொல்லு...." மீண்டும் புரண்டு படுத்துக் கொள்கிறேன்.

இரண்டு நாட்களின் முன்னர் தான் அல்பேட்டின் அணி ஏழாலையில் அந்த வீட்டை தமது முகாமாக்கிக் கொண்டது. அன்று இரவு எல்லோருடனும் கலந்துரையாடும் பொழுது, "காலையில் நாங்கள் எல்லோரும் உடற்பயிற்சி செய்வோம்" என்று அல்பேட் சொல்லியிருந்தார். அதற்காகத் தான் என்னை எழுப்பிவிடுமாறு கூறுகின்றான் என எண்ணிக்கொண்டேன்.

அல்பேட் வேகமாகவும், உரமாகவும் என்னை உலுப்பினான். "எழும்பு மச்சான். கிட்டண்ணை ரவுண்டப்புக்குள்ளையாம்" அல்பேட்டின் வேகமும், வார்த்தைகளும் என்னைத் துள்ளி எழ வைத்தது. போராளிகள் எல்லோரும் அவசர அவசரமாகத் தயாராகிவிட்டார்கள். எல்லோரும் வானில் ஏறுங்கோ... நீ போய் வானை எடு மச்சான். அல்பேட் கட்டளையிட்டான். எங்களது 'வான்' சுதுமலையை நோக்கி வேகமாக ஓடத் தொடங்கியது. அல்பேட் 'வோக்கிடோக்கி'யில் கிட்டண்ணையுடன் தொடர்பு எடுத்துக் கொண்டும், சண்டை நிலைமையை அறிந்து கொண்டும் என்னைக் 'கெதியாய் ஓடு மச்சான் ...' என்று வார்த்தைகளால் விரட்டிக் கொண்டிருந்தான். எமது வாகனத்தை உலங்குவானூர்தி ஒன்று, புறப்பட்ட இடத்திலிருந்து கலைத்துக் கலைத்து வேட்டுக்களைத் தீர்த்தவண்ணம் துரத்திக் கொண்டேயிருந்தது. ஒருவேளை உலங்குவானூர்தியைச் செலுத்தியவன் தான் நன்றாகத் துரத்துகிறேன் என்று எண்ணியிருக்கலாம். ஆனால் உண்மையில் சுற்றி வளைப்பை மேற்கொண்ட இராணுவத்தினரை திணற வைத்துக் கொண்டிருந்த கிட்டண்ணைக்கு உதவவே அல்பேட், தனது அணியுடன் சுதுமலையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான். இணுவிலுக்கூடாகச் சென்ற அல்பேட்டின் அணியினரும் இராணுவத்தினரைச் சந்தித்துக் கொண்டு, அவர்கள் மீது வேட்டுக்களைத் தீர்க்கத் தொடங்கினர். நன்கு திட்டமிட்ட இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அரச படைகள் கிட்டண்ணையின் போர்த்தந்திரத்தினால் திணறிக் கொண்டிருந்தன.

கிட்டண்ணா அல்பேட்டிற்கு பரிபாசையில் தகவல் கொடுத்தார். சண்டை தொடர்ந்து நடப்பதால் எனக்கு 'அமினேசன்' அனுப்பு. அல்பேட் அதைக்கூறி வேலையை என்னிடம் ஒப்படைத்தான். எனக்கு அங்கிருந்து போவதற்கு விருப்பம் இல்லாவிட்டாலும் கட்டளைக்கு கீழ்ப்படிந்தேன்.

மேலதிக ரவைகளை எடுத்துக் கொண்டு சுதுமலைக்கு வந்து கிட்டண்ணாவுடன் வோக்கித் தொடர்பு எடுத்தபடியே கிட்டண்ணா சொல்கின்ற பாதையினூடாகச் சென்று அவர் நின்ற இடத்தை அடைந்தேன். ஊகங்களின் அடிப்படையிலேயே அவரை அடையவேண்டிய பாதையைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். அவரின் ஊகங்கள் பொய்க்கவில்லை. அவர் காட்டிய பாதையால் என்னால் தடைகளின்றிப் போய்ச் சேர முடிந்தது.



அரச படைகள் தங்கள் திட்டத்தின் முழுத்தோல்வியையும் சந்தித்துக் கொண்டு பின்வாங்கின. "அல்பேட் காயப்பட்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளான் என்ன மாதிரியென்று தெரியேல்லையடாப்பா" என்று கிட்டண்ணா சொல்லிக் கொண்டேயிருந்தார். சற்று நேரத்தில் சுற்றிவளைப்பைத் தகர்ப்பதில் முக்கிய பங்காற்றிய 'மேஜர் அல்பேட்' வீரச்சாவடைந்த செய்தி வந்தது. கிட்டண்ணா கண்ணீர் விட்டு யாரும் தேற்றமுடியாத அளவிற்கு குலுங்கிக் குலுங்கி அழுதார். நான் கிட்டண்ணாவுடன் பழகிய கால எல்லைக்குள் இரண்டு தடவைகள் மட்டும் அவர் அழுததைக் கண்டுள்ளேன். கப்டன் பண்டிதரை இந்த மண் இழந்தபோது கிட்டண்ணா கண்ணீர் விட்டு கதறியதை முதல் தடவையும், அல்பேட் வீரச்சாவடைந்தபோது இரண்டாவது தடவையுமாக என்னால் காணமுடிந்தது.



கிட்டண்ணாவின் சுதுமலை முகாம் ஓடுகள், வளைகள், சுவர்கள் எல்லாமே விழுப்புண்கள் ஏற்று சிதைந்து கிடந்தன. அந்த முகாம் மட்டுமல்ல அயல் வீடுகள், செடி கொடிகள், மரங்கள் எல்லாமே அவ்வாறே காணப்பட்டன. அந்த முகாமிலேயே தொடர்ந்தும் இருக்கப் போவதாகக் கூறி முகாமைச் சுத்தம் செய்யுமாறு கிட்டண்ணா கட்டளையிட்டார். தூரத்தே இராணுவத்தினர் ஏவிய 'ஆர்.-பி.ஜி. செல்' ஒன்று வெடிக்காமல் இருப்பதைக் கண்ட போராளி ஒருவன் கிட்டண்ணாவுக்கு அதைக்காட்ட, அவர் அதன் அருகில் சென்றார். கூடச் சென்ற நான் அதை எடுக்கக் குனிந்தேன். அவர் அதை எடுக்க வேண்டாம் என்று என்னைத் தடுத்துவிட்டு, தான் எடுப்பதற்கு முயன்றபோது நான் மீண்டும் அவர் முன்னே சென்று குனிந்து செல்லை எடுக்க முயன்றேன். கிட்டண்ணா தடுத்து தான் எடுப்பதாகக் கூறினார். இல்லையென்று கூறி நான் எடுக்க எத்தனித்தேன். உடனே மிகுந்த கோபத்துடன் 'ஆ...' என்று உறுமினார். நான் எடுக்கும் எத்தனிப்பை நிறுத்திக் கொண்டேன்.

பின்னர், நன்கு அந்த 'செல்'லை அவதானித்த பின்பு தானே அதை எடுத்துப் பார்த்துவிட்டு என்னிடம் தந்தார். அந்த வேளையில் செல் வெடிக்கும் நிலையில் இருந்தால் வெடித்து ஒரு போராளி வீரமரணம் அடைகின்ற நிகழ்வு ஏற்படுமானால் அது தனக்கு ஏற்படட்டும். தான் அருகில் நிற்கும்போது இன்னொரு போராளிக்கு சாவு ஏற்படக்கூடாது என்ற எண்ணமே முதலில் அவரை அந்தச் செல்லை எடுப்பதற்கு தூண்டியதாக இன்றுவரை நான் எண்ணுகிறேன். உண்மையும் அது தான்.

எமது தலைவரின் நேரடி வழிகாட்டலில் வளர்ந்த, வாழ்ந்த கிட்டண்ணா தனது போராளிகள் மீது காட்டிய அன்பும், பரிவும், கரிசனையும் ஆச்சரியப்படக்கூடிய ஒன்றல்ல. மற்றவர்களின் தேவையை அறிந்து நடக்கின்ற பண்பும், அவர்களின் நலன்மீது கொண்ட அக்கறையும், துணிவும் போராட்டத்தின் மீதும் தலைவரின் மீதும் கொண்ட விசுவாசமும் சேர்ந்து தான், தமிழீழத்தின் ஒருபகுதியான யாழ் மாவட்டத்தை அந்நியரின் ஆதிக்கத்திலிருந்து முன்னூறு வருடங்களுக்குப் பின்னர் மிகக்குறைந்தளவு போராளிகளுடன் புலிகளின் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடிந்ததற்கான காரணியாகக் கூறலாம். கிட்டண்ணா இன்று இங்கு இல்லாமலிருக்கலாம். ஆனால், விடுதலைப் புலிகளின் தமிழீழப் போராட்ட வரலாறு அவரின் நினைவுகளை இரை மீட்டபடியே வாழும். ■

## உள்நாட்டு....

எடுக்கும்படி பல நிறுவனங்கள் கேட்டுள்ளன. அனைத்திற்கும் மேலாக, தமிழர்களுக்கென்று ஒரு தாயகப்பிரதேசம் இருப்பதை அங்கீகரிப்பதுடன் சுயநிர்ணய உரிமையுடைய மக்களாக ஈழத்தமிழர்களை அங்கீகரிக்க வேண்டுமென்றும் அவை மனித உரிமைகள் ஆணைக்குழுவைக் கேட்டுள்ளன.

யாழ்ப்பாண குடாநாட்டுக்குள் எடுத்துச் செல்வதற்கு அத்தியாவசிய பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கும் படியும், குடாநாட்டில் இருந்து வெளியே வரவும் -உள்ளே செல்லவும் இருக்கும் தடைகளை நீக்கும் படியும் அவை கேட்டுள்ளன.

உடனடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடங்கி சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பேணும் வகையில் நீதியான தீர்வு ஒன்றைக் கொண்டுவர தேவையான முயற்சிகளைச் செய்யும் படியும் அவை மனித உரிமைகள் ஆணைக்குழுவை வேண்டியுள்ளன. ■

## வடபுலம்...

வேண்டுமென்றே செய்தியாளர்களைப் பிரித்து தனியாக இப்படி செய்கின்றனர்," என்று BBCயின் கொழும்பு நிருபர் தெரிவித்துள்ளார்.

எண்ணெயோ, மின்சாரமோ இன்றி இருளில் இருக்கும் வடபுலம் தொலைத் தொடர்புச் சேவைகள் இல்லாத நிலையில், சர்வதேசச் செய்தியாளர் வருகையும் தடைப்பட்ட நிலையில் முழுச்சமுதாயமும் இருளில் அமிழ்த்தப்பட்டுள்ளது. ■

# பச்சிளம் குழ

# சிறீலா

## பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் பற்றிய ஆய்வு வெளிப்படுத்தும் உண்மைகள்

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற குழந்தைகளில் பலர் ஒரு மலைக்குன்றையோ, ஒரு நீர்வீழ்ச்சியையோ, அல்லது ஒரு ஆற்றையோ ஒருபோதும் கண்டிருக்கமாட்டார்கள். ஆயினும் அவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது மிகவும் உயர்ந்த போஸாக்கு நிலையை அனுபவித்துவந்துள்ளனர்.

அமெரிக்காவின் சுகாதாரக் கல்வியும் நலன்பேணலுக்குமான திணைக்களம் இலங்கை சுகாதார அமைச்சுடனும், ஏனைய அரசுசார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து மேற்கொண்ட இலங்கையின் போஸாக்குநிலை பற்றிய 1975/76 ம் ஆண்டின் ஆய்வு யாழ்ப்பாணத்து பள்ளிமுன்னிலைப் பிள்ளைகள், நாட்டின் ஏனைய பகுதிச் சிறார்களிலும் பார்க்கக் கூடிய போஸாக்குத் தரத்தை அனுபவிப்பவர்கள் எனச் சுட்டிக்காட்டி நின்றது. இவ்வாய்வின்படி யாழ்ப்பாணத்து பள்ளிமுன்னிலைப் பிள்ளைகளில் 3.7%த்தனர் மாத்திரமே கடுமையான போஸாக்கின்`மையால் பாதிக்கப்பட்டனர் என அறியப்பட்டது. அதே வேளை இலங்கையின் சராசரி கடுமையான போஸாக்குப் பாதிப்பின் நிலை 6.-6%மாக இருந்துள்ளது. இதேநேரம் காலி, மட்டக்களப்பு, இரத்தினபுரி, கண்டி போன்ற பகுதிகளில் பள்ளிமுன்னிலைப் பிள்ளைகளில் 8%வரை கடுமையான போஸாக்குப் பாதிப்பிற்குள்ளாகி இருந்தனர்.

ஒருவேளை, இவ்வாய்வின் முடிவுகளின் காரணமாகத்தான் யாழ்ப்பாணத்தில் குழந்தைநலச் சேவைகளில் மேற்கொள்ளவேண்டிய முன்னேற்றங்கள் ஓரங்கட்டப்பட்டு, ஏனைய பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவேண்டும். தென்பகுதிகளில் உள்ள பலசரக்குக் கடைகளில் விற்பனைக்காக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும் 'திரிபோஸா' வினைக்கூட யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்து சிறார்களுக்கான சேவைகள் படிப்படியாக அலட்சியம் செய்யப்பட்டு, கடந்த தசாப்தத்தில் இவர்களுடைய சுகாதாரநிலை மிகவும் சீர்குலைந்தது.

உணவுப்பொருட்கள், மருந்துகள், திரிபோஸா, குழந்தைகள் கர்ப்பிணித் தாய்மாருக்கான தடுப்புமருந்துகள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகள் அண்மைக்காலத்தில் இதனை மேலும் மோசமடையச் செய்துள்ளது. அடிக்கடி ஏற்பட்ட குண்டு, எறிகணை வீச்சுக்கள் இதற்கு மேலும் பங்களிப்பைச் செய்துள்ளது. இது குழந்தைகளை தமது சொந்த இல்லங்களிலிருந்து அகதிமுகாம்களுக்கு துரத்தி விட்டுள்ளது. இதனால், இவர்கள் தங்களுடைய உணவுக்காக முதியவர்களுடன் போட்டியிட வேண்டியநிலை ஏற்பட்டது. இலங்கை அரசும், யுனிசெவ் ஸ்தாபனமும் இணைந்து வெளியிட்ட (சிறீலங்காவின் குழந்தைகளும் பெண்களும் 1991, பக்கம் 94, 95) வெளியீட்டில், வடக்கு -கிழக்கு மக்களில் 45.8% இடம்பெயர்ந்துள்ளார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதன்படி 340,000 குழந்தை அகதிகள் உள்ளார்கள்.

எஸ். ஏ. மீகமவும், ஏனையோரும் குறித்துள்ளபடி 1971இல் ஏற்பட்ட பஞ்சத்தால் மரணவிகிதம் அதிகரித்தபோது ஆகக்கூடிய பாதிப்புக்காளனவர்கள் குழந்தைகளும், வயோதிபர்களுமே என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இன்று யாழ்ப்பாணத்தில் பிறக்கும் 20 குழந்தைகளில் ஒருகுழந்தை தனது முதலாவது பிறந்ததினத்தைக் கொண்டாட உயிருடன் இருப்பதில்லை. அதாவது 5%மான குழந்தைகள் ஓராண்டை பூர்த்திசெய்யுமுன்னரே மரணித்துவிடுகின்றனர்.

1982இல் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி (எம். ஓ. எச்.) பிரிவில் இதன் ஆசிரியராலும், ஏனையோராலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் கணக்கிடப்பட்ட குழந்தைகள் இறப்புவிகிதம் (ஐ. எம். ஆர்.) 35.4க்கும் 50.0க்கும் இடையினதாக இருந்தது. இருப்பினும், இக்காலப் பகுதியில் குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்திற்கான குழந்தைகள் மரணவிகிதம் 18.0 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கொக்குவில், கோண்டாவில் பகுதியை உள்ளடக்கிய பல்கலைக்கழக வெளிக்களத் திட்டபகுதியில் மேற்கொள்ளப்பட்ட அண்மைக்கால ஆய்வின்படி குழந்தைகள் மரணவிகித 42.9ஆக உள்ளது.

பல்கலைக்கழக வெளிக்கள திட்டப்பகுதி; யாழ். குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் பார்க்கக் கூடிய சுகாதாரக் கவனிப்புடையது. ஆகவே ஒருவர் யாழ்ப்பாண மாவட்டம் முழுவதுக்கும், கூடிய குழந்தைகள் மரணவிகிதத்தை எதிர்பார்க்கவேண்டும். ஆனால், 1990இல் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்துக்கான குழந்தைகள் மரணவிகிதம் 16.6ஆகும். மேற்கூறிய ஆய்வுகளில் காட்டப்பட்ட குறைந்த குழந்`தைகள் மரணவிகிதம் பதிவுக்குறைபாடுகளால் ஏற்பட்டதாகும். முன்னைய ஆய்வின்படி, மூன்றில் ஒரு குழந்தைகள் வைத்தியசாலையில் அனுமதிக்கமுன்னரே இறந்துவிடுகின்றனர். அவை பெரும்பாலும் பதியப்படுவதில்லை. வைத்தியசாலை மரணங்கள் கூட அரைவாசிதான் பதியப்படுகின்றன. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி திருகோணமலை, மொனறாகலை, வவுனியா, பொலநறுவை ஆகிய மாவட்டங்களிலும்கூட நிலவுகின்றது என எண்ணவேண்டியுள்ளது. இங்கெல்லாம் குறைந்த குழந்தைகள் மரணவிகிதத்தை சுகாதாரத் திணைக்களம் வெளியிடுகிறது.

ஏனைய ஆசியநாடுகளில் போலவே இங்கும் வயிற்றோட்டம், கடுமையான சுவாசக் கோளாறுகள் போன்ற தொற்றுக்கள் போஸாக்குத் குறைபாட்டால் இலகுவில் ஏற்படுவதால் குழந்தைகள் இறக்கிறார்கள். ஆயினும் இந்த நாடுகளில் சுகாதார அதிகாரிகள் ஒன்றிணைந்த முயற்சியை எடுப்பதன்மூலம் இவ்வகையான மரணங்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆனால் இங்கு மருந்துகள், குழந்தைகள் உணவுகளுக்கான தடைகள் என்று ஒருகையாலும், குடும்பநல சேவையாளர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள், உதவி வைத்திய அதிகாரிகள் போன்ற அடிமட்ட சுகாதார ஊழியர்களுக்கான பயிற்சிகளை குறைப்பதன் மூலம் மறுகையாலும் தடைகளை ஏற்படுத்துவதன்மூலம் மரணங்களை அதிகரிக்க வழிவகுக்கப்படுகின்றது. 1987ற்குப்பின் யாழ்ப்பாணத்தில் உதவி வைத்திய அதிகாரிகளின் பயிற்சிக்கு ஒருவரும் சேர்க்கப்படவில்லை. குடும்பநல சேவையாளர்களும், பொது சுகாதார பரிசோதகர்களும் குறைந்த அளவிலேயே பயிற்றப்பட்டுவருகிறார்கள்.

குழந்தைகள்நல நிலையங்களில் பணியாற்றுபவர்கள் அங்குவருகின்ற குழந்தைகளில் போஸாக்குக்குறைபாடுடையவர்களின் அதிகரிப்பை அண்மைக்காலத்தில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மரஸ்மஸ், குவாசிஓர்கோர், கடுமையான விட்டமின் 'ஏ' குறைபாடு, இரத்தச்சோகை என்பன முன்னர் காண்பதற்கரிதாக இருந்தநிலை மாறி இவ்வகையான நோய்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளை நாள்தோறும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

1992ம் ஆண்டு சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐக்கிய இராச்சியம்) தங்களால் பராமரிக்



கப்படும் கெற்பேலி அகதிகள் முகாமில் உள்ள குழந்தைகள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டனர். இதில் 332 குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டனர். 6.8% குழந்தைகள் எதிர்பார்க்கப்பட்ட உயரத்திற்குரிய எடையில் குறைவுபட்டுக் காணப்பட்டனர். இது தீவிர அல்லது அண்மையில் ஏற்பட்ட போஸாக்கு இன்மைக்கான எடுத்துக்காட்டாகும். இவ்வெண்ணிக்கை முன்

நாம் உலகைச்சேர்ந்த பஞ்சத்தால்வாடும் சிலநாடுகளுடன் ஒப்பிடும்போது பிரச்சனைக்குரியதாக கருதமுடியாததாக விவாதிக்கமுடிந்தாலும், 1975/76இல் 3.7%ஆக இருந்ததை கவனத்தில் எடுக்கவேண்டும். இது இன்றுள்ள நிலையில் கிட்டத்தட்ட 1/2 பங்கினதேயாகும். பலநாடுகளில் போஸாக்குநிலை முன்னேறியுள்ள நிலையில் யாழ். மாவட்டத்தில் குழந்தைகளின் நிலை மோசமாகிக்கொண்டே போகிறது.

1991 ஐப்பசிமாதம் யாழ். சுகாதார வைத்



# தைகளை பலிகொள்ளும்

# ங்கா அரசு





## மீன்பிடித்தல் – கோழிவளர்ப்பு பாதிக்கப்பட்டமை போசாக்கின்மைக்கு முக்கிய காரணம்

திய அதிகாரி, மாநகரசபைக்கு உட்பட்ட பல அகதி முகாம்களில் வாழும் 01 -04 வயது குழந்தைகளைக்கொண்ட ஆய்வொன்றினை நடத்தியுள்ளார். 644 குழந்தைகளில் பரிசோதித்ததில் 73% குழந்தைகள் வயதுக்கேற்ற எடை இல்லாது, வளர்ச்சி அட்டவணையில் குறைந்தநிலைக்குக் கீழ் உள்ளனர் எனக் கண்டனர். இதேபோல் யாழ். மாநகரசபையின் ஒருபகுதியில் வாழ்கின்ற 05 வயதிற்குட்பட்ட குழந்தைகளை 1992 அக்டோபரில் நிறுத்தபொழுது அவர்களுள் 58% போசாக்கின்மையால் பாதிப்படைந்தது தெரியவந்தது. இது இவ்வாறிருக்க 1990ம் ஆண்டறிக்கையில் குடும்பநலன் காப்பகம் சிறீலங்காவிற்குரிய நிலையை 34.7%மாக குறிப்பிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் வாழ்கின்ற குழந்தைகளின் அவலநிலை என்னே!

யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு ஆய்வுப்படி ஒரு குழந்தையின் போஸாக்கு, அது பிறப்பதற்கு முன்னரேயே பாதிக்கப்பட்டுவிடுகிறது. சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐக்கிய இராச்சியம்), இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் (யாழ். கிளை) என்பன இணைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட ஆய்வின்படி குறைந்த எடையுள்ள (2,500 கிராமுக்குட்பட்ட) குழந்தைகளின் பிறப்பு அதிகரித்துள்ளது. 1991 ஐப்பசிமாத காலப்பகுதியில் பிறந்த குழந்தைகளில் 23%தினர் குறைந்த எடையுள்ளவர்கள். 1989இல் இதேகாலத்துக்குரிய கணிப்பின்படி (இது ஓரளவான சாதாரணமான காலம்) 19%த்தினர்தான் குறைந்த எடையுடையவர்களாகக் காணப்பட்டனர். இப்படியான நிலை மிகவும் முற்கூட்டியே ஆரம்பித்திருக்கவேண்டும். குடும்ப சுகாதார நலன்பேணும் மையத்தின் ஆண்டறிக்கையின்படி 1988இல் யாழ்ப்பாண வைத்தியசாலையில் பிறந்த குறைந்த எடையுடைய குழந்தைகளின் வீதம் 15.9ஆக இருந்துள்ளது. 1989க்கும் 1991க்கும் இடைப்பட்ட காலத்தில் எடைகுறைந்த குழந்தைகளின் பிறப்புவீதம் 21%த்தால் அதிகரித்துள்ளது.

மானிப்பாய் சுகாதாரப்பிரிவில் உள்ள குடும்பநலப் பணியாளர் ஒருவரால் ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அகதிமுகாம்களிலும் கிராமத்திலுமாக தான் சேவையாற்றும் பகுதியில் 01 -04 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் போஸாக்கு நிலையை கணித்துள்ளார். இதற்கு 'நடுக்கைச் சுற்றளவு' அளவுமுறையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கிராமத்தில் 60%மானவர்களும், அகதிமுகாம்களில் 74.5%-மானவர்களும் போஸாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருக்கக் காணப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக் குழந்தைகளுக்கு வேண்டிய மாமிச புரதத்தை முக்கியமாக முட்டைகளில் இருந்தும், மீனில் இருந்தும்தான் பெற்றுவந்தார்கள். கோழித்தீன்மீது போடப்பட்டிருக்கும் தடையினாலும், பழுதடையக்கூடிய பொருட்களை விரைவில் எடுத்து வருவதில் உள்ள தடையாலும் முட்டையின் விலை பெரும்பாலான பெற்றோர்களின் வாங்கும்திறனுக்கு அப்பாற்பட்டதாகிவிட்டது. யாழ். குடாநாட்டைச்சுற்றி மீன்பிடி கடுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் மீனின் மொத்தத்தேவை 6,600 மெற்றிக்தொன் ஆகும். ஆனால் 1991இல் மொத்த மீன்பிடி 1,094 மெற்றிக்தொன் ஆகும். இது மொத்தத்தேவையின் 16.6%ஆகும். எனவே போஸாக்குக் குறைபாட்டுக்குள்ளாவது ஆச்சரியப்படக்கூடியதல்ல.

யாழ்ப்பாணத்துக் குழந்தைகளின் போஸாக்குநிலை மிகவும் மோசமடைந்துள்ளது. குழந்தைகளுக்கு தங்களுடைய நிலைபற்றிக் குரல்கொடுக்கக்கூடிய தொழிற்சங்கங்களோ அல்லது அரசியல் பிரதிநிதித்துவமோ கிடையாது. எம்போன்ற மூத்த குடியினரே இதில் குறுக்கிட்டு கீழ்நோக்கிச் செல்லும் இப்போக்கினைத் தடுக்கவேண்டும். எத்தியோப்பியா போன்றநிலை வரும் வரை நாம் காத்திருக்க முடியாது. அவ்வாறு காத்திருப்போமாயின் குழந்தைகளை முந்திய நிலைக்கு கொண்டுவருவது ஒரு பூதாகரமான காரியமாகிவிடும். இன்று நாம் தலையிடவில்லையென்றால் எம் பிற்சந்ததி எம்மீது குற்றம் சுமத்துவது திண்ணம்.

சிலியின் நோபல் பரிசுபெற்ற கவிஞர் சுபிரியல் மிஸ்ரல் என்பவரின் சொற்களில் :

நாம் பல தப்புக்களையும், தவறுகளையும் செய்திருக்கிறோம்
அவற்றுள் மிக மோசமான குற்றம்.
-- எமது குழந்தைகளை அனாதரவாக விட்டதுதான்.
அதனால்,வாழ்க்கையின் முளையையே புறக்கணித்துவிட்டோம் .
எங்கள் தேவைகள் பலவற்றை தள்ளிப்போடலாம்.
குழந்தைகளின் தேவைகளை தள்ளிப்போட முடியாது.
இப்பொழுதுதான்,
-- அவன் எலும்புகள் உருவாகின்றன
-- அவன் குருதி உற்பத்தியாகத் தொடங்குகின்றது.
-- அவன் உணர்வுகள் வளர்கின்றன.
அவனுக்கு நாங்கள் நாளை என்று சொல்லமுடியாது.
ஏனெனில்,

அவன் பெயர் : இன்று.


தி ந.சிவராஜா
விரிவுரையாளர்
துவத்துறை
பீடம்
லக்கழகம்.

அந்தக் காலைப்பொழுதின் விடியல் இவ்வளவு பெரிய சோகத்தைச் சுமந்து வரப்போகின்றது என்று யாரும் எதிர்பார்த்திருக்க நியாயமில்லை. போராளிகள் ஒவ்வொருவரும் தத்தமது நாளாந்தக் கடமைகளில் மூழ்கியிருந்தனர் -வழமை போல் இன்றும். அவர்கள் ஒவ்வொருவர் மனங்களிலும் பல்வேறு சிந்தனைகள், நினைவலைகள். இவற்றினூடு நகர்ந்து கொண்டிருந்த அந்த நாட்பொழுது.

ஆனாலும் அந்தக் கணப்பொழுதுகள்... எங்கிருந்தோ வந்த நண்பன் ஒருவன் -"மச்சான், எங்கட மணி முடிஞ்சுதாமடா. இப்பத்தான் மெசேச் வந்ததாம்"... அவனது வார்த்தைகள் சுமந்து வந்த சோகம்... அடுத்த சில கணப்பொழுதுகள் அங்கே குடிகொண்ட மௌனம் -எங்கள் இதயங்கள் அந்தச் செய்தியை ஏற்கவும், ஜீரணிக்கவும் கஸ்டப்படுகின்றன போலும். "உண்மையாகவே மச்சான்?" என்ற எங்களில் ஒருவனின் வார்த்தையில் அது பொய்யாக இருக்கக் கூடாதா, என்ற ஆதங்கம் தெரிகின்றது. ஆனாலும் அங்கு பதிலின்றித் தொடர்ந்த மௌனம் -ஆம் எங்களின் சோகத்தைப் பரிமாறிக் கொள்ள அதைத் தவிர வேறு வார்த்தை கிடைக்கவில்லை.

மணி... உனக்கும்... எங்களுக்கும் இடையில் மிக நீண்ட தூர இடைவெளி. ஆனாலும் நாங்கள் என்றோ ஒரு நாள் சந்திப்போம் என்று, எங்கள் இதயங்களில் வளர்ந்திருந்த நம்பிக்கை அரும்பு சிதைக்கப்பட்டு விட்டது.

உனது சாவு, எமக்கிடையே இருந்த இடைத்தூரத்தை நிரந்தரமாக்கி விட்டது. எனிமேல் உன்னைக் காணவே முடியாதா!! ஓ...- அதனை ஏற்றுக் கொள்ள இதயத்தால் முடியவில்லை. என் மனதில் இழையோடிய எண்ணங்கள். " நல்ல பெடியன் மச்சான்" நீண்ட மௌனத்தைக் கலைத்த யாரோ ஒரு தோழனின் வார்த்தை அது. ஆளுக்காள் தங்கள் சோகத்தைக் குறைத்துக் கொள்ளும் முயற்சி. எந்தன் மனதோ பின்நோக்கிச் சென்று அந்த பசுமையான நினைவுகளை அசை போட எத்தனிக்கின்றது. ஓ... எங்களுக்காக 'மணி' விட்டுச் சென்றது, தனது நினைவுகளை மாத்திரம் தான்...

அமைதியாக இருந்த அந்த அடர்ந்த கானகப் பகுதி இன்று ஏனோ ஆரவாரித்துக் கொண்டிருக்கின்றது. இன்று மாத்திரமா? இல்லை, சில நாட்களாக இதே ஆரவாரம் தான். அந்தக் கானகத்தின் ஊடே ஓடிய ஒற்றையடிப் பாதை வழியே போராளிகள் நடந்துசெல்லும் சலசலப்பு, சில நாட்களாகக் கேட்ட வண்ணமேயிருக்கின்றது. அப்பகுதி... திருமலை மண்ணில் சிங்களவனால் முற்றாக விழுங்கி ஏப்பம் விடப்பட்ட கிராமங்களில் ஒன்றான பன்குளத்தின் காட்டுப்பகுதி. அக்கானகத்தின் மத்தியில் அமைந்திருந்த புலேந்தி அம்மானின் பிரதான பாசறையை நோக்கித் தான் இப் போராளிகள் போய்க் கொண்டிருக்கின்றார்கள். பன்குளப்பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாமொன்றைத் தாக்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார் புலேந்தி அம்மான். சில நாட்களாக அவருக்கு ஓய்வுறக்கம் இல்லை. அவரோடு சேர்ந்து சந்தோசம் மாஸ்ரர். இத்தாக்குதல் முயற்சிக்காகத்தான் பல்வேறு பகுதிகளில் இருந்தும் போராளிகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். அங்கு வந்து சேர்ந்த போராளிகளுக்கோ இரட்டிப்பு மகிழ்ச்சி. இராணுவமுகாம் தாக்குதலில் பங்கெடுக்கப் போகின்றோம் என்ற மகிழ்ச்சி ஒரு புறம்.

மறுபுறம் நீண்ட நாட்களாகச் சந்திக்காமல் இருந்த தமது தோழர்களையும், என்றுமே அறிமுகம் இல்லாத போராளிகளையும் ஆளையாள் அறிமுகம் செய்து தமது சுக துக்கங்களைப் பரிமாறிக் கொள்கின்ற மகிழ்ச்சி. மற்றவர்களைப் போலல்லாமல் எனக்கு இந்த நாளை என்றுமே மறக்க முடியாமல் செய்து விட்டவன் 'மணி'. ஆம் இன்றுதான் நான் முதன் முதலாக மணியை சந்திக்கின்றேன். எந்நேரமும் புன்சிரிப்புடன் கூடிய அவனது முகம் எல்லோருடனும் மிக இயல்பாகப் பழகுகின்ற அவனது சுபாபம். எந்தச் சூழ்நிலையிலும் மற்றவர்களைச் சிரிக்க



வைக்கின்ற அவனது பேச்சு. மிகவும் எளிமையான அவன்... இவற்றினால் தானோ எல்லோராலும் அவன் அன்பாக நேசிக்கப்பட்டான். அந்த முதற் சந்திப்பிலேயே அவனை எனக்குப் பிடித்துக் கொண்டதில் வியப்பேதும் இல்லை. அவனது வீரத்தை, திறமையை இதற்கு முன்னர் எத்தனையோ தடவைகளில் அவன் உணர்த்தியிருக்கின்றான். நாங்களும் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனாலும் இந்த இராணுவமுகாம் தாக்குதலில் அதனை நேரடியாகவே நாங்கள் உணர்ந்து கொள்கின்றோம். அந்த இராணுவமுகாம் தாக்குதல் துரதிஸ்டவசமாகத் தோல்வியில் முடிந்தாலும் அங்கு மணி தன் திறமையைக் காட்டத் தவறவேயில்லை. மணியோடு வந்திருந்த மற்றைய தோழர்கள் மூலம் நாம் மணியைப் பற்றி அறிந்து கொள்கின்றோம்.

திருமலை மாவட்டத்தின் முக்கிய பிரதேசங்களில் ஒன்று மூதூர். முன் பொரு காலம் இயற்கையின் எழில் கொஞ்சிய எங்களின் பாரம்பரிய பூமி. கந்தளாய்க் குளத்தின் வற்றாத நீரோட்டத்தில் செழித்து எங்கும் பச்சைப்பசேல் எனும் நெல்லும் புல்லுமாய் செல்வச் செழிப்புடன் விளங்கிய ஒரு காலம்.

ஆனாலும் காலத்தின் கொடுமையால் இன்றோ சிங்கள, முஸ்லிம் ஆக்கிரமிப்பில் அடிக்கடி சிக்குண்டு தன் இயற்கையான பொலிவிழந்து பொட்டிழந்த பெண் மகள் போல் தோன்றும் அந்தக் கோலம். இன்னும், இன்னும் அந்த அராஜகங்களுக்கு ஆட்பட்டுத் தவிக்கும் அந்த மக்களின் அவலம். கண்களில் நீர்த்திரையிட வைக்கின்ற அந்தச் சோகம். அப்பகுதிக் கிராமங்களில் ஒன்றான சம்பூர்-அது தான் மணியின் சொந்த ஊர். அவன் தவழ்ந்து திரிந்த பூமியில் இன்று வாழ்க்கையின் எல்லைக் கோட்டை அண்மித்து விட்ட வயதானவர்களைத்தான் காணமுடிகின்றது. "உங்கள் பிள்ளைகள் எங்கே"? என்று அவர்களை வினவினால், ஒன்று அவர்கள் இராணுவ அராஜகங்களுக்கு பலியாகியிருப்பார்கள் அல்லது விடுதலைப் புலியாக இருப்பார்கள். மணியின் குடும்பத்திற்கும் இது மிகவும் பொருத்தமாகவே இருந்தது. மணியின் குடும்ப நிலைமையானது மிகவும் ஏழ்மையானதாகவே இருந்தது. மணியினாலும் "இளமையில் வறுமை" எனும் கொடுமையில் இருந்து தப்ப முடியவில்லை. ஆனாலும் வறுமையிலும் செம்மையாக வாழ, அவனது குடும்பம் தவறவில்லை. ஆதிக்கச் சிங்களத்தின் அராஜகம் மணியின் குடும்பத்தையும் விட்டுவைக்கவில்லை. மணியின் தம்பி ஒருவன் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தான். மற்றோர் சகோதரர் இராணுவச் சூட்டிலிருந்து தப்பிவிட்ட போதிலும் மறைந்து வாழவேண்டிய நிலை. இந்நிலையில் குடும்பப் பொறுப்பை எற்க வேண்டிய நிர்ப்பந்தம் இவனுக்கு. குடும்பச் சுமையைத் தாங்க வேண்டிய பொறுப்பு, அந்த ஏழ்மையைப் போக் கவேண்டிய கட்டாயம். தன் வயதான பெற்றோரைக் காப்பாற்ற வேண்டிய கடமை -இத்தனைக்கும் மத்தியில் மணி. ஆனாலும் இவற்றிற்கு அப்பால் அவனது தேசம் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. அடிமை விலங்கு இறுக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது பாரம்பரிய பூமியிலேயே இன்று வாழமுடியாத அவல நிலை. மணியின் மனத்திலும் தாய் என்னும் குறுகிய சிந்தனையை விட தாய்நாடு எனும் சிந்தனையே மேலோங்கி நின்றது. இதனால் 1985 இன் இறுதிப் பகுதியில் அவன் முழுமையாகத் தன்னை இயக்கத்தில் இணைத்துக் கொள்கின்றான்.

மூதூர் பகுதியிலேயே தனது பயிற்சியை முடித்துக் கொண்ட மணி அப்பகுதியிலேயே தனது இயக்கப் பணியைத் தொடர்ந்தான். தனது போராட்ட வாழ்க்கையின் பெரும்பாலான காலப்பகுதியை மூதூர்ப் பகுதியிலேயே செலவிட்ட அவன், அப்பிரதேசத்தில் இடம் பெற்ற அனைத்து முக்கிய இராணுவத் தாக்குதலிலும்



மேஜர் மணி

பங்குபற்றியதோடு பல தாக்குதல்களிற்கு தலைமை தாங்கிச் சென்று பல வெற்றிகளைப் பெற்றவன். தான் பங்குபற்றிய ஒவ்வோர் தாக்குதல்களிலும் தனது திறமையைக் காட்ட மணி தவறியது கிடையாது. இதனால் மூதூர் பிரதேசத்தின் முக்கிய பொறுப்பாளர்களில் ஒருவனாக "மணி" நியமிக்கப்பட்டிருந்தான்.

மூதூர் பகுதியின் மூலை முடுக்கெல்லாம் வாழ்ந்த மக்கள் கூட மணியை அறிவார்கள். ஏனென்றால் அப்பகுதிகளிற் கெல்லாம் செல்லவும், அம் மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றை நிவர்த்தி செய்யவும் "மணி" தவறுவதில்லை. தனது அன்பு மக்களை நேசிப்பதற்கு அவன் தவறியதில்லை. "மணி"; இந்தப் பெயர் போராளிகளின் வாய்களில் மாத்திரமின்றி மூதூர் பகுதி மக்கள் ஒவ்வொருவர் வாயிலும் மிகவும் நேசத்துடன் வெளிப்படும் வார்த்தை. மணியின் அன்பான வார்த்தைகளால், பண்பான நடத்தயினால், கள்ளமில்லாச் சிரிப்பினால், நேர்மையான செயற்பாட்டினால் அவன் இயக்கத்தின் ஒவ்வொரு போராளியினாலும், பொறுப்பாளர்களினாலும், பொது மக்களினாலும் நேசிக்கப்பட்டான்.

1990ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மணி தனது சக போராளிகளுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் வந்திருந்தான் . யாழ்ப்பாணம், வன்னி மண்கள் கூட மணிக்கு புதியன அல்ல. இந்திய ஆக்கிரமிப்புப் போர் நடைபெற்ற காலப் பகுதியில் அவன் இந்திய இராணுவத்துடன் களமாடித் திரிந்த பகுதிகள் தானே இவை. ஆம் 1988, 89 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் யாழ்ப்பாணம், வன்னிப் பிரதேசங்களில் இந்திய இராணுவத்துடன் செங்களமாடியவன் மணி. அதன் பின்னர் தற்பொழுதுதான் மீண்டும் யாழ்ப்பாணம் வந்துள்ளான். நீண்ட கால இடைவெளியின் பின் அவனை நான் சந்திக்கின்றேன். ஆனாலும் மணி.... அவன் அவனாகவே இருந்தான்.

அக்காலப்பகுதி கோட்டை இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டிருந்த காலப்பகுதி. மணியையும் கூட்டிக் கொண்டு நாங்கள் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றிருந்தோம். இனிமையான மாலைப் பொழுது மணி சக தோழர்களை கேலி பண்ணிச் சிரித்தபடியே வந்துகொண்டிருந்தான். அவனது பேச்சைக் கேட்டுச் சிரித்தபடியே நாங்கள் முகாமைச் சுற்றிப்பார்த்துக் கொண்டுவந்தோம். கோட்டையின் மூலை முடுக்கெல்லாம் நின்று நாங்கள் போட்டோக்கள் எடுத்துக் கொண்டிருந்தோம். அப்போது மணி சிரித்தபடியே கூறினான், "மச்சான் என்னை வடிவா எடுங்கடா, எனிப் போனா எங்கடா திரும்பி வாறது, செத்துக்கித்துப் போனாலும்" அவன் பகிடியாகத்தான் கூறினான். அவன் சாவுக்குப் பயந்தவனா? இல்லை ஒவ்வொரு போராளியும் தன் சாவை எதிர்பார்த்தபடிதான் போராடுகின்றான். அந்தச் சாவை அவன் சந்தோசமாக அணைத்துக் கொள்கின்றான். அன்று மணி பகிடியாகவோ அன்றி தீர்க்கதரிசனத்துடனோ எப்படிக் கூறினானோ, அவன் திரும்பி வரவேயில்லை. அவனது சாவு எங்களுக்கு, அவனது அன்புத் தோழர்களிற்கு, அவன் நேசித்த மக்களிற்கு தாங்கொணாச் சோகத்தைத் தந்தது உண்மை. ஆனாலும் அந்தச் சோகங்கள் சில கணப் பொழுதுகள்தான். ஏனென்றால் அவனது சாவு தளராத உறுதியை எங்களிற்குத் தந்துள்ளது. இந்த உறுதி, வேகம், வீரம், தியாகம், இந்தப் புனிதப்பயணம் அவனது இலட்சிய எல்லைவரை......... ■

*K. கபில்*

# அறிவியல் கல்வியகம் உதயம்

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவியல் கல்வி அகம் ஒன்றை வட்டக்கச்சி றமேஸ் வீதியிலுள்ள நெசவுச்சாலை கட்டடத்தில் நிறுவியுள்ளது.

மேற்படி கல்வி அகத்தில் க. பொ. த. உயர்தரம் கலை, வர்த்தக வகுப்புக்களும் க. பொ. த. சாதாரண தரம் (ஆண்டு 10, 11), தொழில் நுட்ப வகுப்புக்கள் ஆகியவற்றை நடத்தி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்ட முன்னேற்றத்திற்காக 4 வருடமாக சேவை செய்து வந்துள்ள இம் மாணவர் ஒன்றியம் அம் மாவட்டத்தில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க அறிவியல் கல்வி அகங்களை நிறுவி வருகின்றது. இதன் முதற் கட்டமாகவே வட்டக்கச்சியில் நிறுவப்பட்டது என்றும், பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழகப் படிப்பை தொடர இருக்கும் மாணவர்கள், படிப்பை முடித்து வெளியேறிய மாணவர்களே ஒருங்கிணைந்து இப்பணியினைச் செய்து வருகின்றார்கள் என ஒன்றியம் தெரிவித்துள்ளது. ■

# தெரிவுக் குழுவின் அரசியற் போதனை !
# மாகாணசபையும் இந்திய "சமஸ்டியும்"

— மு.திருநாவுக்கரசு

ஒரு விடயத்தைச் செயற்படுத்த வேண்டும் என்று நினைத்தால் ஒத்த கருத்துடைய மிகக் குறைந்தளவு உறுப்பினரைக் கொண்ட ஒரு விசாரணைக் கொமிசனை நியமிக்க வேண்டும். செயற்படுத்த வேண்டியதில்லை என்று நினைத்தால், ஆனால் அரசியல் நெருக்கடியிலிருந்து தப்பித்தக் கொள்வதற்காக, வேறுபட்ட கருத்துக்களையுடைய அதிகளவு உறுப்பினர்களைக் ஒரு விசாரணைக் கொமிசனை நியமிக்க வேண்டும். இப்படிக் கூறியவர் இலங்கையின் முதலாவது பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா ஆவர்.

டி. எஸ். சேனநாயக்கவின் மேற்படி கருத்தை ஒத்த நடவடிக்கைதான் தெரிவுக்குழு விவகாரமுமாகும். 1956 ஆம் ஆண்டைத் தொடர்ந்து தமிழ் மக்கள் மத்தியில் ஒரு புதிய தலைமுறை தோன்றியுள்ளது. அது புதிய அனுபவங்களைக் கொண்டுள்ளது. அது புதிய விழிப்புக்களைப் பெற்றுள்ளது. அரசியல் நெளிவு, சுழிவுகளையும் இராஜதந்திரக் சுருக்குக் கயிறுகளையும், தெளிவாக விளங்கவல்ல ஓர் இளம்தலைமுறை உருவாகியுள்ளது. எனவே பிரேமதாசாவின் சமாதானப் பீடிகைகளினாலும் சரி, அன்றி வேறெந்த அரசியல் பீடிகைகளினாலும் சரி தமிழ் மக்களின் கண்களைக் கட்டிவிட முடியாது. ஏமாற்றவும் முடியாது.

தமது மாகாணசபைத் தீர்வுத் திட்டத்தை இந்திய மாதிரியிலான தீர்வு என்று ஆட்சியாளர் அர்த்தப்படுத்தி வருகின்றனர். இந்தியாவின் சமஸ்டி அமைப்பானது அரைச் சமஸ்டி அமைப்பேதான் என்பது வேதனைக்குரியதாய் ஒருபுறம் இருக்கட்டும். அதேவேளை இந்தியாவின் இனப்பிரச்சனைக்கான அவர்களின் தீர்வு அடிப்படையில் "மொழிவழி" மாநில அமைப்பே என்பதும் கவனிக்கத்தக்கது. அப்படியாயின் இலங்கையில் ஒரு மொழியை உடைய தமிழ் பேசும் மக்களை இரு வேறுபட்ட மாகாணங்களாகப் பிரிப்பது எவ்வாறு இந்தியாவின் மொழிவழி மாநிலத் தீர்வை ஒத்ததாக இருக்க முடியும்?

சுதந்திர இந்தியாவில் இனப்பிரச்சனை எழுந்தபோது அதற்குத் தீர்வு காண்பதற்கெனக் கூறி அதன் பிரதமர் ஜவகர்லால் நேரு States Reorganisation Commission என்றொரு விசாரணைக் குழுவை நியமித்தார். இதன் மூலம் 1956 ஆம் ஆண்டு மொழிவழி மாநில அமைப்பு எனும் தீர்வு முன்வைக்கப்பட்டது. தென்னிந்தியாவில் எழுந்த இனப்பிரச்சனையை ஒட்டியே மேற்படி தீர்வு எட்டப்பட்டதால் இம்மொழிவழி மாநில அமைப்பு தென்னிந்தியாவிலேயே அமுல்படுத்தப்படலாயிற்று.

ஆனால் காலகதியில் இதே கோரிக்கை வட இந்தியாவிலும் எழுந்தது. இதனைப் பின்பற்றி பம்பாய் மாநிலத்தில் வாழ்ந்து வந்த மராட்டி, குஜராத்தி மொழி பேசும் மக்களிற்கும் இவ்வாறு 1960 ஆம் ஆண்டு மொழிவழி மாநில ரீதியான தீர்வு வழங்கப்பட்டது. அதேபோலவே பஞ்சாப் மாநிலத்தில் வாழ்ந்து வந்த பஞ்சாபி, இந்தி மொழி பேசும் மக்களுக்கும் 1966 ஆம் ஆண்டு மொழிவழி மாநில அமைப்புத் தீர்வு வழங்கப்பட்டது.

இதன் வரலாறு பெரிதும் கவனிக்கத்தக்கது. அதாவது தென்னிந்தியாவில் எழுந்த இனப்பிரச்சனைக்காகவே இந்தியாவில் மொழிவழி மாநில அமைப்புத் தீர்வு முதலில் எட்டப்பட்டது. ஆனால் பின்பு வட இந்தியாவிலுள்ள ஏனைய இனங்களின் பிரச்சனைக்கும் அது பொருந்தும் என்பதால், காலகதியில் வட இந்தியாவுக்கும் அது விஸ்தரிக்கப்பட்டது. ஆனால் இலங்கையின் போக்கு வேறு விதமாய் உள்ளது. அதாவது இலங்கையில் தமிழ் மக்களின் பிரச்சனையாகவே இனப்பிரச்சனை எழுந்தது. ஆனால் அரசு இதனைச் சிங்கள மக்களுக்குரிய பிரச்சனையாய்ப் பொதுமைப்படுத்தி இனப்பிரச்சனை என்ற வடிவத்திலிருந்து விலகி அதிகாரப்பரவலாக்கல் என்ற வடிவத்துள் வைத்து ஒன்பது மாகாணங்களுக்குமுரிய பொதுப்பிரச்சனையாக மாகாணசபைத் தீர்வை முன்வைத்துள்ளது. எனவே மேற்கூறிய இரு அடிப்படைகளிலிருந்தும் பார்க்கும் போது இலங்கையின் தீர்வுத் திட்டத்தை இந்தியா மாதிரியான தீர்வு என்று ஒரு முட்டாள்கூடக் கூறமாட்டான்.

இந்தியாவின் மொழிவழி மாநில அமைப்புடன் இலங்கையின் மாகாணத்தீர்வை அமைப்பு ரீதியாக ஒப்பிட முடியாது என்பது சரியானதேதான். ஆனால் அதேவேளை அரசியல் இராஜதந்திர அறிவு கருதி இந்திய மொழிவழி மாநிலத் தீர்வின் அரசியல் உள்நோக்கத்தை விளக்க வேண்டியதும் அவசியமாகும்.

தென்னிந்தியாவில் பல மொழிகளைப் பேசும் ஒரு திராவிட இனம், இனரீதியாக திராவிட நாட்டுக் கோரிக்கையை முன்வைத்தது. மொழிவழி அரசுகளாகத் திராவிடரைப் பிரிப்பதன் மூலமே திராவிட நாட்டுக் கோரிக்கையை வலுவற்றதாக்கலாம் என்பது நேரு அரசாங்கத்தின் முடிவாகும். மொழிவழி மாநிலத் தீர்வை உருவாக்குவதன் மூலம் ஒரு புறம் பிரிந்து செல்வதற்கான திராவிட நாட்டுக் கோரிக்கையை இல்லாமல் செய்யலாம் என்பதுடன், மறுபுறம் இனப்பிரச்சனைக்கான தீர்வாகவும் அமையலாம் என நேருவுக்கு ஆலோசனை கூறியவர் மலையாளியான கே. எம். பணிக்கராய் இருக்க வேண்டும் எனக் கருதப்படுகின்றது.

இவ்வாறாக மொழிவழி மாநில அமைப்பை உருவாக்குவதென விற்கு வருவதாக முடிவெடுத்தே நேரு விசாரணைக் கொமிசனை நியமித்தார். ஆனால் தீர்வை எட்டுவதில்லை என்ற முடிவுடனேயே பிரேமதாசா பெருந்தொகையான உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழுவை நியமித்தார்.

ஒன்று திராவிட நாட்டுக் கோரிக்கைக்கு எதிரானது, மற்றது தமிழீழக் கோரிக்கைக்கு எதிரானது என்ற வகையில் இரண்டிடமும் ஒரே உள்ளக் கிடக்கை பொதிந்துள்ளது. ஆனால் இதில் கவனிக்கக் கூடிய வேறொரு அம்சமும் உண்டு. அதாவது இந்தியாவில் பெருமளவிற்கு மொழிவழி, மதவழி அடிப்படையிலேயே தேசிய இனப்போக்கு காணப்படுகின்றது. தென்னிந்தியாவில் பிரதானமாக மொழிவழிப் போக்கே மேலோங்கியும் உள்ளது. எனவே பொதுவாக தென்னிந்தியாவில் பொதுவான திராவிடப் பொதுப்பண்பாடு என்ற அடிப்படையிலான ஒரு திராவிடத் தேசியம் வளரத்தடையாக மொழிவழி அமைப்பு உருவாக்கப்பட்ட போதிலும் மொழிவழியான தேசிய இனத்தின் அடித்தளத்தை அம்மொழிவழி அமைப்பு பெருமளவிற் சிதைக்கவில்லை எனலாம். ஆனால் இலங்கையில் தமிழ் மொழி பேசும் ஒரு கூறான மக்கள் கூட்டத்தின் தேசியத் தன்மையை சீரழிக்கக் கூடிய வகையிலேயே மாகாணத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

(நேரு தீர்மானம் எடுத்தபின்பே இதற்கான விசாரணைக் கொமிசனை நியமித்தார். ஒரு தீர்)

இந்தியா கூறும் சமஸ்டி அமைப்பு முறை உண்மையில் ஒரு சமஸ்டி அமைப்பு முறையல்ல என்பதை தெரிந்து வைத்திருக்கின்ற போதிலும், இந்தியாவின் தீர்வை ஒத்ததே தனது மாகாணசபையுமென இலங்கை கூறுவது வேடிக்கைக்கு இடமானதும், உண்மைக்கு மாறானதுமாகும். ■

# தமிழ் மக்களின் சுயகௌரவத்தை காப்பாற்றியது ஆயுதப் போராட்டமே

**இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீனச்சார்பு) ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான திரு. நா. சண்முகதாசன் அண்மையில் தமது 74 வயதில் இலண்டனில் மாரடைப்பால் இயற்கை எய்தினார். அவரை நினைவுகூருமுகமாக திரு. ச. தியாகராசாவினால் எழுதப்பட்ட இவ்வாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (சீனச்சார்பு பிரிவு) ஸ்தாபகத் தலைவரும், இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான சண்முகதாசன் அண்மையில் இலண்டனில் மாரடைப்பால் காலமானார்.

தனது இருபத்து மூன்றாவது வயதில் பல்கலைக்கழக பட்டப்படிப்பை பூர்த்தி செய்த பின்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் முழுநேர அங்கத்தவராக இணைந்து கொண்ட அவர் அன்று முதல் நோய் வாய்ப்பட்டு காலமாகும் வரை தனது பணியில் சலிப்பின்றி உழைத்து வந்தவர் அவர்.

இலங்கை முழுவதும் தழுவிய வர்க்கப்புரட்சி ஒன்றை ஏற்படுத்துவதில் இவர் நம்பிக்கை கொண்டிருந்தபோதும், தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டங்களிலும் வட பகுதியில் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களிலும் முன்னின்று உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான தமிழ் மக்களின் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஆதரித்து எழுதியும், பேசியும், செயற்பட்டும் வந்தவர் என்பது சிறப்பாகக் குறிப்பிடக்கூடியதாகும். குறிப்பாக இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தின் பிரசன்னத்தை எதிர்த்து விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டத்தை பெரிதும் மதித்துப் போற்றிய இவரது மரணம் துயரத்தை தருவதேயாகும்.

திரு. நா. சண்முகதாசன் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை முன்மொழிந்தவர்களில் குறிப்பிடக்கூடிய ஒருவர் என்பதும், வடபகுதியில் கோரத் தாண்டவமாடிய தீண்டாமைக்கு எதிராக முனைப்பான போராட்டத்தை வழி நடத்தியவர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியலில் பாராளுமன்றத்தை "கள்வர்கள் குகை" என்றே வர்ணித்த திரு. நா. சண்முகதாசன் பெருந்தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஒழுங்கமைத்த புதிய செங்கொடிச் சங்கத்தின் கீழ் தொழிலாளர்களை அரச இயந்திரத்திற்கு எதிராக கிளர்ந்தெழ வைப்பதில் பெரும் பங்காற்றினார். இவ்வகையில் 'கற்றனில்' மேபீல்ட் தோட்டம், தலவாக்கலவின் வட்டகொடத் தோட்டம், பதுளையின் கீனாகெலத் தோட்டம் என்பவற்றில் தொழிலாளருக்கு எதிராகத் தோட்ட நிர்வாகங்களினால் ஏவப்பட்ட பொலிசாரை எதிர்த்து அத்தொழிலாளர்கள் தீரமுடன் செயற்படுவதற்குச் சண்முகதாசன் உந்துசக்தியாக விளங்கினார்.

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சனையில் சிங்கள பேரினவாதக் கோட்பாட்டிற்கு எதிரான நிலைப்பாட்டையே எப்பொழுதும் வலியுறுத்திய சண்முகதாசன், ஆயுதம் தாங்கிய போராட்டமாக பரிணாமம் பெற்றதையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றவர் ஆவார்.

"பிற்போக்கு வாத இனவாத சிங்கள அரசுக்கு எதிராக ஆயுதம் தாங்கிப் போராடுவதற்கான தீர்மானத்தைத் தமிழ் இளைஞர்கள் மேற்கொண்டது மிகச் சரியானதே. இதன் மூலமாகத் தமிழ் மக்களின் சுயகௌரவத்தை அவர்கள் காப்பாற்றியதும் அல்லாமல், சர்வதேச ரீதியாகவே கெரில்லா போராட்ட வரலாற்றில் ஒரு புகழ் வாய்ந்த அத்தியாயத்தையும் எழுதியுள்ளார்கள்."

இவ்வாறு "பொதுவுடமைவாதி எனக் கூறிக் கொள்வதால் மனம் வருந்தாத ஒரு அரசியல்வாதியின் வாழ்க்கைக் குறிப்பு" என்னும் தனது நூலில் திரு. சண்முகதாசன் குறிப்பிட்டிருக்கின்றார். அத்துடன் தம்மை விடவும் பல மடங்கு வளர்ச்சி பெற்ற எதிரியை எதிர்க்க முற்பட்டது அவர்களின் உறுதியையும் வீரத்தையும் எடுத்துக் காட்டுவதாகவே உள்ளது என்றும் அவர் அந்நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். இந்திய இராணுவம் இந்த மண்ணிலிருந்து விரட்டப்பட வேண்டும் என்பதிலும் அக்கறை காட்டிய சண்முகதாசன் அவர்கள் தமது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "இந்தியப் படையினர் இலங்கையில் இருக்க வேண்டும் என்பதையே ஈ. பி. ஆர். எல். எவ் வினர் விரும்புகின்றனர். இந்திய இராணுவம் வெளியேறி விட்டால் சிங்களவர்களிடமிருந்து தமிழ் மக்களைக் காப்பாறுவது யார் என்று அவர்கள் இதற்காக கேள்வி எழுப்புகின்றனர். ஆனால் இதற்கான பதில் சுலபமானது. இந்திய இராணுவம் இலங்கைக்கு வருமுன்பு தமிழ் மக்களை யார் காப்பாற்றினார்கள்? இளைஞர்கள் ஓரணியில் நின்று மக்களையும் ஆயுதபாணிகளாக்கி யுத்தத்தைத் தொடர்ந்து நடத்தினால் தமிழர்களைப் பாதுகாப்பதற்கு இந்தியப் படை தேவையற்றது" என்றார்.

சண்முகதாசன் மறைந்து போய் விட்டாலும் அவரது வாழ்க்கை அநுபவமும் அவரது பட்டறிவின் போதனைகளும் வருங் காலத் தலைமுறைக்கு பாடமாக அமையுமென அறுதியிட்டுக் கூறமுடியும் ■



# நிவாரணம்

சிறு கதை

ஜோசப் பாலா

பாடசாலை ஓய்வு நாட்களை எதிர்பார்த்திருக்கும் மாணவர் மனங்களின் எண்ணங்கள் பலவிதம் சிறகடிக்க, படிப்பு சுமையாக இருக்கும் சிலருக்கு, விளையாட்டு சுவையாக இருக்கும் சிலருக்கு, ஓய்வு மகிழ்வைத் தரும் சிலருக்கு ஆனால் சீலனுக்கோ உறவுகளை, ஊரை, தான் வாழ்ந்த வீட்டை, சூழலைச் சென்று தரிசித்து விட வேண்டும் என்று தான் ஆவலாய் இருந்தான். நினைத்தாலும் உடன் சென்று வர முடியாத தூரதேசமாகிவிட்டது மன்னார்ப் பிரதேசம்.

அவன் கல்விக்காக கடந்து வந்த பல தடைகள் புதிய சூழலுடன் யாழ். நகரில் கல்வி பயின்று தன் அறிவுப் பசியைத் தீர்க்க முனைந்தான். புதிய நண்பர்கள் கூடிய விடுதி வாழ்க்கையில் சீலனுடன் இளவாலையைச் சேர்ந்த செருபீம் என்ற அவனது வயதையொத்தவனும் விடுதி நண்பராக இணைந்து கொண்டார்கள்.

"செருபீம் உனக்குச் சொந்த வீடு இங்கு பத்து மைலுக்குள் இருந்தும் லீவுக்கும் போகாம நிக்கிறியே. ஏன் போனாலும் உடனே வந்து விடுகிறியே உனக்கு அங்க நிக்கப் பிடிக்கேல்லையா?" என தன் வீட்டின் ஆர்வத்திற் கேட்பான் சீலன்.

"சீலன் வீட்டில் நிற்க யாருக்கு விருப்பம் இல்லை. யாழ்ப்பாணத்தில இருக்கிறபடியாத் தானே படிப்புகளுக்கு ரியூசன் எடுத்து சேர்ந்து படிக்கிறதால நல்லாப் படிச்சிடலாம் எண்டுதான் மச்சான் நான் போனாலும் உடன வந்திடுவன். எங்கட ஊரில் செல் வந்து அப்பாவைக் கொண்டிட்டுது. இனி நானாவது படிச்சு ஒரு நிலைக்கு வராட்டி யார் பார்ப்பினம் எங்களை".

"செருபீம், நான் தான் போகவர வசதிக் குறைவால நிக்கிறன். உங்களுக்குத்தான் அதிக தூரமே இல்லை. எங்கட ஊரில் வசதி வாய்ப்புக்கள் இங்குபோல இல்லைத்தான் ஆனா தோட்டம் துரவுகள் எப்பவும் விளைஞ்சு கொட்டும். மூன்று போக விளைச்சல் கிராமம்தான் முருங்கன். ஐந்து வயதில் அப்பனைப் பறி குடுத்திட்டம். வீட்டில் ஆறு பேரும் சின்னஞ் சிறுசு எண்டுதான் எங்கட கோவில் சுவாமி என்னையாவது படிச்சு முன்னுக்கு வரட்டும் என்று அனுப்பினதால இங்க வந்தன்" எனத் தன் சோகச் சுமைகளை சொல்லிக் கொண்டான் சீலன்.

"இங்க உனக்கு என்ன குறை சீலன்? படிப்பிலையும் நீ ஒரு புலியாயிட்டாய். இந்த முறை சோதினையிலையும் வென்றிடுவாய். இத்தின வருசம் படிச்சதில் இந்த பத்தாம் ஆண்டுப் பரீட்சை தானே எங்கட தலை எழுத்தையே நிர்ணயிக்க போகுது. இதில நீ அடிச்சிடுவாய் என்ற நம்பிக்கை எனக்கிருக்கு மச்சான். நீ நினைக்கிறதைப் பாத்தா செருபீம் உனக்கே உன்னில நம்பிக்கை இல்லாமப் பேசிறாய் பரீட்சையில படிக்கிறது மட்டுமல்ல, எதிலும் துணிவும் வேணும். அதை இழந்தா தோல்விதான் செருபீம். எனப் பரீட்சைப் பதற்றம் இருவர் பேச்சிலும் தொனித்தது.

குப்பி விளக்குடன் இடம் பெயர்வுகளும், பங்கர் வாழ்க்கையும் பழக்கப்பட்டு விட்ட பழையகால வாழ்க்கை போல பரீட்சையும் பல வித கலக்கத்தோடு பொம்பர் அடி. செல்லடி மத்தியில் பதற்றமுடன் நடந்து முடிந்தது. இம்முறை எப்படியாவது வீடு சென்று வரவேண்டும் என நினைத்தவனாய்ச் சிந்தனை சிறகடித்த போது.

"சீலன் நீ ஏதோ வெளிநாட்டில் நிக்கிற மாதிரி வீட்டாரைக்காணாமல் இங்கேயே நிண்டு படிச்சு முடிச்சிட்டாய். வீட்டிலையும் உன்னைப் பார்க்க ஆசையிராதா? இந்த லீவிற்குப் போயிற்று வாவன்"

"எனக்கு எனது கிராமத்தை, வீட்டைப் பார்க்க ஆசைதான் செருபீம். என் அம்மா, சகோதரன், அந்தக் கிராமத்து உறவுகளைத் தரிசிக்க ஆசையாய் தான் இருக்கு. அதால இந்த முறை நடந்தாவது போகத் தான் போறேன்"

"சீலன் என்ர சைக்கிளைத் தாறன் அதில போய் எல்லோரையும் ஒருக்கால் பாத்திட்டு மார்கழி லீவைக் கழிச்சு வாவன். நானும் என் வீட்டில் நிண்டு லீவில ஊர் முந்திரிகை, வாழைத் தோட்டத்தை, எங்கட கிராமத்தை, எங்கட சொந்த பந்தங்களை சந்திச்சு வாறேன்" எனத் தங்கள் பயணத்தை இருவழியாய் மேற்கொண்டனர்.

நகரம் என்ரை கிராமம் என்ன எல்லாமே களையிழந்த நிலையில் பயண அனுபவங்களும் மனதை நெருட்டியது. நினைத்தவுடன் காலை ஏறி மாலை அடையும் இடங்கள் எல்லாம் நாட்கள், வாரங்கள் என பயணங்கள் தொடர்வதும் மிதிவண்டி, உழவுயந்திரம், கடற்பயணம், கால் நடைப்பயணம் என மூன்று தினங்கள் சென்று மடு அகதி முகாமை அடைந்து விட்டான் சீலன்.

ஐந்து வருடங்களின் பின்பு அவனது உறவின் தரிசனங்கள் பலரது இழப்புக்களுடன் சொந்த மண்ணிலே சொந்த உறவுகள் அகதிகளாக மாற்றப்பட்ட புதிய அனுபவங்கள் அவனுக்கும் புதிய பாடத்தைக் கற்பித்தது. புத்தக பூச்சியாய் பரீட்சைக்கு மட்டும் படித்து வாழ்க்கையிற் காணும் நிலைகளுக்கு பதில் காணமுடியாத விரக்தி அவனை பெரிதும் வாட்டியது. இன்று அவனும் ஒரு புதிய அகதியாக பதியப்பட்ட போது அவன் மனதில் பல கேள்விகள் எழுந்தன.

அகதி வாழ்க்கையில் நிவாரணத்திற்காக வாழும் சனத்தொகைக்கு ஒருவனாக மட்டும் வாழும் வாழ்க்கையில் அர்த்தங்கள் என்ன? நானும் முடங்கி, பதுங்கி முதியவர்களுடன் ஒருவராக உணவுக்காக வாழும் உயிர்ப்பிராணியாகி விட்டேனா? கற்கும், கல்விக்கும் வாழ்க்கைக்கும் உள்ள முரண்பட்ட நிலையும் தன்கிராமமே இடம் பெயரும் அவலநிலை சீலனின் மனதில் அமைதியைக் குலைத்தது.

இந்தக் கொடிய வாழ்க்கையை ஏற்க சீலனின் மனதில் இடம் தரவில்லை. உறவினரதும், வீட்டாரினதும் உபசரிப்புக்கள் தன்னை ஓர் உயர் நிலையில் வைத்துப் பார்ப்பதை உணர்ந்தவன், தன்னிடம் எதிர்பார்க்கும் பொருத்தமற்ற சூழலையும் ஊரார் அனுபவித்து வரும் இன்னல்களை எண்ணிக் கலங்கியவனாக இதுவரை ஏதோ ஓர் உலகத்தில் வாழ்ந்து விட்டோம் இனி வாழ்க்கையிற் தரிசிக்க வேண்டியவற்றிற்கு பதில் கண்டு வெற்றி கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்தவனாய் தன்னையே மாற்றிக் கொண்டான் சீலன்

இளவாலை செல்லப் புறப்பட்ட செருபீம் சென்ற முறை தன் சித்திரை லீவுப் பயணத்தை மனதில் இரைமீட்டுப் பார்த்தான்.

"தம்பி நீ நல்லாய் வளர்ந்திட்டாய். இனி இங்க இருந்தா உன்னைக் காப்பாற்ற ஏலாது. இந்தப் பக்கம் செல்லடியும், பொம்பரும் சுத்துது. பிறகு அவன்கள் உன்னை விடமாட்டாங்கள்." அம்மாவின் முணுமுணுப்பை ஏற்க மறுத்தான் செருபீம். "எனக்கு எப்ப லீவு விடும் வீட்டாரோட இருப்பம், தோட்ட வேலை பாப்பம் எண்டா என்னை ஏனம்மா அன்னியனாய் பிரிச்சுப் பேசுறீங்கள்"

"தம்பி நீ எங்கட நிலை புரியாமல் கதைக்கிறாய். இப்ப உள்ள குடும்பப் பொறுப்புக்கு, நீ தானே முகம் கொடுக்க வேண்டும். அதுதான் இங்க இருந்து இந்தச் சண்டையளில் மாட்டுப்படாம அங்கால எங்கையும் போனால் தானே நாலு காசு உழைச்சுக் காப்பாற்றலாம். அது தான் உன்னை கொழும்புப் பக்கம் அனுப்பினா வெளியில நிக்கிறதுகளிட்டச் சொல்லி அங்காலை எடுப்பிக்கலாம். எதுக்கும் உடன புறப்படப்பார் தம்பி" என்றாள் செருபீமின் அம்மா.

மீண்டும் நரக வாழ்க்கை தானா என நகரவாழ்க்கையை எண்ணும்போது சலித்துக் கொண்டான். வளம்கொழிக்கும் பிரதேசம், முந்திரிகை, வெற்றிலை, வாழை, கிழங்குவகைகள் என பல்லினப் பயிர்வளர்த்து வளங்கொண்ட தன் கிராமத்தைத் தரிசிக்கச் சென்ற செருபீமுக்கு தன் சூழல் தன்னை தன்னை அந்நியப் படுத்திப் அகதியாக்கிவிட திட்டமிட்டதை எண்ணி வேதனைகளைச் சுமந்தவனாய் திரும்பியது கூட இவ்வருட படிப்பின் முடிவைக் கண்டு செல்வோம் என்ற முடிவோடு தான் அந்த நினைவுகள் கரைந்து மீண்டும் வீட்டாரை தரிசிக்கக் கிட்டிய மார்கழி லீவும் வந்தது. ஆனால் இன்றைய நிலைகள் எதிர்பாரா மாற்றங்களை வீட்டிலும் மனமாற்றம் ஏற்பட்டு இருக்கும் என்ற நினைவோடு பாடசாலை விட்டுப் புறப்பட்டான் செருபீம்.

மார்கழி லீவு நத்தார், புத்தாண்டு மகிழ்வுகள் யாவும் சிதறடிக்கப்பட்ட நிலையில் இளவாலை மட்டுமல்ல அதனைச் சூழ்ந்த பல பகுதியும் மானிப்பாய் அந்தோனியர் கோவிலில் அகதியாக்கப்பட்ட நிலையில் வாழ்வதைக்கண்ட செருபீமிற்கு இன்றும் வீட்டார் கூறியது இதுதான், "தம்பி இங்கு நிற்காத எப்பிடியும் கொழும்பிற்குப் போய்விடு. அங்க படிக்கலாம். அங்காலயும் போகலாம். அகதிக் காசும் கிடைக்கும்." என்ற குறுக்குவழிச் சிந்தனைகள் அவனது பயணத்தைத் தூண்டவைத்தது.

பாடசாலை விடுமுறை எதிர்பார்த்ததை விட ஏமாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் பரீட்சை முடிவுகளை அறிய நகருக்குப் புறப்பட்டான் செருபீம்.

* * *

மிதிவண்டியில் மன்னாரில் இருந்து புறப்பட்டு யாழ் நகர் வரும் போது அவனது மனச் சுமைகள் பலமாகவே அழுத் நினைவுகளை எண்ணியவனாக புதிய பாடத்தைக் கற்று வந்தவனுக்கு பரீட்சை முடிவுகள் வியப்பாய் இருக்கவில்லை. நண்பனின் மிதிவண்டியைக் கொடுத்துவிட வேண்டும் என்ற உந்துதலும், களைப்பின் மிகுதியும் பாடசாலையில் நண்பனைக் கண்டதும் இருவரும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். பரீட்சை முடிவுகள் பலருக்கு மகிழ்வைக் கொடுத்த போதும், சீலன் அதைவிட மேலாக தான் பிறந்த மண்ணின் நிலையை எண்ணிக் கலங்கியவனாக இருந்தான்.

பாடசாலை மண்டபத்தில் முடிவுகள் அறிவிக்கப்பட்டு அதிபர் உரையாற்றினார். சீலன் பாடசாலைக்கு பெருமை தேடி தந்ததோடு திறமைச் சித்தி பெற்றுக்கொண்டமைக்காக பாடசாலை நிர்வாகம் புலமைப் பரிசில் வழங்கியுள்ளது. என தலைமை ஆசிரியரின் புகழாரம் பாடசாலை மண்டபம் அதிர கரகோசத்துடன் மாணவர்கள் சீலனை வாழ்த்திக் கொண்டனர்.

நன்றி தெரிவிக்க எழுந்தான் சீலன். பாடசாலை அரங்கு நிசப்தமாக அரங்கில் இருந்த எல்லோரும் அவனது குரலுக்கு செவி கொடுத்தபோது, "உண்மையில் எனக்குக் கல்விச் செல்வத்தைத்தந்து உருவாக்க உதவிய ஆசிரியர், மாணவர்களின் பங்களிப்புத்தான் இந்தப் பாராட்டுப் பெறவும் காரணமாய் இருந்தது. இந்த மண்ணில் கற்ற கல்வியை இந்த மண்ணிற்கே பயன்படுத்தவும் என் முயற்சிகள் பயன் தர வேண்டும். ஆனால் இன்று என் கிராமம், ஏன் எனது இனமே நிவாரணம் தேடும் ஜீவன்களாக சொந்த மண்ணிலே அகதிகளாக அலைகின்றது. என் சொந்தக் கிராமம், அன்று விவசாயத்தில் பச்சைச் சேலை கட்டித் துள்ளித் திரியும் பெண்போல விவசாயிகளின் உழைப்பும் அணிகலனாக அழகு பூத்து இருந்தது. இன்று அவை நிர்வாணமாக்கப்பட்டு விட்ட கன்னியாக மாற்றானின் கால் பட்டு சிதைந்து கிடக்கின்றது. அந்தக் கறையைப் போக்கி என் உறவுகள், என் கிராமத்தவர், என் குடும்பத்தவருக்கு நிம்மதியாக வாழும் நிவாரணம் கிடைக்க அவர்களை அந்த மண்ணிலே உழைத்து உண்டு மகிழும் மக்களாக வாழவைக்க எனது கல்வியோடு என் மண்ணையும் மீட்டு எடுக்கும் பணியிலும் இணைந்து, இரண்டும் சேர்ந்த வெற்றியையே எதிர்பார்க்கிறேன். இதுவே எனது இலட்சியமும் ஆகும், என்ற வீரம் கலந்த வைரவரிகள் எல்லோர் இதயத்திலும் பலமாய் தைத்துக்கொண்டது.

நான் மட்டும் வாழ்ந்து வளரமுடியாது. நமது இனம், மொழி எனப் பேச்சோடு இராது அதைக்காத்து வளர்க்க எமது மண்ணை அதில் வாழும் மக்களை சுதந்திரமாக வாழவைப்பதில் எமது பங்களிப்பை செய்வதற்காய் என்னை மாற்றிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எம் உடன் பிறப்புக்கள் நிவாரணம் இன்றி அகதியாய் அலைய நான்மட்டும் ஒதுங்கி வாழ்வதில் பயன் இல்லை என்பதே என் எண்ணம். ஆகவே கல்வியும், என் கடமையும் இரு கண்களாக ஏற்று நாம் சொந்த மண்ணில் சுதந்திர வாழ்வு வாழ என் கிராமத்துக்குச் சென்று வாழ விரும்புகிறேன்" என நண்பர்கள், ஆசிரியர்களுக்கு நன்றி கூறி பிரியா விடை கூறினான்.

எல்லோர் முகத்திலும் சீலனின் கூற்றின் அர்த்தங்கள் தெரிந்தன. கடமையும் உண்டு என்ற உணர்வும் உறுத்திக் கொண்டது. இன்று கொழும்பில் நடக்கும் நிலைகளும், சீலன் கூறும் கருத்துக்களும் உறுத்த செருபீம் கண்கலங்கியபடி கட்டித் தழுவியவனாக.

"அந்தரிக்கும் ஆத்துமாக்களாய் அலையும் அகதி வாழ்க்கையை உணராமல் மாய வலையில் சிக்கி அக்கரைப் பச்சையாய் எண்ணி அலைவதைவிட சுதந்திர புருசர்களாய் எம் மக்களுக்கு நிரந்தர நிவாரணம் கிடைக்க என்னையும் மாற்றிக் கொண்டேன்", என அவன் பாதையில் நண்பனும் நடந்தான். ■

--- ஜோசப் பாலா

# படையினரின் இன அழிப்புக்கு குடாநாடு இலக்காகுமா ?

புலிகள் இயக்கத்திற்கு எதிராகப் போர் புரிவதாக உலகிற்கு கூறிக்கொண்டு சிங்கள அரசு, தமிழின அழிப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை பெரும்பாலான எமது மக்கள் இதுவரை சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

இத்தீவிர இன அழிப்பு முயற்சிகள், இன்று தென்தமிழீழத்தில் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.

ஈழத்தமிழினத்தை இனப்படுகொலை செய்து எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்க, சிங்களப் பேரினவாதம் திடசங்கற்பம் பூண்டிருப்பதை வெளிப்படையாகவே காணக்கூடியதாக உள்ளது.

விடுதலைத் தாகம் கொண்டு உரிமை கோரி கிளர்ந்தெழும் மக்கள் இனங்களை இனப்படுகொலை செய்து அம்மக்களது உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவது நீண்டகாலம் தொட்டே ஆதிக்க சக்திகளின் ஒரு பண்பாக இருந்து வருகின்றது.

பொதுவாக உலகம் முழுவதும் நடைபெற்ற -நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற -இன அழிப்புக்களை இரண்டு வகைகளுக்குள் அடக்குவது வழக்கம்.

ஒன்று, குறித்த இனமக்களை, நேரடியாகவே படுகொலை செய்வதன் மூலம் அம்மக்கள் இனத்தை அழித்தொழிக்க முயல்வது. இரண்டு, அம்மக்களினத்திற்கு மூலாதாரமாக விளங்கும் மொழி, நிலம், பண்பாடு, பொருளாதார வாழ்வு ஆகிய வற்றை சிதைத்து இனத்தனித்துவத்தை இல்லாமல் செய்வது.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் 60 இலட்சம் யூத மக்களை நச்சுவாயு அறைகளுக்குள்ளும், தடுப்பு முகாம்களில் வைத்துச் சுட்டுக் கொன்றும் ஜேர்மனிய சர்வாதிகாரி கிட்லர் ஒரு இன அழிப்பில் ஈடுபட்டான். இது போல சுமார் 500 வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க மண்ணின் பூர்வீகக் குடிகளான செவ்விந்திய இனத்தையும், தென் அமெரிக்கக் கண்டத்தின் ஆதிக்குடிகளையும் முறையே ஆங்கிலேயர்களும் யப்பானியர்களும் இதே வழியில் இனப்படுகொலை செய்து அவ்வின மக்களை முற்றாகவே அழித்து அவர்களது தாயகத்தையும் அபகரித்துவிட்டனர். இந்தோனேசியாவின் ஆளுகைக்குள் இருக்கும் கிழக்கு தீமோர் மக்களும் இவ்வகையான இன அழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். பொஸ்னிய மக்களும் இவ்விதமானதொரு கொடூர இனப்படுகொலைக்கு ஆளாகியுள்ளனர்.

இன்று, இந்த நவீன யுகத்தில், பெரும்பாலான ஆதிக்க அரசுகள் ஓர் இன மக்களைப் படுகொலை செய்வதற்குப் பதிலாக அத்தேசிய இனத்தின் மூலாதாரங்களை படிப்படியாகச் சிதைத்து நுட்பமான முறையில் இன அழிப்பை மேற்கொள்கின்றன.

ஆனால் சிங்கள ஆட்சியாளர்களோ இந்த இரண்டு வழிகளையும் பயன்படுத்தி தீவிரமான முறையிலும் -கோரமான வடிவங்களிலும் -தமிழின அழிப்பில் ஈடுபடுகின்றனர்.

புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள வட தமிழீழத்தில் ஒருவிதமாகவும், சிங்களப் படைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தென்தமிழீழத்தில் வேறு விதமாகவும், இந்த இன அழிப்பு முயற்சிகளில் சிங்கள அரசு இறங்கியுள்ளது.

தென்தமிழீழத்தைப் பொறுத்த வரையில், அது சிங்கள ஆயுதப் படைகளின் இரும்புப் பிடிக்குள் சிக்கிக் கிடக்கின்றது. அதனால் அது வெளியுலகத் தொடர்புகளை முற்றாகவே இழந்து, தனித்துக் கிடக்கின்றது. இதன் காரணமாக அப்பிரதேசத்தில் ஒரு கோரமான வடிவத்தில் -வெளியில் தெரியாதபடி -தமிழ் இனஅழிப்பு முயற்சிகள் நடக்கின்றன.

படுகொலைகள், பாலியல் வன்முறைகள், நில அபகரிப்புக்கள், தமிழர்களை அவர்களின் சொந்தக் கிராமத்தில் இருந்து விரட்டியடித்தல், அவர்களின் பொருளாதார வாழ்வைப் பகிரங்கமாகவே சிதைத்தல் என்று ஒரு உச்ச வடிவத்தில் தென் தமிழீழம் இன அழிப்புக்கு உள்ளாகிக் கொண்டிருக்கின்றது.

'இரண்டாவது ஈழப்போர்' என அழைக்கப்படுவதும் கடந்த 34 மாதங்களாக தொடர்ந்து நடைபெறுவதுமான இந்தப் போரில் தென் தமிழீழத்தில் மட்டும் ஏறக்குறைய 5000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் சிங்கள ஆயுதப்படைகளினாலும் துரோகக் கும்பல்களினாலும் பல்வேறு முறைகளில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிங்களப்படைகளின் அட்டூழியங்களுக்கு முகம் கொடுத்தபடி தமது சொந்தக் கிராமங்களிலேயே வாழ்ந்து வந்த தமிழ் மக்களை அங்கிருந்து அடித்து விரட்டி அகதி முகாம்களில் வாழும்படி படையினர் நிர்ப்பந்தித்துள்ளனர். இதன் காரணமாகவும், உயிர் அச்சத்தின் காரணமாகவும் தென்தமிழீழத்தின் பெரும்பகுதி மக்கள் தமது வீடுகளை விட்டு புலம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் காடுகளிலும் மற்றும் பாதுகாப்பான பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்விதம் புலம் பெயர்ந்த தமிழர்களின் கிராமங்கள் பலவற்றில் சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியேற்றி நில அபகரிப்பும் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேசமயம் தமது சொந்தக் கிராமங்களில் வாழ்கின்றன தமிழ் மக்களினது பொருளாதாரப் பலத்தை அடியோடு அழிக்கும் முயற்சியிலும் சிங்கள அரசு இறங்கியுள்ளது. தென்தமிழீழத்தைப் பொறுத்தவரை 90% க்கு மேற்பட்ட மக்களது பொருளாதார வாழ்வு விவசாயத்திலும் மீன்பிடித் தொழிலுமே தங்கியுள்ளது. ஆனால் இங்கே விவசாயமும் மீன் பிடியும் படையினரால் தடை செய்யப்பட்டுள்ளன. . சில வேளைகளில் சில பகுதிகளில் விவசாயத்திற்கு அனுமதி வழங்கிவிட்டு அறுவடை நேரத்தில் வயல்களுக்குச் சென்று பயிர்களை அழித்துவிடுவது சிங்களப்படைகளின் ஒரு



வழக்கமாகவே இருந்து வருகின்றது. தமிழர்களிடம் எஞ்சியிருக்கும் சேமிப்புக்களை இல்லாதொழித்து அவர்களை ஒட்டாண்டிகளாக்கி விடுவதுதான் சிங்கள அரசின் நோக்கம்.

இவ்விதமான திட்டமிட்ட நடவடிக்கைகளின் மூலம் தென்தமிழீழத்தின் மக்களை நாடோடிகளாக்கி உணவிற்காக சிங்கள அரசிடமே கையேந்தும் மக்களாக மாற்ற சிங்கள அரசு முயற்சித்துக் கொண்டிருக்கின்றது.

இதனுடைய நோக்கம் தென்தமிழீழ தமிழர்களது தேசிய பலத்தைச் சிதைத்து அங்கே தமிழர்களின் விகிதாசாரத்தைப் பெரிதும் குறைத்து விடுதலைப் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துத் தென் தமிழீழத்தைச் சிங்கள மயமாக்குவதுதான்.

இதேவேளை வடதமிழீழத்தைப் பொறுத்தவரை இனப்படுகொலையைத் தீவிரப்படுத்த சிங்கள அரசு முயன்று வருகின்றது. இதன் அடுத்த கட்டமாக வடதமிழீழத்தில் -குறிப்பாக யாழ். குடாநாட்டினுள் -பெரிய அளவில் இனப்படுகொலையைச் செய்து விடுதலைப் போராட்டத்தை நசுக்க சிங்களப் படைகள் ஆயத்தங்களைச் செய்துகொண்டிருக்கின்றன. கிளாலிக் கடற்பயணத்தை தடைசெய்தும், சிங்களப்படைகளை விலக்காமல் பூநகரிப் பாதையைத் திறந்தும் அதற்குரிய உகந்த சூழலை உருவாக்குவதில் சிங்கள அரசு தீவிரமாக வேலை செய்து வருகின்றது.

இப்படையெடுப்புக்காகவே பல நவீன போர் விமானங்களையும், பல உலங்குவானூர்திகளையும் கடற்படை விசைப்படகுகளையும் கொள்வனவு செய்துள்ளதுடன் புதிதாக ஆட்களையும் படைக்கு திரட்டி வருகின்றது என்பது வெளிப்படையான ஒரு உண்மை.

இப்படையெடுப்பு சிங்கள அரசு எதிர்பார்ப்பதுபோல வெற்றியாக அமையுமானால் தென்தமிழீழத்தில் சிங்களப்படைகள் செய்த அட்டூழியங்களை விட நூறு மடங்கு கொடுமைகளை குடாநாட்டில் அவை மேற்கொள்ளும். ஏனெனில் குடாநாடுதான் புலிகளின் கோட்டை என்றும், போராட்டத்தின் இதயம் என்றும், போருக்க வேண்டிய ஆள் -பொருளாதார பலம் இங்கேதான் உண்டென்றும், சிங்கள அரசு கருதுகின்றது. எனவே இதயத்தைப் பிடுங்கி, கோட்டையை உடைத்து, தமிழர்களின் பலத்தைக் குறைக்க பாரிய தமிழ் இனப்படுகொலையில் சிங்கள ஆயுதப்படைகள் ஈடுபடும்.

இத்தகையதொரு இனப்படுகொலைக்கு ஊக்கம் கொடுப்பது போலவே சிங்கள தேசத்தின் பெரும்பாலான பத்திரிகைகளும் அரசியல்வாதிகளும், பௌத்த மதத்தலைவர்களும், புத்திஜீவிகளும் எழுதியும் -பேசியும், சிங்கள இனத்திற்கு மேலும் மேலும் இனவெறியூட்டி பல்லாயிரம் சிங்கள இளைஞர்களைப் படையிலும் சேர்த்துவருகின்றனர்.

இந்த இன அழிப்புப் போருக்காகப் பெருந்தொகையான பணத்தை ஒதுக்கவும் சிங்கள தேசம் தயாராகவே இருக்கின்றது. "போர் மூலம்" தான் இனப் பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டுமென சிங்கள தேசம் ஒருமித்த குரலில் கூறுகின்றது. "போர் மூலம்" என்பதன் பொருள் தமிழின படுகொலை மூலம் என்பதேயாகும்.

ஆகவே போர்வெறிகொண்ட சிங்களப் பேரினவாதத்திடமிருந்து தமிழினம் தப்பிப் பிழைக்கவேண்டுமாயின் அந்தப் போரை ஒன்றுதிரண்டு -உறுதியுடன் -எதிர்கொள்ள வேண்டிய ஒரு வரலாற்றுத் தேவையையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிங்கள அரசும் அதன் ஆயுதப் படைகளும் மேற்கொள்ளும் தமிழின அழிப்புக்கு இடம் கொடுத்து அவமானத்துடன் அழிவதா? அல்லது வீரத்துடன் ஆயுதம் ஏந்திப் போராடி விடுதலை பெற்றுச் சுதந்திரமாகக் கௌரவமாக உயிர் வாழ்வதா?

வீரமும் அர்ப்பண உணர்வும் நிறைந்த சில ஆயிரம் இளம் வீரர்களைக் கொண்ட புலிகள் இயக்கம், சிங்களப் படைகளை தடுத்து நிறுத்தி கணிசமான மண்ணை விடுவித்து அதைப் பாதுகாக்க போராட முடியுமானால் இன்னும் சில ஆயிரம் தமிழ் இளைஞர்களும் இளம் பெண்களும் புலிப்படையில் சேரும்போது நிலைமை எப்படி மாறும் என சிந்தித்துப் பாருங்கள்...! ■




## தேச நிர்மாணிகளால் உடையார்கட்டு குளம் புனரமைப்பு

கிளிநொச்சி கோட்டத்திற்குட்பட்ட உடையார்கட்டு நீர்ப்பாசன குளத்தில் பாரிய திருத்த வேலைகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் தேச நிர்மாணிகளின் முயற்சியுடன் இத்திருத்த வேலைகள் துரித மாகச் செய்யப்பட்டது. இக்குள புனரமைப்பு வேலையினால் 5000 அடி நீளமான 26 அடி உயரமான அணைக்கட்டு திருத்தியமைக்கப் பட்டது. அண்மையில் இப்படியான புனரமைப்பு வேலைகள் பல தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# சிறீலங்கா அரசு அரசியல் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க இதுவே சிறந்த தருணம்

## ■ ஈழநாதம் பத்திரிகை கருத்து

தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் அண்மையில் பி. பி. சி. க்கு வழங்கிய பேட்டி கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளதோடு சிங்கள, தமிழ் அரசியல் வட்டாரங்களிலும் பல உணர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதாகவும் அறியமுடிகின்றது. இதனை வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களும் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இக்குழப்பத்திற்கும், பரபரப்பிற்கும் காரணம் தலைவர் பிரபாகரன் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக "தமிழர் தாயகத்தின் பூகோள முழுமை அங்ககீகரிக்கப்பட்ட சமஸ்டி அமைப்பு முறை முன்வைக்கப்பட்டால் அதைப் பரிசீலனை செய்ய நாம் தயார்" எனக்கூறியதேயாகும். அதாவது இனப்பிரச்னைத் தீர்விற்கு விடுதலைப் புலிகள் ஒரு தன்னாட்சி அதிகாரங்கள் அமையப்பெற்ற ஒரு சமஸ்டி ஆட்சித் திட்டத்தைப் பரிசீலிக்கத் தயார் என்பதே அதுவாகும்.

அதாவது வழமை போலவே தலைவர் பிரபாகரன் இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக தமது நிலைப்பாட்டைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் எடுத்துக் கூறியுள்ளார். இதில் சந்தேகத்துக்குரியதாகவோ, அன்றி கேள்விக்குரியதாகவோ எதுவும் இல்லை. இது குறித்த மேலதிக விளக்கங்கள் எவையும் எழுப்ப அவசியமுமில்லை.

இந்நிலையில் இனப்பிரச்சனை தீர்வு குறித்து அரசாங்கம் திட்டவட்டமாகத் தனது தீர்வுத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். இதுவே அரசுக்குரிய தடுமாற்றமாகும். இனப்பிரச்சனையில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் ஒருபோதும் ஒரு பார்வையாளனாகவோ, அன்றி மத்தியஸ்தனாகவோ இருக்கமுடியாது. ஏனெனில் இனப்பிரச்சனைக்கு அடிகோலியதில் இவர்களுக்கும் பெரும்பங்குண்டு. இதேபோன்று எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக்கட்சிக்கும் பங்குண்டு.

ஆனால், அரசாங்கம் இனப்பிரச்சனை தொடர்பாக தீர்வுத் திட்டம் எதையும் முன்வைக்கவில்லை. சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேலாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பார்வையாளனாக மட்டுமே இருந்து வருகின்றது. ஆனால், தீர்வுத் திட்டத்தை முன்வைக்குமாறு இன்றும் தொடர்ச்சியாகக் கோரியும் வருகின்றது.

இறுதியாக இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக ஏதாவது தீர்வுத் திட்டம் இருக்குமாயின் அதை முன்வைக்குமாறு தமிழக அரசிடமும் அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்கா கோரியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதாவது அரசாங்கம் தீர்வுத் திட்டத்தைக் கோருவதில் அக்கறையாக இருக்கின்றதே ஒழிய, இனங்பபிரச்சனையில் தன் பங்கை ஆற்ற முன்வரவில்லை.

ஆனால், அரசு இதற்குச் சாக்குப் போக்குச் சொல்லப் பார்க்கின்றது. தனது பொறுப்பில் இருந்து விடுபட்டு விடுதலைப் புலிகள் தீர்வுத் திட்டம் எதையும் முன்வைப்பதானால் அதனைப் பாராளுமன்றத் தெரிவுக்குழுவிடம் முன்வைக்கட்டும் எனக்கூறும் அதே வேளை, எதிர்க்கட்சியினரின் விவாதத்திற்கான அழைப்பிற்கு தெரிவுக்குழு தீர்வுத்திட்டம் ஒன்றை பரிசீலிக்கும் போது அதுகுறித்து விவாதிப்பதற்கு முடியாது எனவும் காரணம் கூறித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றது.

விடுதலைப் புலிகள் தமது தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு சமர்ப்பிக்காது இருக்கலாம். ஆனால், பகிரங்கமாக உலகளாவிய ரீதியில் தமது நிலைப்பாட்டை உலகிற்கு வெளிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் சிறீலங்கா அரசாங்கமும் உண்மையிலேயே இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண விரும்பின் தமது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும். அவ்வாறு இல்லாமல் அரசாங்கம் பார்வையாளராக மட்டுமே இருக்க விம்பின் தெரிவுக்குழு உறுப்பினராக இருக்காமல் தனியாக பார்வையாளராக மட்டும் இருப்பதே நியாயமாகும். ஏனெனில் தெரிவுக்குழு ஒரு முடிவிற்கு வர அது சிலவேளை உதவலாம்.

இல்லாவிடில் "நாம் 'எல்லாம்' தரவிரும்புகிறோம். ஆனால் ஈழத்தையல்ல. 'எல்லாம்' தந்தால் ஈழத்துக்கு இடமில்லை. அந்தப்பிரச்சனையே தலையெடுக்காது." எனக்கூறும் ஜனாதிபதி பிரேமதாசா மனப்பூர்வமாகவே அதைக் கூறியிருப்பாரேயானால் ஈழம் தவிர்ந்த தமிழரின் ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்ற முன்வரவேண்டும். ■

# பொலநறுவை மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் வெற்றிகரத் தாக்குதல்

பொலநறுவை மாவட்டத்திலுள்ள 'தம்மின்ன' என்ற இடத்தில் அமைந்திருந்த மினிமுகாம் ஒன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது. நள்ளிரவு 12.40 முதல் சுமார் 12 நிமிடங்களுக்கு இம்மினிமுாகாமைத் தாக்கி, விடுதலைப் புலிகள் நிர்மூலமாக்கினர். பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலில் குறைந்தது 9 இராணுவத்தினர் உயிரிழந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. விடுதலைப் புலிகள் தரப்பில் இரு வீரவேங்கைகள் வீரச்சாவை எய்தினர்.

வடக்கு - கிழக்கு எல்லைக்குக் கிழக்கே மதுறு ஓயா நீர்த்தேக்கத்திற்கு அருகில் அமைந்துள்ள மதுறு ஓயா இராணுவ முகாமின் உபமுகாமாக இந்த தம்மின்ன முகாம் இருந்து வந்தது. மதுறு ஓயா இராணுவ முகாம், சிறீலங்கா இராணுவம் தனது படையினருக்கு பயிற்சி அளிக்கும் முகாம்களில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இத்தாக்குதல் புலிகஞ்க்கு கிழக்கிலுள்ள இராணுவ பலத்தை எடுத்துக் காட்டுகிறதென விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். ■

# சிறீலங்கா அரசின்மேல் நோர்வே அரசு அதிருப்தி.

மனித உரிமை மீறல் விடயம் சம்பந்தமாக, சிறீலங்கா அரசின் போக்கை நோர்வே அரசாங்கம் கண்டித்துள்ளது. நோர்வேயின் வெளியுறவு அமைச்சின் ராஜாங்க செயலாளர் ஜான் இக்லாண்ட், ஐக்கிய நாடுகள் சபை, மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவற்றின் பரிந்துரைகளை சிறீலங்கா அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டதாக கூறியுள்ளார். மனித உரிமைகள் மீறல் செயல்கள் குறித்து சிறீலங்கா அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகவும் அவர் கண்டனம் தெரிவித்துள்ளார். ஸ்கண்டி நேவிய நாடுகளுக்கான சிறீலங்காத் தூதுவர் நெவில் ஜயவீர அவர்களிடம் நோர்வே அரசாங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது. ■

# இந்திய நூல்களிற்கு தாராள இறக்குமதி அனுமதி

ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் மலின இலக்கியங்கள், வர்த்தக நோக்கான நூல்கள் தடையாக உள்ளன என குரல் எழுப்பப்பட்டது. இதில் உண்மை உண்டெனவும், இந்திய நூல்கள் வெறும் வர்த்தக நோக்கையே இலக்காக கொண்டு ஜனரஞ்சகத்தை பெறக்கூடிய வகையில் வெளியிடப்படுவதால், பாமரமக்கள் மயங்கிவிடுகின்றனர் எனவும் கருதப்பட்டது.

இதன் பின்னணியிலேயே இந்திய நூல்களிற்கு இறக்குமதிக் கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டது. இது ஈழத்தின் "சுயப்பிரக்ஞையான" நூல்களின் வளர்ச்சிக்கு உதவியது. இதனால் தரமான நூல்கள் சஞ்சிகைகள் ஈழத்தில் வளர்ச்சியுற்றன.

ஆனால், தற்பொழுது சிறிலங்கா அரசு மீண்டும் இந்திய நூல்களிற்கு தாராள இறக்குமதி அனுமதியை வழங்கியுள்ளது. இதனால் ஈழத்தின் சுயமான சிந்தனை ஓட்டங்களையுடைய இலக்கியங்கள் அழிக்கப்படும் என சிறிலங்கா அரசு எதிர்பார்க்கிறது.

இவ்வளவு காலமும் அதிக விலை கொடுத்து இந்தியப் புத்தகங்களை வாங்க வேண்டியிருந்த நிலைமாறி, ஈழத்து நூல்கள் சஞ்சிகைகளையும், சிறிலங்காவின் நூல்கள், சஞ்சிகைகளையும் விட, இந்திய புத்தகங்கள் மிக மலிவு விலையில் சந்தைப்படுத்தப்படும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் சாதாரண பாமர மக்கள் மலிவு விலையில், மலின இலக்கியங்களையும், வர்த்தக நோக்கான பத்திரிகைகளையும் படித்து சீரழியும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. ■

# புதுவருடத்துடன்..

பொதுமக்கள் காயமுற்றும் உள்ளனர். இந்த சுப்பர்சொனிக் விமானங்களை பயன்படுத்தும் தந்திரமானது பொதுமக்களை உளவியல் ரீதியாக பீதியடைய வைக்கும் நோக்கத்துடனேயே நடாத்தப்பட்டு வருகிறது. தமிழ் மக்களும் தனது அரசாங்கத்தின் கீழ்த்தான் உள்ளனர், எனச் சொல்லிக் கொள்ளும் சிறீலங்கா அரசு, இத்தகைய சுப்பர்சொனிக் தாக்குதல்களை நடத்துவது, சர்வதேச யுத்தச் சட்டப்படி யுத்தக் குற்றமாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் த்லைவர் அமைதிவழித்தீர்வு மேல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உள்ள அக்கறையைத் தெளி.வு படுத்திய பின்பு, அவ்அழைப்பையும் புறக்கணித்து, சிறீலங்கா அரசு இராணுவத்தீர்வில் இறங்குவது, சிங்கள பௌத்த பேரினவாதம் ஒருபோதும், நியாயமான தீர்வினை ஏற்ப டுத்தாது என்பதை உறுதிப்படுத்துகிறது. அத்துடன் எந்த சூழ்நிலையில் தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதோ, அந்த சூழ்நிலைகள், இன்றும் தொடர்ந்து கொண்டேயிருப்பதை வெளிப்படுத்தி நிற்கிறது. - பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தீர்வு காணப்போவதாக சர்வதேச சமூகத்தை ஏமாற்றி வந்த சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சுயரூபம் வெளிப்பட்டதும், அரசியல் தீர்வை ஏற்படுத்த தவறியதனால், சிறீலங்கா அரசாங்கம் ஈழப்போரை தேவையற்ற யுத்தம் எனக்கருதும் சிங்கள மக்களிடை செல்வாக்கு இழந்துவிட்டது என விமர்சிக்கும் சர்வ தேச விமர்சனத்தை மூடி மறைப்பதற்காக மாகாண சபைகளைக் கலைத்து தேர்தல் பரீட்சையில் இறங்கி உள்ளார். இத்தேர்தலில் வெற்றிபெறுவதற்கு, சிங்களபேரினவாத அலைக்கு அடிபணிய வேண்டிய நிலையிலிருக்கும் பிரேமதாசா தமிழர் தாயகத்தின் மீது யுத்தத்தை தொடங்க முயற்சிக்கிறார்.

### வடக்கு கிழக்கில் சிறீலங்காவின் இறைமை செயலிழப்பு

வடக்கு கிழக்கில் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், இப் பகுதிகளில் மாகாண சபை தேர்தலை நடத்த முடியாது என நளினி செனிவிரத்தின கூறியுள்ளார். - இக்கூற்றின் அடிப்படையில், வடக்கு கிழக்கில் மாகாண சபைத் தேர்தல் இல்லையென, சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. - இது வடக்கு கிழக்கில், சிறீலங்காவின், இறைமை செயலிழந்து விட்டதையும், வடக்கு கிழக்கில் புலிகளின் அரசு, அரசு நோக்கிய அரசாக (DEFACTO GOVERNMENT). இருப்புற்று (EXCIST) இருப்பதையும், உலகுக்கு தெளிவாக்கிவிட்டது. இதனால், செய்வது அறியாது திகைக்கும் சிறீலங்கா அரசாங்கம், தமிழர் தாயகத்தின் மீது புத்தாண்டு நேரத்தில், தனது முழுச் சக்தியையும் பயன்படுத்தி தாக்குவதற்கு முயற்சிக்கிறது. இதனை நியாயப்படுத்துவதற்காக, புலிகள், ஆனையிறவு பகுதிகளில் பெருமளவில் போராளிகளை நகர்த்துவதாகவும், முகாம்களை பாதுகாக்க தாம் முயற்சிப்பதாகவும், பொய் வதந்திகளை பரப்பி வருகிறது. சிங்கள புத்தாண்டு நேரத்தில், சிங்கள படையினரின் லீவுகள் அனைத்தையும் இரத்து செய்ததன் மூலம் சிங்களவர்-தமிழர் இடையான உறவில் மேலும் விரிசலை வளர்க்க, சிறீலங்கா அரசு முயற்சிக்கிறது.

### கிழக்கின் இராணுவத் தந்திரத்தில் மாற்றம்

கிழக்கு மாகாணத்தில், சிங்கள இராணுவத்தினர், புதிய தந்திரத்தைக், கையாண்டு வருகின்றனர். இராணுவ முகாமை விட்டு, - வெளியே ரோந்து செல்வதை சில வாரங்களாக நிறு த்தியுள்ளனர். பின்னர், தமக்கு இழப்புகள் கிழக்கில் இல்லை எனவும், விரைவில் கிழக்கு தமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் எனவும், பிரச்சாரம் செய்து வருகின்றனர். ஆனால் கிழக்கில் சிறிலங்கா அரசின் இறைமை செயலற்றுப் போனதற்கு உதாரணமாக அங்கும், மாகாணசபைத் தேர்தல் நடைபெற வில்லை. இது கிழக்கு சிறீலங்காவின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பது பொய் என்பதை தெளிவு படுத்துகிறது. ■

# ஆழமான ....

மனித ஆளுமை பாலியல் வேறுபாட்டிற்கு அப்பாலானது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பால் மனிதம் இருக்கின்றது. அது மனிதப் பிறவிகளுக்கு பொதுவானது. இந்த மனிதத்தின் ஆற்றல்களை உடற்கூறு நிர்ணயிப்பதல்ல.

பெண்ணிடமும் மனிதம் இருக்கிறது. அதன் அற்புதமான ஆற்றல்களையும், அலாதியான பண்புகளையும் பாலியல் அளவுகோலால் நிர்ணயிக்க முடியாது. எதையும் பெண்ணால் சாதித்து விடமுடியும் என்பதற்கு, எமது போராட்டம் ஓர் உன்னத உதாரணமாகத் திகழ்கின்றது.

பாலியல் வேறுபாட்டிற்குப் புறம்பாக, ஆண்மைக்கும் பெண்மைக்கும் அப்பாலான, இந்த மனிதத்தை இனம் கண்டு கௌரவிக்குமாறு பெண்ணினம் ஆணினத்திடம் அன்புக் கரம் நீட்டுகின்றது. ஆழமான புரிந்துணர்வுடன் ஆணினம் இந்த அன்புக்கரத்தைப் பற்றிக் கொள்ளும் பொழுதுதான் ஆண்-பெண் சமத்துவம் சாத்தியமாகும்.

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு விடுதப்புலிகளின் மகளிர் அமைப்பு இன்று நடத்தும் தமிழீழப் பெண்கள் எழுச்சி வைபவத்திற்கு, எனது நல்லாசியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

**வவுனியா - மன்னார் எல்லையில்**

# சிங்களக் குடியேற்றத்தை விரிவாக்க 10 கோடி ரூபா ஒதுக்கீடு

மன்னார் - வவுனியா மாவட்ட எல்லைப்புற பகுதியாகிய தந்திரிமலைப் பிராந்தியத்தை அபிவிருத்தி செய்வதற்காக பத்துக் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிறீலங்கா ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஆரம்பிக்கப்பட இருக்கும் ஒருங்கிணைந்த திட்டமொன்று விரைவில் இப்பகுதியில் செயற்படவுள்ளது. புனர்வாழ்வு, புனர்நிர்மாண சமூக நல அபிவிருத்தி அமைச்சின் நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டிருக்கும் இந்நிதியைப் பயன்படுத்தி விவசாயம், கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், நெடுஞ்சாலை அபிவிருத்தி என்பவற்றிற்கான வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 8200 சிங்களவர்கள் பெரும் பயன் பெறுவார்கள் என்று தெரிகிறது.

இதற்கான திட்டம் அண்மையில் அநுராதபுரம் கச்சேரியில் நடைபெற்ற மாநாடொன்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் தந்திரியமலைப் பகுதியின் பிரதம குரு சங்கைக்குரிய சந்திரரட்ண தேரோ உட்பட புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா துறைமுக கப்பல்துறை அமைச்சின் செயலாளர் போன்றோர் சமூகம் அளித்திருந்தனர்.

மன்னார் - வவுனியா மாவட்டங்களின் எல்லையோரமாக அமைந்திருக்கும் தந்திரியமலைப் பகுதியில் இருந்து அண்மையில் சிங்களக்குடியேற்ற வாசிகள் வெளியேற ஆரம்பித்திருந்தது தெரிந்ததே. ■

## தமிழீழத்தின் தென்பகுதியை முழுமையாக ஆக்கிரமித்து

# தாயகக் கோரிக்கையைச் சிதைக்க சிறீலங்கா அரசு பெருமுயற்சி

மட்டக்களப்பு - அம்பாறை - திருகோணமலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய தென் தமிழீழத்தை முற்றுமுழுதான இராணுவ ஆக்கிரமிப்புக்குள் கொண்டுவரும் முயற்சிகளில், சிங்கள அரசு இறங்கியுள்ளது.

இப்பகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் எல்லாம் பல இராணுவ முகாம்களை நிறுவியும், ஆட்பற்றாக் குறையைத் தீர்க்க பொலீஸ் படையைப் பயன்படுத்தியும், தென் தமிழீழத்தை படையினரின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர சிறிலங்கா அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றது.

பாரிய இராணுவ நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் தென் தமிழீழ நிலப்பரப்பிலிருந்து புலிகளை முற்றுமுழுதாக விரட்டி, பின் அங்கே பெருமளவில் சிங்களவர்களைக் குடியமர்த்திக் கிழக்கைச் சிங்கள மயமாக்கி, தமிழீழ தேசியத்தின் முதுகெலும்பான தாயகக் கோட்பாட்டைச் சிதைப்பதுதான், இப்படை நடவடிக்கைகளுக்கான அரசியல் நோக்கம் ஆகும்.

தென் தமிழீழத்தில் கடந்த 32 மாதங்களாக நடைபெற்றுவரும் (ஈழப் போர்-இரண்டு) தமிழ் இன அழிப்பு முயற்சியில், ஏறக்குறைய 8,000 தமிழர்கள் கொல்லப்பட்டு விட்டனர். 80 சதவீதமான தமிழர்கள் புலம் பெயர்ந்து அகதிகள் முகாம்களிலும், காடுகளிலும், மற்றும் பாதுகாப்பான இடங்களிலும் வாழ்கின்றனர். இவர்களது பொருளாதார வாழ்வு, ஏறக்குறைய முற்றுமுழுதாகவே சிதைக்கப்பட்டு விட்டது. புலிகளுக்கு எதிரான போர் என்ற போர்வையில், தென் தமிழீழ மக்களது சொத்துக்கள் அழிக்கப்பட்டு, அவர்களது பொருளாதார முயற்சிகளும் நாசமாக்கப்பட்டுவிட்டன.

ஆனாலும் புலிகள் இயக்கத்தின் இராணுவச் செயற்பாடுகளை படையினரால் தடுக்க முடியவில்லை. மாறாக அவை அதிகரித்த அளவில் இடம்பெறுவதுடன் சிங்களப் படையின் மத்தியில் பாரிய உயிர் இழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றன. கடந்த போராண்டில் (1992) தென் தமிழீழத்தில் சிங்களப் படைகள் சந்தித்த பேரிழப்புக்களை சிங்களத் தளபதிகளே வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ளனர்.. அப்பாரிய இழப்புகளுக்கு ஆட்பற்றாக் குறையையும், ஆயுத பலக்குறைவுகளையும் படைத் தளபதிகள் பலர் காரணம் காட்டியிருந்தனர்.

ஆட்பற்றாக்குறையை நீக்கும் முகமாக, புதிதாக படைக்கு ஆட்சேர்க்கச் சிங்கள படைகள் எடுத்த முயற்சி வெற்றிபெறவில்லை. எனவே இப்போது பொலிசாரைப் பயன்படுத்தி இந்த ஆட்பற்றாக்குறையைத் தீர்க்க முனைந்துள்ளனர். சிறீலங்காவைப் பொறுத்தவரையில் சுமார் 30,000 ஆட்களைக் கொண்ட பொலிஸ்படை பெருமளவில் ஆயுதப் படையாகவே செயற்பட்டு வருகின்றது.

1990 ஆம் ஆண்டு யூன் மாதம் சிங்களப் படையுடன் சண்டை தொடங்கும் போது தென் தமிழீழத்தில் இருந்த பொலிஸ் நிலையங்களை இராணுவ நிலையங்களாக மாற்றும் நோக்குடன் பொலிசாருக்கு மிக நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்ததும், சண்டை தொடங்கியவுடன் புலிவீரர்களினால் அவை கைப்பற்றப்பட்டிருந்ததும் ஏற்கனவே தெரிந்த செய்திகள்.

தென் தமிழீழத்தில் புலிகளால் ஊடுருவ முடியாத பாதுகாப்பான பகுதிகள் எனப் படையினர் கருதும் இடங்களில் சிங்களப் பொலிசாரை நிறுத்தி அந்த இடங்களில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரை எடுத்து ஒன்றாக்கி புலிகள் இயக்கத்தின் ஆதிக்கத்திலுள்ள பகுதிகள் மீது பாரிய இராணுவ நடவடிக்கைகளை செய்து, தென் தமிழீழத்திலிருந்து புலிகளைத் துடைத்தெறிவது அரசின் இப்போதைய திட்டமாகும்.

சிங்களப் பேரினவாதிகளைப் பொறுத்தவரை, இனப்பிரச்சினையின் ஆபத்தான அம்சமாக தமிழினத்தின் தாயகக் கோட்பாட்டைக் கருதுகின்றனர். தமிழரின் தாயக நிலப்பரப்பை வடக்கு, கிழக்கு என்று தனித்தனியாகப் பிரித்து, கிழக்கைச் சிங்கள மயமாக்கி தமிழினத்தின் தாயக பூமியை அபகரிக்க சிங்கள அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது.

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் பெரும்பகுதி நிலத்தையும், மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் கிராமங்களையும் அபகரித்து அங்கே சிங்களக் குடியேற்றங்களைச் செய்து, தென்தமிழீழத்தில் தமிழர்களின் வீதாசாரத்தைப் பெரிதும் குறைக்க அரசு முயன்றபடியுள்ளது.

அரசின் இந்த முயற்சிகளுக்கு குறுக்கே புலிகள் இயக்கம் உள்ளது. எனவேதான் கிழக்கிலிருந்து புலிகளை முழுமையாகத் துடைத்தெறிந்து, அதன்பின் எந்தவித எதிர்ப்புமின்றி கிழக்கைச் சிங்கள மயமாக்கி, வடக்கிலிருந்து நிரந்தரமாகப் பிரித்து, தமிழினத்தின் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க முயற்சி எடுக்கின்றது.

இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவே சிறிலங்கா அரசு தனது படைப்பலத்தை ஒருங்கு திரட்டி தென் தமிழீழம் மீது பிரயோகிக்க முடிவெடுத்துள்ளது. ■

**நன்றி**
**விடுதலைப்புலிகள்**
**தமிழீழம்**

## பூசாவில் சாகும்வரை உண்ணாவிரதம்

சிறீலங்கா அரசாங்கத்தின் பூஸா முகாமில், பல வருடங்களாக வழக்கு ஏதும் இன்றி, அடைத்து வைக்கப்பட்டிருக்கும், விசாரணைக் கைதிகள், 202 பேர் தம்மை பிணையிலாவது, வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும், எனக்கோரி பங்குனி 28 ம் திகதி முதல் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இவர்களைச் சென்று பார்ப்பதற்குக் கூட பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் அனுமதியைப் பெற வேண்டும் என காணாமல் போனவர்கள் குறித்து விசாரணை நடத்தும் ஆணைக்குழுவின் தலைவரான டி. பி. ஜயலத் அறிவித்துள்ளார். பூஸா முகாமில் உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளுக்கு ஆதரவு தெரிவித்து, சிறீ லங்காவின் மற்றைய சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளும், உண்ணாவிரதங்கள் மேற்கொண்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடைசியாக கிடைத்த செய்திகளின் படி, பூஸா முகாமில் உள்ள அனைத்துக் கைதிகளும் (482 பேர்), உண்ணாவிரதத்தில் இறங்கியுள்ளனரெனத் தெரியவருகிறது. கைதிகளின் நலன் வேண்டி பொதுமக்கள் ஆலயங்களில் விசேட வழிபாடுகள் நடத்தி வருகின்றனர். மனித உரிமை அமைப்புக் கள் பலவும் கைதிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றி உண்ணா விரதத்தை முடிவுக்கு கொண்டுவருமாறு சிறீலங்கா அரசை கோரியுள்ளன.

தங்களது கோரிக்கைகள் தொடர்பாக, அரசாங்க பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர், தெளிவான உறுதிமொழி ஒன்றை அளிக்கும் வரை, தமது உண்ணாவிரதம் தொடரும் எனக் கைதிகள் பத்திரிகைகளுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர். தடுப்பு முகாம் கைதிகள் நிலை குறித்து பரிசீலனை செய்வதற்கு, ஜயலத் ஆணைக் குழுவினர் மீண்டும் வருவதாயின், விடுதலைக்கான நடவடிக்கையுடன் வரவேண்டுமெனக் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

கடைசியாகக் கிடைத்த செய்தியின்படி கைதிகள் நீதிமன்ற விசாரணைக்குக் கொண்டு வரப்படுவர் அல்லது மூன்று நான்கு மாதங்களுள் விடுதலை செய்யப்படுவர் என, அரசாங்கம் உத்தரவாதம் அளித்ததன் அடிப்படையில் கைதிகள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளனர். ■

## பாதுகாப்பு வலயத்தில் குண்டு வீழ்ந்து வெடித்தது

சிறிலங்கா கடற்படையினர், மீனவர்கள் மீது ஏவிய பீரங்கிக் குண்டுகளில் சில, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்திற்கு உட்பட்ட பருத்தித்துறை இறங்குதுறைக் கடற்பகுதியில் விழுந்து வெடித்தன.

கட்டைக்காடு-வெற்றிலைக்கேணி பகுதியை நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்த 'வீரயா சூரயா' என்ற பாரிய கப்பலிலிருந்து கடல் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது பத்துக்கும் மேற்பட்ட பீரங்கிக் குண்டுகளையும், துப்பாக்கி ரவைகளையும் ஏவியதில் சில குண்டுகளும், ரவைகளும் பாதுகாப்பு வலையப் பகுதியில் விழுந்து வெடித்தன.

இச் சம்பவத்தை அடுத்து, இறங்குதுறையில் காணப்பட்ட தொழிலாளர்கள் பதறிய நிலையில் சிதறி ஓடினர். மற்றும் ஒரு சில மீனவர்களின் படகுகளுக்கு சிறுசிறு சேதம் ஏற்பட்டன. பல ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகள் வெட்டப்பட்டன. வெள்ளிக்கிழமையாக இருந்தமையால் குறைந்தளவு மீனவர்களே கடலில் காணப்பட்டதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ■

## விமானத்திற்கு அஞ்சி ஓடியவர் செல்லிற்கு காலை இழந்தார்

விமானத் தாக்குதலுக்கு அஞ்சி ஓடிய போது எறிகணை வீச்சுக்கு இலக்காகி காலை இழந்தேன் என நாகேஸ் என்பவர் ஈழநாதம் பத்திரிகை நிருபரிடம் தெரிவித்தார்.

எறிகணைத் தாக்குதலில் சிக்கி தனது இடது காலை இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் இவர் நடைபெற்ற சம்பவம் பற்றி விபரிக்கையில், காரைநகரிலிருந்து இராணுவ தாக்குதல்களால் இடம் பெயர்ந்து துரட்டிப்பனை அகதி முகாமில் தங்கியிருந்த நான் கரையோர சிறுவலை மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்தேன். சகல உடைமைகளையும் இழந்து மிகவும் வறுமை நிலையில் இருந்ததால் பலரின் உதவியுடன் இத்தொழிலை மீண்டும் ஆரம்பித்து பொன்னாலைப் பகுதி கொத்ததுறை எனுமிடத்தில் கரையோரமாக மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, பொழுது விடியும் நேரம் திடீரென இரண்டு விமானங்கள் வந்து திருவடி நிலைப்பகுதியில் குண்டுகளை வீசின. இதனால் அச்சமடைந்த நான் வலையையும் கைவிட்டு கரையை நோக்கி ஓடிவந்தபோது, எனக்கு மிக சமீபமாக எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததும் நான் தூக்கி வீசப்பட்டேன். துடிதுடித்து எழ முயற்சித்தபோதும் என்னால் எழ முடியவில்லை. தலையை நிமிர்த்திப் பார்த்தபோது இடது கால் முழங்காலுக்குக்கீழ் சிதைந்து இரத்தம் பாய்ந்தபடி இருந்தது. வலதுகாலும் அதே போலவே இருந்தது. உடம்பின் பல பகுதிகளாலும் இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

இதனால் தலையை நிமிர்த்தி சற்று தூரத்தில் கரையோரமாக நின்ற உறவினரை அழைத்தேன். அவர்கள் என்னைத் தூக்கி வந்து தரையில் வளர்த்தினர். பின்னர் வண்டில் ஒன்றைப் பிடித்து அதில் ஏற்றி யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்தனர். எனது இடது கால் முழங்காலுடன் அகற்றப்பட்டு விட்டது என்றார் வேதனையுடன். ■

## தமிழீழப் பெண்களின் மாபெரும் எழுச்சி விழா

மார்ச் 8ம் திகதி அன்று, அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு, பிரமாண்டமான ஓர் எழுச்சி விழா யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பினரால் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்ட, இந்த மாபெரும் பேரணியும், எழுச்சி விழாவும் பெண்கள் நிலைப்பாட்டில் இந்த மண்ணில் பெரியதொரு சமூக மாற்றம் நிகழ்ந்து கொண்டிருப்பதைக் காட்டி நிற்கின்றன.

காலங்காலமாக ஒடுங்கிக் கிடந்து பழைமைவாத மூட நம்பிக்கைக்குள் மூழ்கிப் போய் இருந்த தமிழீழப் பெண்ணினம், இன்று விழிப்புற்று -புதியதொரு வேகம் கொண்டெழுந்து -எழுச்சி பெறுகின்ற வரலாற்று மாற்றம் நிகழ்வதை, அன்றைய நிகழ்வு துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.

பல்லாயிரக்கணக்கில் பெண்கள் அணிதிரண்டு -பெண்களின் மேம்பாடடையாத நிலையினைச் சித்தரிக்கும் ஊர்திகளுடன் -நீண்ட பேரணியாக வந்து, யாழ் பல்கலைக்கழக பெருந்திடலில் பெருந்திரளாகக் குவிந்து, இந்த எழுச்சி விழாவைக் கொண்டாடினர்.

இந்த எழுச்சி விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக எமது பெண்கள் படையணிகளினதும், தமிழீழ காவல்துறையின் பெண்கள் பிரிவினதும், பாடசாலை மாணவிகளினதும் அணிநடை நிகழ்வு இடம்பெற்றது. இவ்வணி நடை மரியாதையை, தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் படைப்பிரிவின் சிறப்புத்தளபதி ஜெனா அவர்கள் ஏற்றுக் கொண்டார். அவருடன் மகளிர் படைத் தளபதி விதுசா, மகளிர் படை துணைத் தளபதி ஜெனி, கடற்புலிகளின் மகளிர் படைத் தளபதி நளாயினி, மகளிர் அமைப்பின் - அரசியற் பிரிவு பொறுப்பாளர் ஜெயா ஆகியோரும் அணிநடை மரியாதை ஏற்பு நிகழ்வில் பங்கேற்றனர்.

இதேபோன்ற எழுச்சி விழாக்கள் வன்னி, முல்லை, மன்னார் மாவட்டங்களிலும் நடாத்தப்பட்டன. ■

# போராளிப் போராளன்!



தமிழன் ஓட ஓட அகதி
நின்று விட்டால் அவதி
பிடி பட்டால் கைதி
விசாரணையில் பயங்கரவாதி
வாழ்க்கையே பெரும் கனதி
இதனால் -
களைந்தான் கனவுகளை
துறந்தான் பாசங்களை

விரும்பினான் தாயகப்போரை
அணைத்தான் ஆயுதத்தை
பதித்தான் சுவடுகளை
போர்க்களம் நோக்கி !
உதிர்ந்தாலும் மீண்டும்
மலர்வான்
சிவப்பான மண்ணில் !

■ செல்வி தமயந்தி கணபதிப்பிள்ளை

பருத்தித்துறை

→→→ →→→

U.T.O
211 KATHERINE RD, LONDON E6 1BU, UK
Tel / Fax : 081-470 8593

T.C.G
P.O.BOX 340251
5270 GUMMERSBACH - 34
GERMANY

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
T: 435 81142 F: 435 81191

W.T.C.C
BEDER Str - 101, 8002 ZURICH
SWITZERLAND
T/F : 01/2810852, 077/816609

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
T: 03-457 6347, F:03-5618224

T.C.C
P.O.BOX 1699 VIKA
0110 OSLO - 1, NORWAY
T: 02-191260 F: 02-190114

L.T.T.E
P.O.BOX47, 7600 STRUER
DENMARK
Tel / Fax : 97-841231

T.C.C
Via MARIANO STABILE - 34
90139 PALERMO, ITALY
Tel / Fax: 091-611 3178